விலை : 30.00
பக்கங்கள் : 32

Registered as a Newspaper in Srilanka

Viber 076 636 3378

வாரமலர்

# வலம்புரி

சங்குநாதம்

நாதம் 184

வள்ளுவர் ஆண்டு 2049 23.09.2018 தொலைபேசி : 021 222 3378


## தமிழே முழங்கு



## சிறைக்கதவு திறக்குமா?

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு



## சட்டம் என்ற பேரில பழிவாங்கல் நடவடிக்கையில் ஈடுபடலாமோ

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர். இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர். தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் ,எழுந்தார்.

தியாகி திலீபனுக்கு அகவணக்கம் செலுத்துவோம் என்றுகூற, மீண்டும் அனைவரும் எழுந்து நின்று அகவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

எங்கட திலீபனின் தியாகம் ஒப்பற்றது. அதே வேளை தியாகி திலீபனின்ர நினைவேந்தலைச் செய்வதன்மூலம் எவரும் அரசியல் இலாபம் தேடவும் கூடாது. விதானையார் விசுவலிங்கம் கூறினார்.

**மூப்பர்:** உண்மைதான். விடுதலைப்புலிகளின் முன்னாள் போராளி காக்காண்ணை விடுத்த ஒரு அறிக்கையை வாசித்தனான். அதில அவர் சொல்லியிருந்த விடயங்கள் மிகவும் முக்கியமானவை.

**பண்டிதர்:** மாவீரர்களையும் தியாகி திலீபனையும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலையும் செய்வதற்கென தனியான ஒரு நினைவுக்குழு இருக்குமாக இருந்தால் ஒரு கரைச்சலும் வராது.

இல்லையெண்டால் நான் செய்யிறன், நீ செய்யிறன் என்று ஒரே குழப்பமாகத்தான் இருக்கும்.

**விதானையார்:** முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில நடந்த சிக்கல்களும் இதுதானே! ஆகையால சகல அமைப்புக்களினதும் பிரதிநிதிகள் அடங்கிய நினைவுக்குழு ஒன்றை உருவாக்குவதுதான் இவற்றுக்கான ஒரே தீர்வாகும்.

**சாத்திரியார்:** அப்ப இந்த நினைவுக்குழுவை அமைக்கிறது யாராம்.

**வாத்தியார்:** என்னைப் பொறுத்தவரையில தமிழ் மக்களின்ர இயக்கமாக இருக்கிற தமிழ் மக்கள் பேரவைதான் இதனைச் செய்யிறது நல்லது.

**பண்டிதர்:** நினைவுக் குழுவை அமைப்பது தொடர்பில ஒரு பொது அறிவித்தலை விடுத்து எந்தெந்த அமைப்புக்களின் பிரதிநிதிகளை நினைவுக் குழுவில இணைக்கிறது என்ற விபரங்களையெல்லாம் தீர்மானித்துக்கொண்டு அவர்கள் அனைவரும் அடங்கிய தான நினைவுக்குழுவை எல்லோருடைய சம்மதத்துடனும் உருவாக்க வேண்டும்.

**சாத்திரியார்:** தமிழ் மக்கள் பேரவையின்ர உப குழுக்களில இந்தக் குழுவும் ஒன்று என்பதாக இருக்கிறது நல்லதுதானே.

**கங்காணி:** இதுகளை முன்னெடுத்தாலும் அதுக்குமல்லோ சட்ட நடவடிக்கை எடுப்பினம்

**சாத்திரியார்:** சொன்னாப் போல அதுவும் உண்மைதான். இப்ப தமிழரசுக் கட்சியின்ர ஒரே வேலை சட்ட நடவடிக்கை என்பதாகத் தானே இருக்குது.

கொஞ்சம் சட்டம் தெரியும் என்பதால எல்லாரையும் வெருட்டலாம் எண்டு நினைச்சால் அதற்கான தமிழ் மக்களின்ர பதில் வேறு விதமாகத்தான் இருக்கும்.

**விதானையார்:** அது சரி எங்கட முதலமைச்சருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுத்தவர்கள் பிறகு சமரசம் செய்ய முற்பட்டவியளல்லோ. என்ன நடந்தது.

**பண்டிதர்:** நீதிமன்றத்துக்கு வந்திட்டம் பிறகென்ன நீதிமன்றத்தின்ர முடிவை ஏற்றுக்கொள்ளுறது தானே ஒழுங்கு என்று முதலமைச்சர் சொல்லிப்போட்டார்.

**மூப்பர்:** அட சங்கதி அப்படியோ.

**விதானையார்:** முதலமைச்சர் என்ன கொழும்பில வீட்டுத்தோட்டம் செய்து கொண்டிருந்தவரோ. அவரும் இலங்கையின்ர உயர் நீதிமன்றில நீதியரசராக இருந்தவர் தானே. அவருக்கும் சட்டம் நன்கு தெரியும்.

**வாத்தியார்:** அதில்லப் பாருங்கோ. தமிழரசுக் கட்சியில இருக்கிற சிலரை சட்டத்தால பயமுறுத்தின பழக்கம் முதலமைச்சர் விடயத்திலும் பிரயோகிக்கப்பட்டிருக்குது.

பிழையெண்டால் அது யார் விட்டாலும் பிழையெண்டு நெஞ்சுக்கு நீதியாகச் சொல்லுற எங்கட முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஐயாவிட்டயும் காட்ட வெளிக்கிட்டால் அவர் விடுவாரோ.

**கங்காணி:** சட்ட நடவடிக்கை எண்டு சொல்லுறதும் நீதிமன்றுக்கு வரவழைக்கிறதும் பிறகு அங்க வைத்து செற்றில்மென்ற் எண்டால் எல்லாரும் ஓமாமோ.

நீதிமன்றிற்குப் போகக் கூடாது. போனால் நீதிமன்றத்தின்ர தீர்ப்பை ஏற்றுக்கொள்ளுறதுதான் நியாயத்தர்களுக்கு அழகு.

**வாத்தியார்:** இப்ப இலங்கைத் தமிழரசுக்கட்சி தனக்கு எதிராக யார் செயற்பாட்டாலும் அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை என்ற பேரில பழி தீர்க்கிற நடவடிக்கையில ஈடுபட்டிருக்கு. இது பற்றித்தான் எங்கட சனங்கள் ஒரே கதை. அதிலும் தமிழரசுக் கட்சியின்ர முக்கியஸ்தரும் சட்டத் துறை சார்ந்தவருமான ஒருத்தர் இளம் அரசியல்வாதிகளுக்குப் பிழையான ஆலோசனை வழங்கி சட்ட நடவடிக்கை என்ற வலைக்குள்ள அவர்களை விழுத்திப் போடுவதாகவும் இதால தமிழரசுக் கட்சியில கொஞ்சம் விசுவாசமாக இருந்தவர்களுக் கும் கட்சி மீது வெறுப்பு ஏற்பட்டிருக்கிறதாகவும் பரவலாகக் கதைக்கப்படுகுது.

**கங்காணி:** உண்மை தான். வலம்புரிப் பத்திரிகையை நசுக்கிற முயற்சியிலும் சிலர் ஈடுபட்டிருக்கிறதாகக் கேள்வி. பாவம் அந்த வடக்கு மாகாண சபை உறுப்பினர்.

சொந்தக் காலில நிற்கத் தெரியாமல் இப்ப வலம்புரியை பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்குள்ள கொண்டு வந்து வலம்புரியின்ர ஆசிரியருக்குச் சிறைத்தண்டனை பெற்றுக் கொடுக்கிற முயற்சியில ஈடுபடுகிறாராம்.

**விதானையார்:** மக்கள் ஆதரவு சரிந்து கொண்டு போற நேரத்தில இப்படியான காரியங்களில குறுக்கால போன புத்தி இழுத்துச் செல்லும். நீதிமன்றம் எல்லாருக்கும்தானே.

**சாத்திரியார்:** அது சரி இந்தப் பண்ணைக் கடல் பக்கத்தில, பூப்புனித நீராட்டுவிழா நடந்த பெண்பிள்ளைகளை வைத்துப் படமெடுக்கினமல்லோ. இது என்ன கூத்து.

**பண்டிதர்:** அந்த நாசத்தையேன் கேட்கிறியள். ஒரு சின்னப் பெண் பிள்ளை வித்தியாசமான உடுப்புகள் உடுத்திருக்குது. மூன்று நான்கு பெடியள் கமராவோட அந்தப் பிள்ளையை பண்ணை வீதியில நடக்கவும் ஓடவும் சொல்லிப் போட்டு பின்னாலும் முன்னாலும் அவர்கள் கமராவோட ஓடித்திரியினம். கேட்டால் மிக்சிங்காம்.

**வாத்தியார்:** இந்தக் கோதாரி வேலை ஒண்டும் வேண்டாம் எண்டு துணிவோட சொல்லுறதுக்குத் தாய் தகப்பனால முடியல்ல எண்டால் எங்கட கமராக்காரப் பெடியள்தான் எல்லாத்தையும் தீர்மானிப்பார்கள்.

இப்படி வாத்தியார்கூற அதனை ஆமோதிப்பது போல ஆலடிப்பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள
நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 புரட்டாதி 07 ஞாயிற்றுக்கிழமை (23.09.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 278

# தியாக தீபம் திலீபனின் நினைவு அனுஷ்டிப்பை தடுக்க பொலிஸார் தீவிரம்

## தடையுத்தரவு கோரி நீதிமன்றில் மனு

(யாழ்ப்பாணம்) இலங்கையில் தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பின் உறுப்பினரான தியாகி திலீபனை நல்லூரில் அமைந்துள்ள நினைவிடத்தில் நினைவுகூருவதை தடைசெய்யும் கட்டளையை வழங்குமாறு யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் யாழ்ப்பாண பொலிஸார் விண்ணப்பம் செய்துள்ளார்.
(09-ம் பக்கம் பார்க்க...)

## வரலாற்று சிறப்புமிக்க வல்லிபுர ஆழ்வாருக்கு இன்று தேர்த்திருவிழா



10

## மதவாச்சி பகுதியில் யானை தாக்கி இளைஞன் பலி

(வவுனியா)

யாழ்ப்பாணம் - கண்டி பிரதான வீதியில் மதவாச்சி, இசன்பெஸ்ஸ கல பிரதேசத்தில் காட்டு யானை தாக்கியதில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மற்றொருவர் 10

## கொடிகாமம் பகுதியில் கத்திக்குத்தில் பெண் படுகாயம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி-கொடிகாமம் பகுதியில் நேற்று சனிக்கிழமை பி.ப 2 மணியளவில் வயிறு மற்றும் கையில் பலமான கத்திக்குத்து 10

## வீழ்ச்சியை தடுக்க முடியாவிடின் அரசை எம்மிடம் ஒப்படையுங்கள்

### மகிந்த எம்.பி கோரிக்கை

(கொழும்பு)

சிறந்த தலைமைத்துவத்தை வழங்க முடியவில்லை என்றால் அரசாங்கத்தில் இருந்து விலகி நாட்டை எங்களிடம் வழங்குமாறு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தற்போதைய பொருளாதார நிலைமை தொடர்பில் நேற்று சனிக்கிழமை கொழும்பு 09

## உணவு தவிர்ப்பில் ஈடுபட்ட அரசியல் கைதிகள் நால்வர் வைத்தியசாலையில்

(யாழ்ப்பாணம்)

அநுராதபுரம் சிறைச்சாலையில் உணவுதவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள கைதிகளில் நான்கு பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். ஏனையவர்களின் உடல்நிலை கடுமையாக பாதிக்கப்பட்ட நிலையில் உள்ளது.

அநுராதபுரம் சிறைச்சாலையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் 8 பேர் தமது விடு 09

## திலீபனின் நினைவு தினத்தை தடுக்க பொலிஸார் முயற்சி!

### யாழ். மாநகர ஆணையாளரும் நீதிமன்றுக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

தியாகி திலீபனின் நினைவு தின நிகழ்வு எதிர்வரும் 26 ஆம் திகதி நல்லூரில் முன்னெடுக்கவுள்ள நிலையில் நிகழ்வை தடுத்து நிறுத்தும் நோக்குடன் யாழ்ப்பாண பொலிஸார் முயற்சி மேற்கொண்டு வருவதாக அறிய முடிகிறது.

திலீபனின் நினைவு நாள் நிகழ்வை யாழ் மாநகர சபை நடத்துவதாக அறிவித்துள்ள நிலையில் திலீபனின் நினைவிடத்தை சூழவுள்ள பகுதிகளில் உள்ள பொதுமக்களிடம் நிகழ்வு ஏற்பாடுகள் தொடர்பாகவும் இந்த நிகழ்வால் பொதுமக்களுக்கு ஏதேனும் இடை 09

## பயங்கரவாத தடைச்சட்டம் நாட்டுக்கு தேவையானது!

### பிரதி அமைச்சர் அஜித் கோரிக்கை

(கொழும்பு)

அடிப்படைவாதிகளிடமிருந்து நாட்டின் சமாதானத்தை பாதுகாக்க வேண்டுமானால் பயங்கரவாதத் தடைச்சட்டம் நாட்டுக்கு தேவையானதாகவே காணப்படுகின்றது என அஜித் மன்னப்பெரும தெரிவித்துள்ளார். 09

## கைதிகளின் விடுதலையை கோரி வவுனியாவில் நேற்று கவனயீர்ப்பு




18

## தேர்தல் தொடர்பில் மக்களே முடிவெடுப்பர்; அந்நிய நாடுகள் அல்ல!

### மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

தேர்தல் தொடர்பில் இறுதித் தீர்மானத்தை கட்சி எடுக்கும், சில வேளைகளில் எனது சகோதரரும் களமிறங்கலாம் எனக் கூறினேன் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஆனால் எங்களை நிர்வகிப்பது வேறு நாடுகள் அல்ல. எமது நாடே நிர்வகிக்கின்றது. இலங்கையைத் தவிர்ந்த வேறு நாடுகள் மீது எமக்கு நம்பிக்கை இல்லை என கூறினார்.

மேலும் எங்களுக்கு இலங்கை மட்டுமே, ஏனைய நாடுகளை வளப்படுத்த வேண்டிய 09



SINGER®
Sale. Sale.. Sale...
விற்றுத் தீர்த்தல்
நம்பமுடியாத விலைக்கழிவு 50% வரை
உங்களுக்குத் தேவையான
◆ தொலைக்காட்சி
◆ குளிர்சாதனப்பெட்டி
◆ தளபாடங்கள்
◆ கையடக்க தொலைபேசி
◆ சலவை இயந்திரம்
◆ குளிரூட்டி
◆ சமையல் உபகரணங்கள்
◆ மற்றும் பல...
செப்டெம்பர் 24 25 26 27
தொடர்பு: 077 306 9417 | இடம்: பரமேஸ்வரா சந்தி, பலாலி வீதி, யாழ்ப்பாணம். (Kids Parkக்கு முன்பாக)





நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

உயர்தரப் பரீட்சையின் பின்னர்...
Diploma in Spoken English
Full / Part time
முழுநேரப் பாடநெறியானது திங்கள் தொடக்கம் வெள்ளி வரை தினமும் 4 மணித்தியாலங்கள் நடைபெறுவதுடன் பகுதிநேரப் பாடநெறியானது சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறும்.
கல்வி கற்க, தொழில் மற்றும் குடியேற
Now prepare for your Academic / General
IELTS
திருமணம் முடித்து Spouse விசாவில் UK செல்லுவதற்கு
IELTS A1 LIFE SKILLS
Spoken SINHALA
சனி மற்றும் ஞாயிறு 3.00 தொடக்கம் 5.00 மணிவரை
BRITISH COLLEGE
More information 0777-596148
23, Kachcheri nallur Rd, Jaffna. Tel - 021- 4927113
103, Mannar Rd, Vavuniya. Tel - 024 - 4930041
Main Street, Mullaithivu. Tel - 021-4927497
Station Rd, Mannar. Tel - 023-4924124

# திடீரென தீப்பற்றி எரிந்த ரயில்

## கொழும்பில் சம்பவம்

(கொழும்பு)

கொழும்பு -தெமட்டகொட ரயில் தரிப்பிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரண்டு ரயில் பெட்டிகளில் தீ விபத்து ஏற்பட்டது.

புனரமைப்புபணிகளுக்காக கொண்டு வரப்பட்டு தரித்து வைக்கப்பட்டிருந்த ரயில் பெட்டிகளிலேயே இந்த தீ விபத்து ஏற்பட்டுள்ளதாக அப்பகுதி பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நிலையில் குறித்த இடத்திற்கு விரைந்த தீயணைப்பு வீரர்கள் தீயைகட்டுபபாட்டுக்குள் கொண்டுவந்தனர். (ம-78)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

# நாட்டில் வாகனங்களின் பெறுமதியும் அதிகரிப்பு

## இறக்குமதியாளர் சங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

அமெரிக்க டொலர் ஒன்றுக்கு நிகரான ரூபாயின் பெறுமதி 170 ரூபாயாக உயர்வடைந்துள்ள நிலையில், புதிய வாகனம் ஒன்றின் விற்பனை விலையும் அதிகரித்துள்ளது.

அதன்படி வாகனம் ஒன்றின் விலை 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயாக அதிகரிப்பதாக வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் இந்திக்க சம்பத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், அதி சொகுசு வாகனங்களின் விலைகள் 6 லட்சம் ரூபாயிலிருந்து 8 லட்சம் ரூபா வரை அதிகரிப்பதாகவும் வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் இந்திக்க சம்பத் தெரிவித்துள்ளார்.

நாளுக்கு நாள் இடம்பெற்று வரும் டொலரின் விலை உயர்வு காரணமாகவே இந்த வாகன விலை அதிகரிப்பதாகவும் அவர் சுட்டிக் காட்டினார்.

அந்தவகையில் இலங்கை மத்திய வங்கியால் நேற்று முன்தினம் வெளியிடப்பட்ட நாணய மாற்று விகிதத்தின் படி, அமெரிக்க டொலரின் விற்பனை விலை ரூ.170. 65 ஆகும், அதே நேரத்தில் வாங்கும் விலை 166,78 ரூபாயாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# முழுமையான விசாரணைக்கு பிரதமர் அறிவுறுத்தல்

(கொழும்பு)


ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்த பாய ராஜபக்ஷ ஆகியோரை படுகொலை செய்ய சதித்திட்டம் தீட்டியமை தொடர்பிலான விசாரணைகள் குறித்து பிரதமர் ரணில்விக்கிரமசிங்க அறிக்கையினைக் கோரியுள்ளதுடன், தொலைபேசி அழைப்பு தொடர்பான விபரங்கள் அரச இரசாயன பகுப்பாய்வு திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மற்றும் முன்னாள் பாதுகாப்பு செயலாளரை படுகொலை செய்வதற்கு திட்டம் தீட்டப்பட்டதாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் முழுமையான விசாரணைகளை முன்னெடுக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

குறித்த விடயம் தொடர்பில் இதுவரைக் காலமும் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகள் தொடர்பான அறிக்கையினை உடனடியாக சமர்ப்பிக்குமாறு சட்ட ஒழுங்குகள் அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டாரவுக்கு பிரதமர் ரணில் விக்ரமசிங்க அறிவித்துள்ளார்.(ம-78)

CAR விற்பனைக்கு
TOYOTA AXIO
(hybrid 2015/dec model)
Pearl White colour
(Doctor used car,
Sale in Jaffna.)
Price:- Negotiable
T.p:- 077 796 8805

திருவண்ணை-கன்னாதிட்டி
அருள்மிகு காளியம்பாள் தேவஸ்தானம்
"விளம்பி வருஷம் 2018"
கேதார கௌரி விரதம்
விரதாரம்பம் –19.10.2018
விரதபூர்த்தி –07.11.2018
நாளை 24.09.2018 திங்கட்கிழமை முதல் விரதகாரர்கள் தங்கள் பெயர்களை பதிவு செய்து சிவசக்தி ஐக்ய ரூபினியாகிய அம்பிகையின் பேரருட் பெருங்கருணையை பெற்றின்புறும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.
–தேவஸ்தானம்.



BOC Travels (Pvt) Ltd
SUBSIDIARY OF BANK OF CEYLON
விசேட முறையில் வடிவமைக்கப்பட்ட
தென் இந்திய திருத்தல யாத்திரை
இது ஓர் இலங்கை வங்கியின் துணை நிறுவனம்
• 16 பேர் கொண்ட குழுக்கள்
• தங்குமிட, உணவு வசதி (10 நாட்கள்)
• விசா பயணச்சீட்டு ஒழுங்குகள்
• அனைத்து போக்குவரத்து ஒழுங்குகள்
(யாழ்ப்பாணம் - கொழும்பு - யாழ்ப்பாணம் உட்பட)
பிரயாண திகதி ஐப்பசி மாதம் 19ஆம் திகதி முதல்
நம்பகரம், பாதுகாப்பு, உத்தரவாதம்
(நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
தொடர்புகளுக்கு : இலங்கை வங்கி, (மேற்தரக் கிளை)
1ம் மாடி, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
021 222 4575 - 76 / 070 384 9335 / 070 395 1794

# மண்டைதீவு கடையிற் சுவாமிகள் குருபூசை

(மண்டைதீவு)

மண்டைதீவ தவத்திருகடையிற் சுவாமிகளின் 127 வது குருபூசையானது சுவாமிகள் வாழ்ந்த மண்டைதீவு மண்ணில் அமைந்துள்ள நினைவாலயத்தில் நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளதுடன் நண்பகல் 12 மணிக்கு அபிஷேக ஆராதனைகளும் அதனைத் தொடர்ந்து அன்னதானமும் நடைபெறும். (ம-78)

உடனடி வேலைவாய்ப்பு
யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் Leading Pest Control & Maketing கம்பனிக்கு பின்வரும் பணியாளர்கள் உடனடித் தேவை.
Seles Executives
• Minimum 01 year Experience in FMCG (with English Fluency)
• Salary+Commissions+Company maintained bike
Helpers
• 35 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்
• ஆகக் குறைந்த கல்வி தகைமை O/L
தங்களது சுயவிபரக்கோவையை (CV) hrtermite@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு அல்லது Termite.com (Pvt) Ltd, இல.06, புகையிரத லேன், சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.
தொடர்புகளிற்கு :- 076 315 6802, 021 493 0011

உமாமகேஸ்வரவிரத அறிவித்தல்
2017ல் என்னால் கரவெட்டி கிழக்கு வீரபத்திரகாளி கோவிலில் ஆரம்பிக்கப்பட்ட உமாமகேஸ்வர விரதம் பக்த அடியார்களின் வேண்டுகோட்படி 24-09-2018 திங்கட்கிழமை கரவெட்டி கிழக்கு பழம்பத்திரகாளி கோவிலில் காலை 9 மணியளவில் அனுஷ்டிக்கப்படும் என்பதை தெரிவிக்கின்றேன்.
சிவஸ்ரீ க.சோமசுந்தரக் குருக்கள்

# வலிகாமம் மேற்கு பிரதேசத்தில் தமிழ் மொழிக்கு முன்னுரிமை

## பிரதேச சபையில் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட இடங்களில் தமிழ் மொழிக்கு முதன்மை வழங்கப்பட வேண்டும் என வலி.மேற்கு பிரதேச சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பிரதேச சபையின் அமர்வு கடந்த 17 ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெற்ற போது, உறுப்பினர் ந.பொன்ராசா கொண்டுவந்த மேற்படி பிரேரணை அனைத்து உறுப்பினர்களின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது.

தமிழினத்தின் இருப்பை இல்லாதொழிக்கும் நோக்கத்துடன் தமிழர் தாயகப் பிரதேசத்தில் தமிழ் மொழிக்கான முதன்மை நிலை திட்டமிட்டு இல்லாமல் செய்யப்பட்டு வருகின்றது

தமிழ்எமது மொழிசைவம் எமது வழி என வாழ்ந்த தமிழர் பரம்பரை இன்று இந்த இரண்டையும் இழக்கும் நிலைக்குச் சென்று கொண்டிருப்பது வேதனையானது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் காலத்தில், வடக்கு - கிழக்கு தமிழர் தாயகத்தில் தமிழ் மொழிக்கு அதி முக்கியத்துவம் வழங்கப்பட்டது. எனினும், 2009 ஆம் ஆண்டுக்கு பின்னர் அந்த நிலை சடுதியாக மாற்றம் பெற்றிருக்கின்றது. எங்கு பார்க்கினும் ஆங்கில மொழியின் ஆதிக்கம் அரங்கேறிக் கொண்டிருக்கின்றது.

பெரும்பாலான அலுவலகங்களில் அதிகாரிகளின் பெயர்கள், அவர்களின் அலுவலகங்கள் போன்றன ஆங்கில மொழியிலேயே அடையாளப்படுத்தப்பட்டிருக்கின்றன. வர்த்தக நிலையங்களில் ஆங்கிலப் பெயர்களுடன் விளம்பரப் பலகைகள் காட்சிப்படுத்தப்படுகின்றன. போக்குவரத்து பேருந்துகளில் கூட ஆங்கிலத்திற்கே முன்னுரிமை அளிக்கப்பட்டிருக்கின்றது.

கல்வியும் மொழியும் பண்பாடும் நிலமும் தமிழ் இனக் கட்டமைப்பைத் தாங்கி நிற்கும் தூண்களாக இருக்கின்றன. தமிழினத்தின் இந்த அடையாளங்களை இல்லாதொழிக்கும் பணி மிகத் தீவிரமாக நடைபெற்று வருகின்றது. பாடப் புத்தகங்களில் தமிழர்களின் வரலாறு திட்டமிட்டுப் புறக்கணிக்கப்படுகின்றது. தமிழர் தாயகத்தில் தமிழ் மொழி இரண்டாம் தர மொழியாகப் பார்க்கப்படுகின்றது. தமிழ்ப் பண்பாடு சீரழிக்கப்படுகின்றது. எமது நிலத்தில் திட்டமிட்ட ரீதியில் குடியேற்றங்கள் இடம்பெற்று வருகின்றன. இவ்வாறான நிலையில், நாம் அமைதியாக இருந்தால் தமிழ் இனம் எதிர்காலத்தில் தனது இருப்பை நிலைநாட்டுவதற்கு பெரும் பிரயத்தனங்களை மேற்கொள்ளவேண்டி ஏற்படும். எனவே, எமது இனத்துவ அடையாளங்களைப் பாதுகாப்பதற்கு முன்னுரிமை அளிக்கவேண்டும். தமிழர் தாயகத்தில், வலி. மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட இடங்களில் தமிழ் மொழிக்கு முதன்மை நிலை வழங்கப்பட வேண்டும். இங்குள்ள வர்த்தக நிலையங்கள், பொது நிறுவனங்களின் பெயர்ப் பலகைகள், விளம்பரப்பலகைகள் அனைத்தும் தமிழ் மொழிக்கு மாற்றப்பட வேண்டும். இது தொடர்பாக வியாபார நிறுவனங்களின், வர்த்த நிலைய உரிமையாளர்களுக்கு கடிதம் மூலம் அறிவித்தல் விடுக்க வேண்டும். எமது தமிழர்களின் இருப்பை பாதுகாப்பதற்காக இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றி நடைமுறைப்படுத்த வேண்டும் எனத் தெரிவித்தார். (இ-9)

## குளங்கள் குறித்து கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.முகாமையாளர் சம்மேளன (JMF) ஏற்பாட்டில் "யாழ். மாவட்டத்திலுள்ள குளங்கள் தூர்வாரலும் புனரமைத்தலும்" பற்றிய கலந்துரையாடல் நாளை 24 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் யூரோ மாநாட்டு மண்டபத்தில் இல. 17, விவசாயத்திணைக்களம், பருத்தித்துறை வீதி, நல்லூரில் நடைபெறும். (இ)

### வாள் வெட்டுக்குழுக்களின் அட்டகாசம் அதிகரிப்பு

# வைத்தியசாலையில் கண்காணிப்பு கமரா பொருத்துவதற்கு அனுமதி

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு பத்து பாதுகாப்புக் கண்காணிப்புக் கமராக்கள் பொருத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் கடந்த காலங்களில் வாள் வெட்டுக் கும்பலின் அட்டகாசம், மதுப் பிரியர்களின் அட்டகாசம் என்பன இரவு வேளைகளில் இடம்பெற்று வந்தன. மூன்று மாத காலத்திற்கு முன்னர் அம்புலன்ஸ் இல்லை என்பதனை காரணம் காட்டி சில இளைஞர்கள் ஆதார வைத்தியசாலையின் சொத்திற்கு சேதம் விளைவித்தனர்.

இவ்வாறான சம்பவங்களின் காரணமாக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்குப் பாதுகாப்பு கமரா பொருத்தப்பட வேண்டும் என சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் பசுபதி அச்சுதன் மாகாண சுகாதாரத் திணைக்களத்திடம் தொடர்ச்சியாக கோரிக்கைகளை முன்வைத்தார்.

இதன் பயனாக வைத்தியசாலையின் பாதுகாப்பிற்காக முதற்கட்டமாக பத்து பாதுகாப்பு கமராக்கள் பொருத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் தினங்களில் அதற்கான பணிகள் இடம்பெறும் எனவும் தெரிவித்துள்ளனர்.

பாதுகாப்பு கமராக்களை பொருத்துவதன் மூலம் வைத்தியசாலை வளாகத்திற்குள் இடம்பெறுகின்ற சட்டவிரோத செயற்பாடுகள், இளைஞர் குழுக்களின் அட்டகாசம் போன்றவற்றை கட்டுப்படுத்துவதுடன், நாசகார வேலைகளில் ஈடுபடுபவர்களை இனங்கண்டு சட்டத்தின் முன் நிறுத்த உறு துணையாக இருக்கும் எனவும் தெரிவித்துள்ளனர். (இ-30)

## பனங்காய் விழுந்ததில் பெண்ணின் கை முறிந்தது!

(சாவகச்சேரி)

தென்மராட்சி-வரணிப் பகுதியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை வீதியால் நடந்து சென்ற பெண்ணின் மீது பனங்காய் விழுந்ததில் பெண்ணின் கையில் முறிவு ஏற்பட்டுள்ளது. பனங்காய் தலையில் உரசியபடி கையில் பலமாக விழுந்ததால் கை முறிவு ஏற்பட்டது. வரணியைச் சேர்ந்த 60 வயதான பெண்ணே கை முறிந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (இ-30)

## அரசகேசரிப் பிள்ளையார் தேர்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் கோவிலின் தேர்த்திருவிழா இன்று காலை இடம்பெறும்.

காலை 6 மணிக்கு இடம்பெறும் வசந்தமண்டப் பூசையைத் தொடர்ந்து காலை 9 மணிக்கு பஞ்சமுக விநாயகர், முருகன் ஆகியோரது தேர்கள் பவனி வரவுள்ளன. (இ-7)


வல்லிபுர ஆழ்வார் திருவிழாவையொட்டி


கமராக்கள் 25% விலைக்கழிவினும் மின்படலகள் 5% விலைக்கழிவினும் பொருத்திக்கொடுக்கப்படும்

2 வருட உத்தரவாதம் +
3 வருட பராமரிப்புடன்
பொருத்திக்கொடுக்கப்படும்

10 வருட (இரட்டை) உத்தரவாதம்
25 வருட (இரட்டை) பாவனை உத்தரவாதம்
+ 5 வருட பராமரிப்பு

கோயில் முன்வளாகத்தில்

மதுரம் அருந்தகத்துக்கு அருகாமையில் (கரும்புச்சாறு)




4 Cameras + DVR + Harddisk + PowerSupply 10Amp
BNCs + DCs + 50m 3c2v + Powercable
+ Installation + 3 AMC + 1 Page WebSite 5 Year

66,660/-
55,000/-

5 வருடத்தில் கட்டணமின்றிய மின் பாவனை
நீங்களும் மின் உற்பத்தியாளராகலாம்
மின்சாரசபையினால் அங்கீகரிக்கப்பட்டது

500 மேற்பட்ட இடங்களில் பொருத்தி வடக்கில் உங்களில் பலரின் நம்பிக்கையை பெற்றுள்ளோம்!

HIKVISION
AUTHORIZED GOLD
VALUE ADDED SOLUTION
PATNER

SST

சன்சக்தி ரேடர்ஸ் பிறைவேற் லிமிட்டட்
தகவல் தொழில்நுட்பம் & பாதுகாப்பு கருவிகள் வழங்குனர்
இல.: 651, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்
தொடர்புக்கு.: 0212217994/ 0775527099 முகநூல்: sunsakthy traders
இணையம்.: sunsakthy.com மின்னஞ்சல்.: info@sunsakthy.com

HIKVISION
AUTHORIZED GOLD
DEALER
PARTNER

# ஜடேஜா, ரோகித் ராஜ்யம்

## ○ இந்தியா ஹட்ரிக் வெற்றி ○ 173 ஓட்., சுருண்டது பங்களாதேஷ்

ஆசிய கிண்ணத் தொடரில் இந்தியா 'ஹட்ரிக்' வெற்றி பெற்றது. நேற்று முன்தினம் நடந்த 'சுப்பர் 4' போட்டியில் பங்களாதேஷை 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில்வீழ்த்தியது.'சுழல் ஜாலம் காட்டிய ஜடேஜா 4 விக்கெட்டுகள் சாய்த்தார். அணித்தலைவர் ரோகித் சர்மா அரைச்சதம் விளாசினார்.

ஆசிய கிண்ண கிரிக்கெட் தொடர் ஐக்கிய அரபு எமிரேட்ஷில் (யு.ஏ.இ.) நடக்கிறது. நேற்று முன்தினம் 'சுப்பர் 4' சுற்று போட்டிகள் தொடங்கின.

டுபாயில் நடந்த போட்டியில் இந்தியா - பங்களாதேஷ் அணிகள் மோதின. 9 சர்வதேச போட்டிகளுக்குப் பின் (4 ஒருநாள், 5 டெஸ்ட்), இந்திய அணிக்கு நேற்று அதிர்ஷ்டம் அடித்தது. நா்ணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ரோகித் சர்மா களத்தடுப்பை தேர்வு செய்தார். காயத்தால் விலகிய பாண்ட்யாவுக்குப் பதில் ஜடேஜா சேர்க்கப்பட்டார்.

**'வேகம்' நம்பிக்கை**

பங்களாதேசுக்கு லிட்டன் தாஸ், நஜ்முல் ஜோடி ஆரம்பம் கொடுக்க, இந்திய அணியின் 'வேகங்கள்' புவனேஷ்வர், பும்ரா போட்டுத் தாக்கினர். முதல் 3 ஓவர்களில் 2 ஓட்டங்கள் மட்டும் எடுத்தது பங்களாதேஷ். இந்நிலையில் லிட்டன் தாசை (7) புவனேஷ்வர் வெளியேற்ற, நஜ்முல்லை (7) பும்ரா திருப்பி அனுப்பினார்.

**ஜடேஜா கலக்கல்**

நீண்ட இடைவெளிக்குப் பின் ஒருநாள் அரங்கில் களமிறங்கிய ஜடேஜா முதல் 3 பந்துகளில் 11 ஓட்டங்கள் விட்டுக் கொடுத்தார். மனம் தளராத இவர், தனது ஓவரில் தொடர்ந்து இரு பவுண்டரி அடித்த 'சீனியர்' சகிப் அல் ஹசனை (17) அவுட்டாக்கினார். தொடர்ந்து அசத் திய ஜடேஜா 'சுழலில்' மொஹமட் மிதுன் (9), முஷ்பிகுர்(21) வீழ்ந் தனர். மகமதுல்லா (25), மொசாதெக் (12) நீடிக்கவில்லை.

**பும்ரா அபாரம்**

புவனேஷ்வர் ஓவரில் தொடர்ந்து இரு சிக்சர் அடித்த மொர்டசா (26) விரைவில் கிளம்பினார். பின்வரிசையில் வந்த மெகிடி (42), முஸ்தபிசுரை (3) பும்ரா அவுட்டாக்கினார்.

49.1 ஓவர்களில் பங்களாதேஷ் அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 173 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது.

பந்துவீச்சில் இந்தியா சார்பில் ஜடேஜா 4, பும்ரா, புவனேஷ்வர் தலா 3 விக்கெட்டுக்களைச் சாய்த்தனர்.

**தவான் விளாசல்**

எளிய இலக்கை விரட்டிய இந்திய அணிக்கு ஷிகர் தவான், ரோகித் சர்மா ஜோடி வலுவான ஆரம்பம் கொடுத்தது. மொர்டசா வீசிய முதல் ஓவரில் பவுண்டரி அடித்து ஓட்டக் கணக்கை ஆரம்பித்தார் ரோகித் சர்மா. தன் பங்கிற்கு மொர்டசா ஓவரில் இரண்டு பவுண்டரி விளாசிய தவான், முஸ்தபிசுர் பந்தில் சிக்சர் அடித்தார்.

**ரோகித் அரைச்சதம்**

முதல் விக்கெட்டுக்கு 61 ஓட்டங்கள் சேர்த்த நிலையில் தவான் (40) ஆட்டமிழந்தார். இதன்பின் பொறுப்பெடுத்துக் கொண்ட ரோகித், சகிப் பந்துகளை சிக்சர்களுக்கு விரட்டி, ஒருநாள் அரங்கில் 36 ஆவது அரைச்சதம் எட்டினார்.

அம்பதி ராயுடு (13) ஏமாற்ற, ரசிகர்களின் பெரும் வரவேற்புக்கு இடையே தோனி வந்தார். ரூபெல், மொர்டசா பந்துகளில் தோனி பவுண்டரிகள் அடிக்க இந்திய அணி வெற்றியை வேகமாக நெருங்கியது. இவர் 33 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

கடைசியில் ரோகித் ஒரு பவுண்டரி அடிக்க, இந்திய அணி 36.2 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து 174 ஓட்டங்கள் எடுத்தது. ஆசிய கிண்ணத் தொடரில் ஹொங் கொங், பாகிஸ்தான், பங்களாதேஷை சாய்த்து, இந்தியா 'ஹட்ரிக்' வெற்றி பெற்றது. ரோகித் (83), தினேஷ் கார்த்திக் (1) இருந்தனர்.




**441**

இந்திய வீரர் ஜடேஜா கடந்த 2017, ஜூலை 6ம் திகதி கிங்ஸ்டன் ஒருநாள் போட்டியில் மே. தீவுகளுக்கு எதிராக கடைசியாக களமிறங்கினார். பின் ஒருநாள் அணியில் இவருக்கு இடம் கிடைக்கவில்லை. 441 நாட்கள் கழித்து மீண்டும் வாய்ப்பு பெற்ற இவர் 4 விக்கெட் சாய்த்து கலக்கினார்.

**'வால்' ஆடியது**

101 ஓட்டங்களுக்கு 7 விக்., இழந்த பங்களாதேஷ் அதன்பின் இறுதி 3 விக்கெட்டுக்காக 72 ஓட்., எடுக்க, ஓட்டஎண்ணிக்கை 173 ஆனது.

# பாக்., வெற்றி

ஆப்கானிஸ்தானுக்கு எதிரான 'சுப்பர் 4' சுற்றுப்போட்டியில் மலிக் விளாச பாகிஸ்தான் 3 விக்கெட்டுக்களால் த்ரில் வெற்றி பெற்றது.

ஐக்கிய அரபு எமிரேட்சில் ஆசிய கிண்ண கிரிக்கெட் தொடர் நடக்கிறது. அபுதாபியில் நடந்த 'சுப்பர் 4' சுற்றுப்போட்டியில் பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் அணிகள் மோதின. நாணயச்சுழற்சியில் வென்ற ஆப்கானிஸ்தான் அணித் தலைவர் அஸ்கர் துடுப்பாடத்தை தேர்வு செய்தார்.

ஆப்கானிஸ்தானுக்கு நவாஸ் தொல்லை கொடுத்தார். இவரது 'சுழலில்' மொஹமட் ஷாஜத் (20), இஷானுல்லா (10) சிக்கினர். ரஹ்மத் ஷாவும் 36 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். பின், இணைந்த ஹஸ்மதுல்லா, அஸ்கர் ஜோடி அபாரமாக விளையாடியது. இருவரும் அரைச்சதம் விளாச, ஓட்டஎண்ணிக்கை சிறப்பாக உயர்ந்தது.

**நழுவிய சதம்**

நான்காவது விக்கெட்டுக்கு 94 ஓட்டங்கள் சேர்த்தபோது, அஸ்கர் (67) ஆட்டமிழந்தார். அறிமுக வேகப்பந்துவீச்சாளர் ஷாகின் அப்ரிடி பந்துவீச்சில் நபி (7) சிக்கினார். உஸ்மான் வீசிய கடைசி ஓவரில் ஹஸ்மதுல்லா மிரட்டினார். இவர் 'ஹட்ரிக்' பவுண்டரி விளாசினார். முடிவில், ஆப்கானிஸ்தான் 50 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 257 ஓட்டங்கள் எடுத்தது. சதம் நழுவவிட்ட ஹஸ்மதுல்லா (97), குல்பதீன் (10) களத்திலிருந்தனர்

**மலிக் அரைச்சதம்**

பின், களமிறங்கிய பாகிஸ்தான் அணிக்கு பகர் ஜமான் டக் அவுட்டானார். இமாம் (80), அசம் (66) அரைச்சதம் அடித்து நல்ல அடித்தளம் அமைத்தனர். சொகைல் (13), அணித் தலைவர் சர்பராஸ் (8) ஏமாற்றினர். ரஷிட் 'சுழலில்' ஆசிப் அலி (7), நவாஸ் (10) திரும்பினர். ஆலம் வீசிய கடைசி ஓவரில் வெற்றிக்கு 10 ஓட்., தேவைப்பட்டது. மலிக் தொடர்ந்து ஒரு சிக்சர், பவுண்டரி அடித்து அரைச்சதம் எட்டினார்.

பாகிஸ்தான் அணி 49.3 ஓவரில் 7 விக்கெட்டுக்கு 258 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. மலிக் (51), ஹசன் அலி (6) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

# மரண அறிவித்தல்



## சிவலிங்கம் சிவகுமார்

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் புன்னாலைக்கட்டுவன் வடக்கு, கோண்டாவில் மற்றும் தற்பொழுது கனடா றொறன்ரோவில் வசித்தவருமான சிவலிங்கம் சிவகுமார் அவர்கள் நேற்று (22.09.2018) சனிக்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற சிவலிங்கம் - நாகரத்தினம் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை - மகாலக்ஷ்மி தம்பதியரின் அன்பு மருமகனும் சாரதாதேவியின் பாசமிகு கணவரும் துளசிமலர், நளாயினி, சியாமினி, சிவகணேஷ் (கரன்), பிரசாந்த் ஆகியோரின் அன்புத் தந்தையும் வசீகரன், சிறீகரன், சிவகுமார், ஜினோவா ஆகியோரின் அன்பு மாமனாரும் யதுர்சன், யாதுளன், விஷாளினி, அனிஸ், ஆகாஷ், அபினேஸ், மிதுஷா, மகிலா, மினேஸ் ஆகியோரின் அன்பு அம்மப்பாவும் புஸ்பராணி, சூரியகுமாரி, ஜெயக்குமார், ஆனந்தகுமார் ஆகியோரின் பாசமிகு சகோதரரும் அரிதாசன், பாலகிருஷ்ணன், இந்துமதி, பவானி (கீதா) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் பார்வைக்காக ஞாயிறு மாலை 5.00 - 9.00 மணிவரை "Lotus Funeral and Cremation Center INC, 121 City View Drive, Toronto, ow, M9W 5A8 வைக்கப்பட்டு திங்கட்கிழமை காலை தகனக்கிரியைகள் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(C-3922)

இராமகிருஷ்ணா பாடசாலை வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

தொடர்புகட்கு:
வசீகரன் 0776404031 (இலங்கை). சிறீகரன் 4165622708 (கனடா)
சியாமினி 4166274617 (கனடா). சிவகணேஸ் 4165246571 (கனடா).

தகவல்:
குடும்பத்தினர்
செ.வசீகரன் (மருமகன்)

நினைத்தவுடன் அத்தனையும் நேரில் கிடைக்குமெனில் முயற்சியெனும் ஒன்றை நீ மறந்திருப்பாய்.
~ யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## அண்ணா விட்டிடு என்றபோதும் கேட்டிலா இராவணன் போல...

தனக்குப் பணி இடமாற்றம் வழங்கப்படவில்லை என்ற காரணத்தால் இளம் அரச உத்தியோகத்தர் ஒருவர் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் மிகப்பெரிய வேதனையை ஏற்படுத்தியுள்ளது.

இடமாற்றம் வழங்காததன் காரணமாக எத்தனையோ அரசு ஊழியர்கள் மனஉளைச்சலுக்கு ஆளாகி இருக்கின்றனர் என்பது மறுதலிக்க முடியாத உண்மை.

செல்வாக்குக் கலாசாரமே மேலோங்கி இருக்கின்ற இந்தக் காலகட்டத்தில் ஒருபகுதியினர் நேர்மையாக நடந்து கொள்ள வேண்டும் என நினைக்கின்றனர்.

இவ்வாறு நேர்மையாகவும் அரச சுற்றுநிருபங்கள் மற்றும் இடமாற்றக் கொள்கைகளுக்கு மதிப்பளித்தும் அதன்படி நடக்க வேண்டும் என்று நினைக்கின்ற அரச உத்தியோகத்தர்கள் எதிர்நோக்குகின்ற கஷ்ட துன்பங்கள் சொல்லுந்தரமன்று.

இத்தகையவர்கள் குறுக்குவழி தெரியாதவர்கள். ஏதோ எல்லாம் சட்டப்படி நடந்தாகும் என்பது அவர்களின் நினைப்பு.

ஆனால் இவை எதுவும் அரச சேவையில் பொருந்தாது என்பதே உண்மை. யாரிடம் செல்வாக்கு இருக்கிறதோ; பணபலம் இருக்கிறதோ; பந்தம் பிடிக்கத் தெரிகிறதோ; பணிவிடை செய்ய முடிகிறதோ அவர்கள் சர்வசாதாரணமாக தங்களின் காரியத்தை கனகச்சிதமாகச் செய்து முடிக்கின்றனர்.

ஆனால் இவற்றைச் செய்வதற்கு நேர்மையாக, கடமை உணர்வுமிக்க, கள்ளம் கபடமற்ற, மனச்சாட்சியுள்ள எவராலும் முடியாது என்பது நிதர்சனமான உண்மை.

இவ்வாறு நேர்மையைக் கடைப்பிடிக்கின்ற நல்ல உள்ளங்கள் மற்றவர்களை அதட்டவும் முடியாதவர்கள்.

இதனால் நடக்கின்ற அத்தனை அநியாயங்களையும் கண்டு தங்களுக்குள் வருந்தி வேதனைப்பட்டு தங்களை அழிப்பதன் மூலமே தங்களுக்கு விடுதலையும் மற்றவர்களுக்குத் திருத்தமும் என்ற மிகத் தவறான முடிவுக்கு வந்து விடுகின்றனர்.

இத்தகைய மனமுடையவர்களை பொறுத்தவரை அநீதியும் அக்கிரமும் நிறைந்த இந்த உலகம் கொடிய மிருகங்கள் வாழும் காட்டிலும் கொடூரமானதாகவே காட்சி கொடுக்கிறது.

இதன் காரணமாக தங்களை அழித்து தங்கள் குடும்பத்துக்கு இழப்பை ஏற்படுத்துவது மட்டுமே நடந்தாகின்றது.

இவ்வாறான தற்கொலைகள் எங்கள் சமூகத்தை திருத்தும் என்று நினைத்தால் அது வெறும் பிரமையே அன்றி வேறில்லை.

தவிர, எங்கள் பல்கலைக்கழகக் கல்வியும் மாணவர்களுக்கு தன்னம்பிக்கையுடைய பிரச்சினையை எதிர்கொள்கின்ற தற்துணிவை வழங்கவில்லை என்பதையும் குறிப்பிட்டுத் தானாக வேண்டும்.

எனவே இது விடயங்களில் அரச அதிகாரிகளும் பல்கலைக்கழக புத்திஜீவிகளும் ஒருக்காலேனும் கூடி இருந்து தற்கொலைச் சம்பவங்களைத் தடுப்பது எப்படி என்பது பற்றி ஆராய்வது புண்ணிய செயலாகும்.

# அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படாமைக்கு சட்டமா அதிபர் திணைக்களமே பொறுப்பு

## சுமந்திரன் எம்.பி குற்றச்சாட்டு

(கொழும்பு)

சட்டமா அதிபர் திணைக்களத்தின் பொறுப்பற்ற காலதாமதம் காரணமாகவே தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படாதுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சி நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்தபோதே அவர் இதனைக் கூறினார்.

"மேலும் குற்றவாளிகளாக அவர்கள் காணப்பட்டாலுமகூட அவர்கள் தொடரந்தும் இவ்வளவு வருடங்கள் சிறையில் இருப்பது பற்றி சட்டமா அதிபருக்கு தெளிவுபடுத்தி. அவர்கள் கேட்கும் புனர்வாழ்வினை எடுத்துக் கொடுக்க முடியும்.

அவ்வாறு அரைவாசிக்கும் மேற்பட்டவர்கள் இந்த ஆட்சி வந்த பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

ஆனால் அநுராதபுரத்தில் உண்ணாவிரதம் இருப்பவர்கள் கடந்த 2009ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டவர்கள்.

இவ்வாறு தொடர்ந்து 9 வருடங்கள் ஆகியும் அவர்கள் குற்றவாளிகளாக இனங்காணப்படாமல் தண்டனை அனுபவித்து வருகின்ற நிலையில் அவற்றினை கூறியே அவர்கள் விடுதலைக்கு வலியுறுத்த வேண்டும்" எனவும் அவர் கூறினார். (ம-78)

# வேலையற்ற பட்டதாரிகள் யாழில் கவனயீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

வேலையற்ற பட்டதாரிகளுக்கு மூப்பின் அடிப்படையில் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்குள் இணைத்துக் கொள்ளுமாறு வடக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தமது வேலைவாய்ப்பை உறுதிப்படுத்துமாறு வலியுறுத்திவடமாகாண வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தினர் நேற்று யாழ்ப்பாண மாவட்ட செயலகத்திற்கு முன்பாக கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

தற்போது அரசினால் வழங்கப்பட்டு வருகின்ற அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான நியமனத்தில் 2016ற்கு பின்னரான பட்டதாரிகள் அதிகளவில் இடம் பெற்றிருப்பதாக சுட்டிக்காட்டிய இவர்கள், இனிவரும் நாள் களிலாவது 2015ற்கு முந்திய பட்டதாரிகளை முன்னுரிமை அடிப்படையில் இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்தனர். (ம-78)

## சீரடியில் தேர்

(யாழ்ப்பாணம்)

யாழ். நல்லூர் நாவலர் வீதி, மடத்தார்பதி சீரடி சாயி மந்தீர் ஈழத்துச் சீரடியின் தேர்த்திருவிழா இன்று இடம் பெறவுள்ளது.

இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு வசந்தமண்டப பூசை இடம் பெற்று 8.30 மணிக்கு சாயிநாதர் தேரில் ஆரோகணம் செய்வார். (ம-78)

# பெண் விரிவுரையாளரின் மரணம் மூச்சுத் திணறல் காரணமாக ஏற்பட்டுள்ளது

## பிரேத பரிசோதனையில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

திருகோணமலையில் சடலமாக மீட்கப்பட்ட பெண் விரிவுரையாளர் நீரில் மூழ்கியமையால் ஏற்பட்ட மூச்சுத் திணறல் காரணமாக மரணம் ஏற்பட்டுள்ளதாக பிரேத பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பிரேத பரிசோதனை யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று சனிக்கிழமை மாலை இடம் பெற்றது.

அந்த அறிக்கையில் குறித்த பெண்ணின் உடலில் காயங்கள் எதுவும் இல்லை என்பதுடன், குறித்த பெண் இரண்டு அல்லது மூன்று மாத கர்ப்பிணியாகவும் இருந்ததாகவும் நீரில் மூழ்கியமையால் இடம் பெற்ற மூச்சுத்திணறலாலேயே இம் மரணம் சம்பவித்தமை என்பது தெரிய வந்துள்ளது.

மேலும் குறித்த தமிழ் பெண் விரிவுரையாளரின் மரணத்தில் சந்தேகம் எழுந்துள்ள நிலையில் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-9, 78)

## இரத்ததானம்

தியாகி திலீபனின் நினைவாக இன்று காலை 9.30 மணிக்கு இரத்த தான நிகழ்வு நல்லூரில் அமைந்துள்ள திலீபனின் நினைவு தூபி அருகில் இடம்பெறவுள்ளது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வலி தெற்கு பிரிவினரின் ஏற்பாட்டில் இடம்பெறும் இந்த நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்கள். (ம-9)

## குடிநீர் பிரச்சினை காரணமாக உணவுத் தவிர்ப்பில் ஈடுபடவுள்ள சுமணரத்ன தேரர்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் ஆரம்பிக்கப்படவுள்ள குடிநீர் போத்தல் தொழிற்சாலையினால் மக்கள் குடிநீர் தட்டுப்பாட்டுக்கு உள்ளாக நேரிடுமென கோரி உண்ணாவிரத போராட்டத்தை நடத்தவுள்ளதாக மட்டக்களப்பு மங்களாராமய விகாரையின் விகாராதிபதி அம்பிட்டியே சுமணரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

குடிநீர் போத்தல் தொழிற்சாலை தொடர்பாக ஊடகங்களுக்கு நேற்று கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் கூறுகையில்,

"குறித்த உண்ணாவிரத போராட்டத்தை எதிர்வரும் 25ஆம் திகதி நடத்தவுள்ளோம்.

மட்டக்களப்பு, புல்லுமலை பகுதியில் இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாவினால் குடிநீர் போத்தல் தொழிற்சாலை ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது. இதனால் அப்பகுதியில் குடிநீர் பிரச்சினை மற்றும் ஏனைய சுகாதார பிரச்சினைகளுக்கு மக்கள் முகம் கொடுக்க நேரிடும்.

இதனால் கிழக்கு மாகாணத்திலுள்ள தமிழ் - சிங்கள மக்களை ஒன்றிணைத்து உண்ணாவிரத போராட்டத்தை நடத்த தீர்மானித்துள்ளேன்" என அம்பிட்டியே சுமணரத்ன தேரர் தெரிவித்துள்ளார். (ம-78)

## மனிதநேயம் மலரட்டும்...

- மதங்களைக் கடந்து மனிதநேயம் மலரட் டும். உதவுகின்ற எண்ணங்களில் தான் மனிதநேயம் மலர்கிறது. வாழ்கின்ற வரை இரத்த தானம் செய்யுங்கள். வாழ்ந்த பின்னால் கண் தானம் செய்யுங்கள். மனிதநேயத்தை வளர்த்திடுங்கள். உங்களால் எவ்வளவு முடியுமோ அந்த அளவிற்கு உதவிகளைச் செய்து கொண்டேயிருங்கள். பிற உயிர்களை நேசிக்கவும் காக்கவும் மனிதநேயம் தேவைப்படுகிறது.
- மண்ணில் பிறந்த ஜீவராசிகளில் மகத்துவம் வாய்ந்தது மனிதராசி. எனவே முடிந்தவரை உதவிகளைச் செய்து மனிதநேயத்தை வளர்த்திடுங்கள். ஏழை, எளியோர்களுக்கு உதவிகள் பல புரிந்து வாழுங்கள். மனிதநேயத்தை மலரச் செய்யுங்கள். மனிதநேயத்தைப் போற்றிக் காத்திடுங்கள்.

# இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



- இரவோ முன்பே கழிந்து போயிற்று. பகலோ மிகவும் நெருங்கி விட்டது. ஆகையால் இரவின் செயல்களை உதறிவிட்டு ஒளியின் கவசங்களை அணிந்து கொள்வோம்.
- ஆட்டு மந்தைக்குள் வாசல் வழியே நுழையாமல் வேறு வழிகளில் நுழைபவன் கள்ளனாய் இருப்பான். கொள்ளைக்காரனாயுமிருப்பான்.
- தீபத்தைக் கொளுத்தி மரக்காலின் கீழ் வைக்க மாட்டார்கள். தீபக்காலின் மேல்தான் வைப்பார்கள். அது வீட்டிலுள்ள அனைவருக்கும் வெளிச்சம் தரும். அதுபோல மனிதர்கள் உங்கள் நற்காரியங்களைக் காணும் பொருட்டு உங்கள் ஒளி அவர்கள் முன் பிரகாசிக்கட்டும்.
- தேவையுள்ளவன் என்றைக்குமே மறக்கப்படுவதில்லை. எளியவர்களின் எதிர்பார்ப்பு என்றைக்குமே நசித்துப் போய் விடுவதில்லை.
- கோபத்திலிருந்து நீங்கி உக்கிரத்தைக் கைவிட்டு விடு. பொல்லாங்கு செய்வதற்கு ஏதுவான எரிச்சல் உன் புத்திக்கு வேண்டாம்.

# யாழ்.பல்கலையில் 27,28ஆம் திகதிகளில்

# ‘பாதுகாப்பான எதிர்காலத்தை நோக்கி’ சர்வதேச ஆராய்ச்சி மாநாட்டிற்கு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

“பாதுகாப்பான எதிர்காலத்தை நோக்கி” எனும் தொனிப் பொருளில் இருநாள் சர்வதேச ஆராய்ச்சி மாநாடு எதிர்வரும் 27,28 ஆம் திகதிகளில் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட ஹுவர் (Hoo ver) அரங்கில் இடம்பெறவுள்ளது.

உலகளாவிய ரீதியில் சிறப்பு நிபுணத்துவம் வாய்ந்த துறைசார் வல்லுநர்கள் 7 பேர் விவசாயம், பொறியியல், சமூக விஞ்ஞானம், முகாமைத்துவம் ,உல்லாசத்துறை தூய பிரயோக விஞ்ஞானம் தொடர்பில் சிறப்புரையாற்றவுள்ளதுடன் 121 ஆராய்ச்சி கட்டுரைகளும் முன்வைக்கப்படவுள்ளன என யாழ். பல்கலைக்கழக சர்வதேச ஆராய்ச்சி மாநாட்டின் ஒழுங்கமைப்பாளர் கலாநிதி பாலகுமார் தெரிவித்துள்ளார்.

யாழ்.பல்கலைக்கழக சர்வதேச ஆராய்ச்சி மாநாடு (ஜுஸ்-Juice-2018) “பாதுகாப்பான எதிர்காலத்தை நோக்கி” எனும் தொனிப் பொருளின் தலைப்பில் இவ்வருடம் சிறப்புற நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

இவ் இருநாள் மாநாட்டில் ஐந்நூறுக்கும் மேற்பட்டோர் பங்குபற்றுவதற்கான நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக சர்வதேச ஆராய்ச்சி மாநாட்டு ஒழுங்கமைப்பாளர் கலாநிதி ச.பாலகுமார் தெரிவித்தார். மேற்படி விடயம் தொடர்பாக கலாநிதி ச.பாலகுமார் மேலும் தெரிவிக்கையில்,

உலகளாவிய ரீதியில் துறைகள் நிபுணத்துவ வல்லுநர்களாக உள்ள தாயகத்தின் இரு யாழ்ப்பாண தமிழர் உட்பட ஏழு பேர் சிறப்புரையாற்றவுள்ளனர். அவர்களுக்கான நிகழ்ச்சி நிரல் ஏற்கனவே ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.

இதில் உலகளாவிய துறைசார் வல்லுநர்களான பேராசிரியர் ஜெனி பிரான்ட்-மில்லர், சிரேஷ்ட பேராசிரியர் எஸ்.ஜி.ஜெ.என்.சேனாநாயக்கா, பேராசிரியர் முருகேசு சிவபாலன், பேராசிரியர் கலிங்க தியோடர் சில்வா, பேராசிரியர் நடராஜா சிறிகரன், பேராசிரியர் கியர் ரீவ்ஸ், பேராசிரியர் ஸ்ரீபன் லித் ஆகியோர் சிறப்பு வல்லுநர் உரையாற்றவுள்ளனர்.

மேற்படி துறைகள் வல்லுநர்கள் விவசாயம் மற்றும் உணவு விஞ்ஞானம் (Agri and Food Science), பொறியியல் மற்றும் தொழில்நுட்பம் (Engineering and Techonology), கழக விஞ்ஞானம், சட்டம், மனிதத்தவம் (Humanities, Social Science and Law, முகாமைத்துவ கல்வி, வர்த்தகம், முயற்சியாண்மை, சுற்றுலாத்துறை (Managenent Stu dies, Commerce, Enter preneurship, Hospitality Tourism, தூய-பிரயோக விஞ்ஞானம் (Pure and Applied Sciences) ஆகியபிரதான 6 விசேட தலைப்புக்களில் பேசவுள்ளனர்.

எதிர்வரும் 27ஆம் திகதி முதல் நாள் அமர்வில் முற்பகல் 10.30 மணிக்கு சிட்னி பல்கலைக்கழக பேராசிரியர் ஜெனி பிரான்ட் மில்லரும் தொடர் ந்து முற்பகல் 11.20 மணிக்கு அவுஸ்திரேலியா பல்கலைக்கழக பேராசிரியர் கியர் ரீவ்ஸும் தொடர்ந்து முற்பகல் 11.55 மணிக்கு இலினொய்ஸ் (illinois) பல் கலைக்கழக பேராசிரியர் முருகேசு சிவபாலன் சிறப்பு உரையாற்றுவார்.

பிற்பகல் 2 மணிக்கு சுற்றுலா மற்றும் டிஜிட்டல் தொடர்பாடல் தொடர்பான கலந்துரையாடல் இடம்பெறும்.

அன்றைய தினம் மாலை 6.30 மணிக்கு கலாசார நிகழ்வு இடம்பெறும்.

மறுநாள் 28.09.2018 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு லண்டன் கிவ்ஸ் கல்லூரி மருந்தியல் தொழில் நிபுணர் பேராசிரியர் நடராசா சிறிகரனின் உணர்வும் இடம்பெறும்.

தொடர்ந்து காலை 9.15 மணிக்கு கிவ்ஸ் பல்கலைக்கழக பேராசிரியர் ஸ்ரீபன் லித்தின் சிறப்புரை இடம்பெறும்.

இதனைத் தொடர்ந்து கண்டி சர்வதேச ஐ.சி.ஈ.எஸ் (ICES) பணிப்பாளர் சிரேஷ்ட பேராசிரியர் கலிங்க தியோடர் சில்வா சிறப்புரையாற்றுவார்.

பிற்பகல் 2 மணிக்கு லண்டன் பிரிஸ்டன் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் நிஷான் கனகராஜா தலைமையில் ஆராய்ச்சி மற்றும் முயற்சியாண்மை தொடர்பான கலந்துரையாடல் இடம்பெறும்.

சர்வதேச ஆராய்ச்சி மாநாட்டு ஒழுங்கமைப்பாளர் கலாநிதி ச.பாலகுமார் அறிவித்துள்ளார். (இ

## நாடுகளை தமது பக்கம் இழுக்க சீனாவும் இந்தியாவும் பனிப்போர்

### மாலைதீவு முன்னாள் ஜனாதிபதி சுட்டிக்காட்டு

(கொழும்பு)

நாடுகளைத் தமது பக்கத்துக்கு இழுத்துக் கொள்வதற்காக, இந்தியப் பெருங்கடலில் சீனாவும் இந்தியாவும் பனிப்போரில் ஈடுபட்டுள்ளதாக மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதி மொகமட் நசீட் தெரிவித்துள்ளார்.



கொழும்பில் நேற்று முன்தினம் செய்தியாளர் சந்திப்பு ஒன்றை நடத்திய அவர்,

“நான் இந்த உண்மைகளை மறைக்க முயற்சிக்கவில்லை.

மாலைதீவில் சீனாவுக்கு நிறைய நலன்கள் உள்ளன. எனவே மாலைதீவில் தனது நலன்களை காப்பாற்றிக் கொள்வதற்கு, தற்போதைய ஜனாதிபதி அப்துல்லா யமீன் தொடர்ந்து பதவியில் இருப்பதையே சீனா விரும்புகிறது.

மாலைதீவில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் யமீன் வெற்றி பெற முடியாது. எனினும் அதிகாரத்தைத் தக்கவைத்துக்கொள்ள யமீன் முயற்சிப்பார்.

ஜனாதிபதி தேர்தலுக்குப் பின்னர் யமீனுக்கு அனைத்துலக சமூகம் அங்கீகாரம் அளிக்கக்கூடாது” என்றும், இலங்கையில் தஞ்சமடைந்துள்ள மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதி கோரிக்கை விடுத்துள்ளார்.

மாலைதீவில் நடக்கவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதியை யமீனை எதிர்த்து, எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக, இப்ராகிம் மொகமட் சோலி போட்டியிடுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## பௌர்ணமி விழா இன்று

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி கரணவாய் கிழக்கு கலட்டி ஐக்கிய சனசமூக நிலையத்தின் பௌர்ணமி விழா இன்று ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு ஜெயச்சந்திரன் கலையரங்கில் சி.ஜி. திருமாலழகன் தலைமையில் இடம்பெறும்.

இதில் சிறப்பு விருந்தினராக சிவகுரு கணேசன் கலந்து கொள்வார். (இ

## தாச்சி இறுதிப்போட்டி

(யாழ்ப்பாணம்)

கைதடி தென்கிழக்கு விநாயகர் சனசமூக நிலையத்தின் 71 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு விநாயகர் விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுசரணையுடன் நடத்தும் தென்மராட்சி ரீதியிலான நாவற்குழி சரஸ்வதி விளையாட்டுக்கழகத்திற்கும் கைதடி கலைநகர் துர்க்கா விளையாட்டுக் கழகத்திற்குமான ஆண்டுகளுக்கான தாச்சிச் சுற்று இறுதிப் போட்டி நாளை திங்கட்கிழமை இரவு 8 மணிக்கு விநாயகர் விளையாட்டுக்கழக மைதானத்தில் விநாயகர் சனசமூக நிலையத் தலைவர் செ.மயூரன் தலைமையில் இடம்பெறும்.

இதில் பிரதம விருந்தினராக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் யாழ். மாவ ட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா மற்றும் சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி பிரதேச சபை தவிசாளர் க.வாமதேவன், யாழ்.விக்னேஸ்வர வித்தியாலய அதிபர் நா.கருணாகரன், யாழ். மாவட்ட தாச்சிச் சங்க தலைவர் வை.ஆனந்த ஜெஸ்கரன் மற்றும் கௌரவ விருந்தினர் களாக கைதடி தெற்கு ஜே/291 சமுர்த்தி அலுவலகர் சி.துசீபன், கைதடி தெற்கு ஜே/291 கிராம உத்தியோகத்தர் கு.சிவகுமாரசர்மா ஆகியோரும் கலந்து கொள்வர். (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | கொடிகாமம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா | மருதனார்மடம் ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 80 | 90 | 70 | 100 | 100 |
| உருளைக்கிழங்கு | 120 | 80 | 90 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 80 | 70 | 100 | 100 | 80 |
| தக்காளி | 40 | 20 | 30 | 60 | 30 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 50 | 40 | 50 |
| கோவா | 140 | 60 | 120 | 100 | 100 |
| கரட் | 200 | 140 | 160-200 | 200 | 140 |
| பூசணி | 50 | 40 | 40 | 60 | 50 |
| புடோல் | 80 | 30 | 60 | 80 | 60 |
| வாழைக்காய் | 100 | 60 | 80 | 100 | 120 |
| சின்ன வெங்காயம் | 100 | 90 | 100 | 100 | 80 |
| பெரிய வெங்காயம் | 70 | 90 | 100 | 120 | 100 |
| பாகற்காய் | 150 | 100 | 120 | 120 | 200 |
| வெண்டிக்காய் | 80 | 40 | 40 | 80 | 50 |
| கருணைக் கிழங்கு | 50 | 60 | 80 | 80 | 60 |
| பயற்றங்காய் | 100 | 70 | 80 | 80 | 100 |
| லீக்ஸ் | 160 | 80 | 100 | 100 | 100 |
| பீற்றூட் | 60 | 60 | 80 | 80 | 60 |
| கறிமிளகாய் | 120 | 80 | 100 | 100 | 100 |
| முருங்கைக்காய் | 120 | 70 | 100 | 80 | 140 |
| போஞ்சி | 140 | 120 | 140 | 160 | 140 |
| கத்தரிதம்புள்ள | 80 | 60 | — | 80 | 80 |
| கீரை-1பிடி | 40 | 30 | 30 | 30 | 40 |
| தேசிக்காய் | 80 | 150 | 120 | 120 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 50 | 40 | 30-50 | 55 |
| இராசவள்ளி | 140 | 110 | 160 | 200 | 170 |
| வெங்காயப்பூ | 120 | 90 | 140 | 160 | 140 |
| முள்ளங்கி | 40 | 30 | 50 | 60 | 60 |
| பொன்னாங்காணி | 40 | 20 | 50 | 30 | 40 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 20 | 40 |
| ஈரப்பலா | 40 | 120 | 50 | 80 | 80 |

**விற்பனைக்கு**

யாழ்.ரக்கா றோட்டின் முன் ரக்கா லேனில் 3 பரப்பு காணியுடன் வீடு விற்பனைக்கு. (5751)

**தொடர்புகள்:0764734160**

**காண்டம் பார்த்தல்**

உங்கள் வாழ்க்கையில் நடந்த மற்றும் நடக்கப்போகின்ற விடயங்களை மிகவும் துல்லியமாக கணித்துத் தருகின்றோம். (5689)

**தொடர்புகளுக்கு:0212232222, 0768351932 உரும்பிராய்**

**காயத்திரி திருமாங்கல்ய சேவை**

திருமணம், பொருத்தம் பார்த்தல், நிச்சயித்தல், குறிப்பு எழுதுதல் போன்ற சேவைகளை மிகவும் திருப்திகரமாக செய்து வருகின்றோம். எமது சேவையினூடாக உங்கள் பிள்ளைகளின் மணவாழ்வினை மங்கல வாழ்வாக்கிக் கொள்ளுங்கள்.

பதிவுகள் இலவசம்.

(5688) தொடர்புகளுக்கு:- 076 835 1932, 021 223 2222 உரும்பிராய்.

**மணமக்கள் தேவை**

ஐரோப்பா, அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா, இலங்கையில் வசிக்கும் படித்த மணமகன், மணமகள்களுக்கு மணமக்கள் தேவை. (5760)

தொடர்புகளுக்கு

**0094 76 725 0144, 075 568 5766**

**கறிமுருங்கை இலை தேவை**



நல்ல பசுமையான பூச்சி புழுத் தாக்கம் பழுத்தல் (மஞ்சள் நிறம்) அற்ற கறிமுருங்கை இலை பெருந்தொகையாக கொள்வனவு செய்யப்படும். மேலேயுள்ள படத்தில் உள்ளது போல குலக் குகளாக ஒடித்து வழங்க வேண்டும். (5761)

முகவரி

Nutri Food Packers, கிளுவானை ஒழுங்கை,
(Kopay Christian College அருகாமை)
கோப்பாய் மத்தி, கோப்பாய்.

தொடர்புகளுக்கு:- தொ.பே.இல: 076 628 9170

# அதிகாரப் பகிர்வு பின்னடைவுக்கு தமிழ் அரசியல்வாதிகளே காரணம்

## ஆனந்தசங்கரி தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ் அரசியல்வாதிகளின் பொறுப்பற்ற கருத்துக்களினாலேயே அதிகாரம் பகிர்ந் தளிக்கப்படுவதற்கு பெரும்பான்மையினர் எதிர்ப்பை வெளிப்படுத்துவதாக தமிழர் விடு தலை கூட்டணியின் தலைவலர் வீ.ஆனந்த சங்கரி தெரிவித்துள்ளார்.

நேற்று சனிக்கிழமை தொலைக்காட்சி நிகழ்ச்சிக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் கூறுகையில்.

அதிகார பகிர்வு என்ற விடயம் 30 வரு டங்களுக்கு மேலாக கூறப்பட்டு வருகின்றது. ஆன்லால் இவ்விடயத்தில் எந்ததொரு சிறிய மாற்றமும் இல்லை.

இதற்கு முக்கிய காரணம் இவ்விடயத் தில் தமிழ் அரசியல் தலைவர்கள் போதிய அழுத்தத்தை பிரயோகிக்க தவறி வருகின்ற மையே ஆகும்.

மேலும் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமான இரா.சம்பந்தன் வெளிநாடுகளுக்கு சுற்றுப்பயணங்களை மேற்கொண்டு இருக்கின்றார். ஆனால் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காணும் விடயத்தில் உறுதியான முடிவொன்றை அர சாங்கத்துக்கு வெளிப்படுத்துகிறார் இல்லை.

இவர் தமது பதவியிலிருந்து ஒழுங்கான முறையில் அழுத்தத்தை பிரயோகித்தால் போதும் நிச்சயம் தீர்வு கிடைத்துவிடும் ஆனால் அதனை செய்கின்றார் இல்லை.

மேலும் மக்களை முட்டாள்கள் என எண் ணிக்கொண்டு தமது செயற்பாடுகளை சம் பந்தன் தற்போது மேற்கொண்டு இருக்கின் றார் என குற்றம் சுமத்தியுள்ளார். (ம-78)

## வவுனியா ஆர்ப்பாட்டத்தில்

# சம்பந்தன், சுமந்திரனுக்கு எதிராகவும் கோசங்கள்

(குருமன்காடு)

வவுனியாவில் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி நேற்று நடை பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது தமிழரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் முன் னிலையில் எதிர்கட்சித் தலைவர் இரா.சம்பந் தன் மற்றும் சுமந்திரன் எம்.பி ஆகியோ ருக்கு எதிராகவும் கோசங்கள் எழுப்பப் பட்டன.

பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் அரசியல் கைதிகளின் விடுதலையை. வலி யுறுத்தி வவ்னியா பழைய பேருந்து நிலை யத்தில் ஆரம்பமாகிய ஆர்ப்பாட்ட பேரணி பசார் வீதி வழியாக ஹொரவப்பொத்தானை வீதியை அடைந்து அதனூடாக மாவட்ட செயலக முன்றலை சென்றடைந்தது. அங்கு ஆர்ப்பாட்டமும் இடம்பெற்றது.

இப் பேரணி மற்றும் ஆர்ப்பாட்டத்தின் போது எதிர்கட்சித் தலைவரே காட்டிக் கொடுக் காதே, எதிர்கட்சித் தலைவரே அரசுடன் பேசு. சுமந்திரனை வெளியேற்று போன்ற கோசங்கள் எழுப்பப்பட்டன. இதன்போது குறித்த பேரணியில் கலந்து கொண்ட தமிழரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பின ரும் தலைவருமான மாவை சேனாதிராஜா, பாராளுமன்ற உறுப்பினர்களான சாந்தி சிறிஸ்கந்தராஜா, சாள்ஸ் நிர்மலநாதன், வட மாகாண சபை உறுப்பினர் ப.சத்தியலிங்கம் ஆகியோர் எதிர்கட்சித் தலைவர் மற்றும் சுமந்திரனுக்கு எதிரான கோசங்களின் போது அமைதியாக பேரணியில் தலையை குனிந்து கொண்டு சென்றனர்.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பினர் இந்த விடயத்தில் காத்திரமாக செயற்படவில்லை எனவும் அவர்களை இவர்களுக்காக போராடுமாறும் பொது அமைப்புக்கள் சார்பில் கருத்துரைத்தவர்கள் தெரிவித்தார்.

இதன்போது மக்கள் கைதட்டி கரகோசம் செய்தனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராக பொது அமைப்புக்கள் சார்பில் பேசிய வர் கருத்துரைத்த கூட்டமைப்பு பாராளு மன்ற உறுப்பினர்கள் அவ்விடத்தில் இருந்து அமைதியாக வெளியேறியிருந்தமை குறிப் பிடத்தக்கது.

இதேவேளை, குறித்த ஆர்ப்பாட்டத்தில் பிரதி அமைச்சர் கே.கே.மஸ்தான் கலந்து கொண்டமை மக்கள் மத்தியில் வரவேற் பையும் பெற்றிருந்தது. (ம-78,250)

## தேர்தல் தொடர்...

தேவை எமக்கில்லை. இதுதான் எமது கொள்கை.

தற்போதைய பொருளாதார நிலைமை தொடர்பில் நேற்று சனிக்கிழமை கொழும்பு விஜேராம மாவத்தையிலுள்ள அவரது உத் தியோகப்பூர்வ இல்லத்தில் இடம்பெற்றது.

இதில், இந்தியாவில் ஊடகம் ஒன்றுக்கு தெரிவித்த கருத்து தொடர்பில் ஊடகவியலா ளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதில் வழங்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும் கடந்த காலத்தை குறைகூறிக் கொண்டிருந்தால் எதுவும் செய்ய முடியாது. அவர்கள் பெற்றக் கடனை நாங்கள் திருப்பிச் செலுத்தினோம். நாங்கள் சந்திரிகா, ரணி லின் ஆட்சிக்கால குறைகளைக் கூறிக் கொண்டிருந்தால் யுத்தத்தை செய்திருக்க முடியாது என்றும் அவர் கூறினார்.(ம-78)

## திலீபனின் நினை...

யூறுகள் உள்ளதா என கோரி பொலி ஸார் வாக்குமூலம் பெற்றுள்ளனர்.

இதேவேளை எதிர்வரும் 25 ஆம் திகதி யாழ் மாநகர ஆணையாளரை நீதிமன்று க்கு சமுகமளிக்குமாறு அழைப்பு விடுக்கப்ப ட்டுள்ளது. அழைப்பு கடிதத்தை நேற்று முன் தினம் மாலை பொலிஸார் ஆணையாளரி டம் கொடுத்துள்ளார்கள்.

திலீபனின் நினைவிடத்தை சுற்றி இரும் புக்கம்பி வேலிகளை அமைக்க ஊழியர் களை பயன்படுத்திய குற்றச்சாட்டில் அவரு க்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள தாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக ஆணையாளரை தொட ர்புகொண்டு கேட்டபோது நீதிமன்றுக்கு சமு கமளிக்குமாறு பொலிஸார் நேற்று முன் தினம் மாலை வெள்ளிக்கிழமை அழைப்பு கடிதத்தை கொடுத்தார்கள். ஆனால் நீதிமன் றுக்கு அழைப்பதற்கான காரணம் எவையும் குறித்த கடிதத்தில் குறிப்பிடவில்லை என ஆணையாளர் தெரிவித்துள்ளார். (ம-9)

## தியாக தீபம் திலீ...

அத்துடன், நல்லூரில் அமைந்துள்ள திலீ பனின் நினைவிடத்தைச் சுற்றி அமைக்கப்ப ட்டுள்ள இரும்புக் கம்பிகளிலான வேலியை மற்றும் அங்கு அமைக்கப்பட்டுள்ள பந்தல், திலீபனின் உருவப் படத்தை அகற்றுவதற் கான கட்டளையை யாழ்ப்பாணம் மாநகர சபையின் ஆணையாளருக்கு வழங்குமா றும் நீதிமன்றில் பொலிஸார் விண்ணப்பம் செய்துள்ளனர்.

யாழ்ப்பாண பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகர், உதவிப் பொலிஸ் அத்தியட்ச கர் மற்றும் யாழ்ப்பாண பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆகியோர் முன்னிலையாகி இந்த விண்ணப்பத்தை யாழ்ப்பாணம் நீத வானிடம் நேற்று முன்தினம் வெள்ளிக்கி ழமை மாலை முன்வைத்தனர்.

யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதவானின் சமாதான அறையில் இந்த விண்ணப்பம் முன்வைக்கப்பட்டது.

இலங்கையிலும் உலக நாடுகளிலும் தடை செய்யப்பட்ட அமைப்பான தமிழீழ விடு தலைப் புலிகளின் உறுப்பினர் ஒருவரை நினைவு கூருவதற்கு நல்லூரில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று பொலிஸாரின் புல னாய்வுத் தகவல்கள் மூலம் அறியக் கிடை த்துள்ளது.

பயங்கரவாத அமைப்பின் உறுப்பின ரான திலீபன், உண்ணாவிரதம் இருந்து உயிரிழந்த நல்லூரில் இந்த நினைவுகூரல் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

அதற்காக நல்லூரில் அமைந்துள்ள அவ ரது நினைவிடத்தைச் சுற்றி இரும்புக் கம்பிக ளிலான வேலி அமைக்கப்பட்டுள்ளது. அத்து டன், அதற்கு அருகாமையில் பந்தல் இடப்ப ட்டு மேசையின் மேல் திலீபனின் உருவப் படம் வைக்கப்பட்டுள்ளது.

திலீபனின் நினைவுகூரலை நடத்த தடை உத்தரவு வழங்கவேண்டும். அத்து டன், யாழ்ப்பாண மாநகர எல்லைக்குட்பட்ட பகுதியில் அந்தச் சபையின் ஆணையாள ரின் அனுமதி பெறப்படாமல் சட்டவிரோத மாக இரும்புக் கம்பிகளால் வேலிகள் அமை க்கப்பட்டுள்ளன, பந்தல் அமைக்கப்பட்டுள்ளன.

அவற்றை அந்தப் பகுதியிலிருந்து அக ற்றுவதற்கு யாழ்ப்பாண மாநகர சபையின் ஆணையாளருக்கு உத்தரவிடவேண்டும் என்று பொலிஸார் தமது விண்ணப்பத்தில் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

பொலிஸ் அதிகாரிகளின் விண்ணப்ப த்தை ஆராய்ந்த யாழ்ப்பாண நீதவான் சின் னத்துரை சதீஸ்தரன், யாழ்ப்பாண மாநகர சபை ஆணையாளரை வரும் 25ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நீதிமன்றில் முன்னி லையாகுமாறு உத்தரவிட்டார்.

இதேவேளை, யாழ்ப்பாண சட்டத்தரணி கள் சங்கத்தின் தலைவி ஜனாதிபதி சட்டத் தரணி சாந்தா அபிமன்யுசிங்கம் தலைமை யிலான சட்டத்தரணிகள் இந்த வழக்கில் முன்னிலையாகி பொலிஸாரின் விண்ணப்ப த்துக்கு கடும் ஆட்சேபனையை முன்வைக்க வுள்ளனர் என்று அறியமுடிகின்றது.(ம-9)

## வீழ்ச்சியை தடு...

விஜேராம மாவத்தையிலுள்ள அவரது உத்தியோகப்பூர்வ இல்லத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், இலங்கை ரூபாயின் பெறுமதி வீழ்ச்சிக்கு தற்போதைய அரசாங்கத்தின் முறையான முகாமைத்துவம் இன்மையே காரணம்.

ரூபாயின் வீழ்ச்சியைக் கட்டுப்படுத்தத் இவர்களது தலைமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இல்லை என்றால் தற்போதைய நிலையை விட நாடு சீர்குலையும். ஆகவே. இதற்கான தலைமைத்துவத்தை பயன்படுத்த வேண்டும்.

மேலும் இந்த விடயம் தொடர்பில் எதனை யும் மேற்கொள்ளாது. ஜனாதிபதியோ அல்லது பிரதமரோ. அமைச்சரோ ரூபாயின் விலை அதிகரிக்கும் என கூறுவார்களாயின் நிச்சயமாக ரூபாயின் பெறுமதி வீழ்ச்சிய டையும்.

ஆனால் கடந்த 2007 ஆம் ஆண்டு முழு ஆசிய வலயத்திலும் பொருளாதாரம் வீழ்ச் சியடைந்த போதிலும் இலங்கையின் பொரு ளாதார நிலையை சீராக நாங்கள் பேணியி ருந்தோம்.

இதன் காரணமாகவே அன்று நாடு ஸ்திரத்தன்மையுடன் இருந்தது. ஆனால் இன்று அந்நிலை மாறுபட்டு காணப்படுகி ன்றது. இந்நிலை தொடருமாயின் முதலீட்டா ளர்கள் ஒருபோதும் வரப்போவதில்லை.

அத்துடன் இதில் பாதிக்கப்படுவது இவர் கள் அல்ல. அப்பாவி பொது மக்களே. எனவே சிறந்த தலைமைத்துவத்தை வழங்க நடவடி க்கை எடுக்காவிட்டால் அரசை எங்களிடம் ஒப்படையுங்கள் என கூறினார். (ம-78)

## பயங்கரவாத...

அதேபோன்று புதிய பயங்கரவாத தடை ச்சட்டம் அமுல்படுத்தப்படுமானால் ஒருபோதும் அது நாட்டின் சமாதானத்திற்கு பங்கமாக அமையாது என சுற்றுசூழல் பிரதி அமைச்ச ரும் பாராளுமன்ற ஊழல் எதிர்ப்புக்குழுவின் தலைவருமான அஜித் மன்னப்பெரும தெரி வித்தார்.

மேலும் அரசியல் கைதிகள் விவகாரம் தொடர்பில் பாராளுமன்ற ஊழல் எதிர்ப்பு குழுவுக்கு முறைப்பாடுகள் கிடைக்குமானால் அவர்களுக்கான நியாயமான தீர்வுகளைப் பெற்றுக்கொடுப்போம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அரசியல் கைதிகள் தொடர்பில் அரசாங் கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பிலும், பயங்கரவாத தடைச்சட்டம் இதுவரையும் நீக்கப்படாமல் உள்ளமைக் கான காரணம் தொடரபில் வினவியபோதே அவர் இதனை தெரிவித்தார். (ம-78)

## உணவு தவிர்ப்பி...

தலையை வலியுறுத்தி கடந்த 14 ஆம் திகதியில் இருந்து இன்றுடன் 10 ஆவது நாளாக தொடர் உணவு தவிர்ப்பு போராட்ட த்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு 9 வருடங்களுக்கு மேலாக சிறையில் விளக்கமறியலில் வைக்கப்பட் டுள்ள 8 கைதிகள், தம்மை அரசு குறுகிய புனர்வாழ்வு அளித்து விடுதலை செய்ய வேண்டும் அல்லது வழக்குகளை விரைவு படுத்தி விடுதலை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து உடல்நிலை மோசமடைந்த நிலையில் ஒரு வாரமாக தொடர்ச்சியான உணவு தவிர்ப்பு போராட்ட த்தில் ஈடுபட்டுள்ளார்கள்.

இவர்களை சிவன் அறக்கட்டளை நிறு வனத்தின் இயக்குநர் கணேஸ்வரன் வேலா யுதம் நேற்று சென்று பார்வையிட்டிருந்தார். இவர்களில் ஜெயச்சந்திரன், தபோரூபன் ஆகியோர் அநுராதபுரம் வைத்தியசாலையி லும் நிமலன், தில்லைராஜ் ஆகியோர் சிறை ச்சாலை வைத்தியசாலையிலும் நேற்று அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் ஏனையவர்கள் உடல் பலவீனமடைந்த நிலையில் தமது போராட்டத்தை தொடர்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-9-78)

### ஜாதிக சம்பத

சீட்டிழுப்பு திகதி 22-09-2018
சீட்டிழுப்பு இலக்கம் 876
ஆங்கில எழுத்து W
வெற்றி இலக்கங்கள் 9 1 0 9 8 3
தேசிய லொத்தர் சபை

### கொவிசெத

திகதி 2018-09-22
சீட்டிழுப்பு இலக்கம் 1890
ஆங்கில எழுத்து K
வெல்லப்பட்ட இலக்கங்கள் 63 64 67 77
தேசிய லொத்தர் சபை

### செவன

திகதி 2018/09/22
சீட்டிழுப்பு இலக்கம் 120
ஆங்கில எழுத்து D
வெல்லப்பட்ட இலக்கங்கள் 07 14 43 67
தேசிய லொத்தர் சபை

### சுபிரி வாசனா

திகதி 2018-09-22
சீட்டிழுப்பு இலக்கம் 1362
எழுத்து 02
வெற்றி இலக்கம் 11 15 33 44
45 50
தேசிய லொத்தர் சபை

## மதவா...

படுகாயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் இரவு இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த குழுவொன்றின் மீது இவ்வாறு காட்டு யானை தாக்கியுள்ளது.

மதவாச்சி, பூனேவ, கிடவரங்குளம் பிரதேசத்தில் வசிக்கும் 24 வயதுடைய இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், 42 வயதுடைய ஒருவர் படுகாயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரின் சடலம் மதவாச்சி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், காயமடைந்தவர் அநுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மதவாச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ம-78)

## கத்திக்...

காயத்துடன் பெண் ஒருவர் சிகிச்சைக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

தனிப்பட்ட பகை காரணமாக இடம்பெற்ற தகராற்றை தடுக்கச் சென்ற சமயமே குறித்த பெண் கத்திக்குத்துக்கு இலக்கானதாகத் தெரிவிக்கப்படுகிறது. தவசிக்குளம் கொடிகாமத்தைச் சேர்ந்த 43 வயதான பெண்ணே இவ்வாறு படுகாயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-30-78)

## வல்லி...

வரலாற்று சிறப்பு மிக்க வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் தேர்த் திருவிழா இன்று ஞாயிற்றுக் கிழமை காலை இடம் பெறும்.

காலை 8 மணியளவில் வசந்த மண்டப பூசைகள் இடம்பெற்று சக்கரத்தாழ்வார் உள் வீதியுலா வந்து முற்பகல் 10 மணியளவில் தேரில் ஆரோகணித்து வலம்வருவார். (ம-60-78)


CNR உள்நாடு, வெளிநாடுகளுக்கான தபால், பொதிகள் விநியோக சேவை
அதிவேக மற்றும் சிக்கன பொதிகள் சேவை
நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
வீடு, அலுவலகங்களில் இருந்தவாறு அனுப்பும் வசதி
அனுப்பும் பொதிகளுக்கான காப்புறுதி உத்தரவாதம்
கடல் ஆகாய மார்க்க பெரிய சரக்குப் பரிமாற்ற சேவை
CNR World Wide Express
இல.401, மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 021 5674145, 077 2931062, 077 6655413
(C-3862)

தேவை
யாழ்ப்பாணத்தில் பிரபல ஹொட்டல் ஒன்றுக்கு உணவு பரிமாறுபவர் (Waiter) தேவை.
தொடர்பு: 0776844016
(5767)

சிற்றி சிக்கன் ஹோம் சப்பிளை
உங்களுக்கு கோழி இறைச்சி தேவையா? அழையுங்கள்... உங்கள் வீடுகளுக்கே கொண்டு வந்து தருகின்றோம்.
0778380158, 0764719951, 0217223535, 0217223636
M.S.V பாம் டீலேர்ஸ் - கொக்குவில்
(5754)

வாகன சாரதி தேவை
AD ரக வாகன சாரதி அனுமதிப் பத்திரம் உள்ள 30 வயதிற்கும் 50 வயதிற்கும் இடைப்பட்ட வயதுடைய சாரதி உடன் தேவை. மதுப்பழக்கம் இல்லாமல் இருக்க வேண்டும். மும்மொழிகளும் தெரிந்திருப்பின் முன்னுரிமை வழங்கப்படும்.
தொடர்பு: 0777474111, 0773864077
(C-3920)


கணனி திருத்தம்
IPhone, IPad, ICloud Unlock
உங்கள் கணனிகள், Laptop பழுதடைந்து விட்டதா? உங்கள் வீடுகளுக்கே வந்து திருத்தித் தருகின்றோம்.
மற்றும் கணனிகள் விற்றல், வாங்குதல்.
தொடர்புகளுக்கு:- ALM Computer System
077 243 8537
(5768)

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK - 550 /=Kg
கனடா - 900 /=Kg
ஜேர்மனி - 700 /=Kg
நெதர்லாந்து - 700 /=Kg
DELIVERY IN 3-5 DAYS
(C-3873)
0768226240
V2 TRAVELS
மானிப்பாய் • யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • சாவகச்சேரி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

வெளிநாடு - உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை
WESTERN UNION 070 330 5500 WESTERN UNION
அண்ணா பொதிகள் சேவை
976, கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388
பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும், குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.
3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்
வேலணை – அரியாலை – சங்கானை – சுன்னாகம்
கரணவாய் – ஸ்ரீசாலை – கிளிநொச்சி – கனகராயன்குளம்
முல்லைத்தீவு – மன்னார் – வவுனியா – திருகோணமலை
(C-3863)

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை
DHL
• 220 க்கு மேற்பட்ட நாடுகளுக்கான சேவை
• உங்கள் இல்லங்களில் இருந்தவாறே பொதிகளை அனுப்பிட முடியும்
• 3 – 5 நாட்களில் உரிய முறையில் ஒப்படைக்கப்படும்
• மிகக் குறைந்த கட்டணம்
077 755 4528
லண்டன் Rs. 550/- பிரான்ஸ் Rs. 700/- சுவிஸ் Rs. 750/- ஜேர்மனி Rs. 650/-
யாழ் - கொழும்பு பஸ் பிரயாண சேவை
யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பிற்கான பஸ் பிரயாண சீட்டுக்களை எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்
சகல நாடுகளுக்குமான விமான பயணச்சீட்டுக்களை பெற்றுக் கொள்ளலாம்.
சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்பப் படிவ ஏற்பாடுகள் (Online) மூலமாக செய்து கொடுக்கப்படும்
VISA
திருமுருகன் கொம் நெற்
தொ, இல. - 077 755 4528
இல. 321 (323) K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
(C-3923)


யாழ்ப்பாணத்தில்
1 ஏக்கர், 2 ஏக்கர் கற்பகவனம் 2
காணிகள் விற்பனைக்கு எழுதுமட்டுவாழ்
உடனடி உறுதி மாற்றம் *
வங்கி கடன் வசதி செய்து தரப்படும்


1 ஏக்கர் – 16 பரப்பு
40 தென்னை • 40 - 60 தேக்கு
20 கஜு மரம் • 10 - 15 மாமரம்
கல் இருக்கை 1 தொகுதி
சுற்று முட்கம்பிவேலி படலையுடன்
25 இலட்சம்
(5 வருட பராமரிப்பு உள்ளடங்கலாக)

2 ஏக்கர் – 32 பரப்பு
80 தென்னை • 80 - 90 தேக்கு
40 கஜு மரம் • 20 - 30 மாமரம்
கல் இருக்கை 1 தொகுதி
சுற்று முட்கம்பிவேலி படலையுடன்
47 இலட்சம்
(5 வருட பராமரிப்பு உள்ளடங்கலாக)

அனைத்து மரங்களும் நட்டு உரிய முறையில் 5 வருடங்கள் பராமரிப்பு செய்து தரப்படும்!
30 அடி, 15 அடி அகல பாதை • விடுமுறை வீடு அமைப்பதற்கான இடவசதி
24 மணிநேர பாதுகாப்பு • விளைபொருட்களுக்கான சந்தை வசதி
பொதுவான வசதிகள்
பொது விடுதி • உணவகம் • உடற்பயிற்சிக்கூடம் • நீச்சல் தடாகம் • விளையாட்டுத்திடல்
நடைபயிற்சிக்கான பாதை • மீன்பிடி குளம் • முந்திரிகை தோட்டம் • மூலிகைத் தோட்டம்




சி. அனுராஜ்
உரிமையாளர், விற்பனையாளர்
078 284 5000 021 492 7778
551A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
Good Gift Property Developers (Pvt) Ltd
Reg. No.: PV 115306
(C-3891)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.09.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# தொழில்நுட்ப வரைபடவியலாளர்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

இலங்கை புகையிரதத் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர், தொழில்நுட்ப சேவை தரத்தின் தொழில்நுட்ப வரைபடவியலாளர் (சிவில்/ சமிக்ஞை/இயந்திரம்) பயிற்சித் தரத்தின் வெற்றிடங்களை நிரப்புவதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன்.

கணிதம், சிங்களம்/ தமிழ்/ஆங்கிலம் மொழி, விஞ்ஞான பாடத்துடன் மேலும் ஒரு பாடத்திற்கு திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் ஆறு பாடங்களில் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் சித்தியடையந்திருத்தல். மற்றும் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் இணைந்த கணிதம், பௌதிகவியல் விஞ்ஞானம் உட்பட மேலும் மூன்று பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைதல்.

அல்லது க.பொ.த. உயர் தரப் பரீட்சையில் பொறியியல் தொழில்நுட்பத்துறை உட்பட தொழில்நுட்பத்துறையுடன் சம்பந்தமான மூன்று பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைதல் மற்றும் மூன்றாம் நிலை கல்வி மற்றும் தொழில் கல்வி ஆணைக் குழுவினால் ஏற்றுக் கொள்ளப்படும் தொழில்நுட்ப கல்லூரியில் வரைவியலாளர் கலை சம்பந்தமான ஒரு வருட கால முழுநேரப் பயிற்சி நெறியை சாதகமான முறையில் பூரணப்படுத்தி சான்றிதழ் பெற்றிருதல் வேண்டும். விண்ணப்பதாரி விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினத்தன்று 18 வயதுக்கு குறையாதவராகவும் 30 வயதுதிற்கு மேற்படாதவராகவும் இலங்கை பிரஜையாகவும் இருத்தல் வேண்டும்.

இவ் விண்ணப்பப் படிவத்தினை 2018.09.10 ஆம் திகதிக்கு முன்னர் "பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், திட்டமிடல் மற்றும் வெளிநாட்டு பரீட்சைக் கிளை, த.பெ.1503, கொழும்பு" எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும.

எந்த விண்ணப்பப்பத்திரமாவது தனிப்பட்ட பெயருக்கு அனுப்புதலோ அல்லது கையில் கொண்டு வந்து பாரம் கொடுத்தலோ கூடாது. அரச சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் உள்ளவர்கள் தங்களது விண்ணப்பப்பத்திரங்களை குறிப்பிட்ட தினத்திற்கு முன்பு தமது திணைக்களப் பிரதானியினூடாக அனுப்பி வைத்தல் வேண்டும். (இ)

# போசணை அலுவலர் தரம் II பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் கீழ் நிர்வகிக்கப்படும் வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களுக்கு போசணை அலுவலர் தரம் II பதவிக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கான பின்வரும் தகைமைகளையுடைய இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

2018.09.21 ஆம் திகதி வெளியான வர்த்தமானிப் பத்திரிகையின் பிரகாரம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் போசணை அல்லது உணவு விஞ்ஞானம் தொடர்பான விசேட பட்டம் பெற்றிருத்தல். விண்ணப்பதாரி விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித்தினத்தன்று 21 வயதிற்கு குறையாமலும் 35 வயதிற்கு மேற்படாமலும்இருத்தல்வேண்டும்.

விண்ணப்பங்களை 2018.10.22 ஆம்திகதிக்கு முன் பணிப்பாளர் (நிர்வாகம்) 07 சுகாதார போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு "சுவசிறிபாய" 385, வண-பத்தேகம விமல வங்ச தேரோமாவத்தை கொழும்பு-10 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும் என சுகாதார போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு அறிவித்துள்ளது. (இ)

# சிறுவர்களுக்கான ஓவியப்போட்டி

(யாழ்ப்பாணம்)

நாளை 24.09.2018 ஆம் திகதி திங்கட்கிழமை (பொது விடுமுறை) அன்று வடமாகாண சிறுவர்களுக்கான ஓவியப்போட்டி கீழ் குறிப்பிட்ட பாடசாலைகளில் உரிய நேரத்தில் நடைபெறவுள்ளதுடன் இதில் மாணவர்கள் மற்றும் ஆர்வமுடையவர்கள் ஏதேனும் ஒரு பாடசாலையில் போட்டியில் பங்குபெற முடியும்.

1. யா/கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி, கோப்பாய் - காலை 9.00 மணி.

2. யா/உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம் -முற்பகல் 11.30 மணி.

3. யா/அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரி - பிற்பகல் 2.30 மணி

போட்டி விபரம்

1. கனிஷ்ட பிரிவு - 10 வயதிற்குட்பட்டவர்கள்- போட்டியாளர் விரும்பிய 'ஓவியத்தினையும் வர்ணத்தினையும் பயன்படுத்த முடியும்.

2.சிரேஷ்ட பிரிவு- 11-15 வயது (இயற்கை காட்சி, பட்டம் விடுதல், கடற்கரை காட்சி) போட்டியாளர் விரும்பிய வர்ணத்தினை பயன்படுத்த முடியும்.

3. திறந்த பிரிவு - 15-18 வயது (சந்தைக்காட்சி, பண்டிகைகள், விழாக்கள்) போட்டியாளர் விரும்பிய வர்ணத்தினை பயன்படுத்த முடியும்.

குறிப்பு:- போட்டிக்கான வரைவுதாள் மட்டும் (Drawing paper) மண்டபத்தில் வழங்கப்படும் நடுவர்களின் முடிவே இறுதியானது என கோப்பாய் உதவிப் பிரதேச செயலாளர் திருமதி.ராதிகா சன்சீவன் அறிவித்துள்ளார். (இ)

# பயிற்சிகளுக்கு பயிலுநர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் மருத்துவ விடயங்களுக்கான தாதியர், நிறைவு காண் மற்றும் துணை மருத்துவ சேவையின் பின்வரும் கற்கை நெறிகளுக்காக பயிலுநர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு தகைமையுடைய இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இந்த அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத் தளத்தின் (www.health.gov.lk) ஊடாக மாத்திரமே (online Registration) இதற்காக விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பிக்க விரும்புவோர் குறித்த இணையத்தளத்தில் வர்த்தமானி அறிவித்தல் மற்றும் விண்ணப்பம் தொடர்பான அறிவுறுத்தலைப்-பெற்றுக்கொள்ள முடியும். அவ்விதம் இணையத்தளத்தில் விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதில் சிரமங்கள் ஏற்படின் விண்ணப்பதாரர் வசிக்கும் மாவட்டத்திலுள்ள பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் உரிய ஆலோசனைகளைப் பெற்று விண்ணப்பிப்பதற்கு உரிய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. அந்தவகையில் யாழ்.மாவட்டத்திலுள்ள விண்ணப்பிக்க தகுதியுள்ள விண்ணப்பிப்பதில் சிரமங்களை எதிர்கொள்ளும் விண்ணப்பதாரிகள் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை யாழ்ப்பாணத்துடன் அலுவலக கடமை நேரத்தில் தொடர்பு கொள்ள முடியும் என யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி க.நந்தகுமாரன் அறிவித்துள்ளார்.

விண்ணப்பம் சமர்ப்பிக்கும் இறுதித் திகதி 28.09.2018 என்பது குறிப்பிடத்தக்கது.

விண்ணப்பிக்கப்படும் பயிற்சி நெறிகள்.

1.தாதிய உத்தியோகத்தர்

2. மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்

3. மருந்தாளர்

4. தொழில்வழி சிகிச்சையாளர்

5. கதிரியலாளர்

6. பாடசாலைப் பற்சிகிச்சையாளர்

7. சுகாதாரப் பூச்சியியல் அலுவலர்

8. கண் தொழில்நுட்பவியலாளர்

9. செயற்கை அவயத் தொழில்நுட்பவியலாளர்

10. பொதுச் சுகாதாரப் பரிசோதகர்

11.இதயத்துடிப்புப் பதிவாளர்

12. மூளை மின் இயக்கப் பதிவாளர் என்பனவாகும்.(இ)

# யோகா பயிற்சிநெறிகள் நல்லூரில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.யோகா உலகம் அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசை மடத்தில் புதிய யோகா பயிற்சி நெறிகளை ஆரம்பிக்கின்றது.

இப்பயிற்சி நெறிகளுக்கான அறிமுக நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு சுதேச மருத்துவர் ஜெ.ஜெயலன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் யோகா ஆச்சாரியார் யோ.பிரசாத் யோகா நுணுக்கங்கள் என்ற தொனிப்பொருளில் கருத்துரையினையும் பயிற்சியையும் வழங்குவார். ரஜீவன், காஸ்ரோ, நளின், அட்சயா ஆகிய யோகா கலைஞர்களின் யோகாசன செயன்முறை விளக்கமும் நடைபெறும்.

யோகா பயிற்சி நெறி - 1 காலை 6 மணி தொடக்கம் 7 மணிவரையும். பயிற்சி நெறி-2 மாலை 4.30 தொடக்கம் 5.30 வரையும் பயிற்சி நெறி-3 இரவு 6 மணி தொடக்கம் 7 மணிவரையுமாக மூன்று பயிற்சி நெறிகள் இரண்டு மாதங்கள் தினமும் நடைபெறும். மருத்துவர்கள் மற்றும் யோகா நிபுணர்களால் இனங்காணப்பட்ட சிறப்பிற்குரிய யோகாசனம் பிராணாயாமம், தியானம் மற்றும் சாந்த வழிமுறைகள் அனுபவமுள்ள ஆசான்களால் நுணுக்கமாகப் பயிற்றுவிக்கப்படுவதுடன் பெண்களுக்கான யோகா மேலதிக பயிற்சிகள் பெண் ஆசிரியரால் பயிற்றுவிக்கப் படும். நோயாளர்களுக்கு விசேட கவனம் செலுத்தப்படும். பயிற்சிக் கையேடும் வழங்கப்படும். யோகா கலையில் அதீத திறமையை வெளி ப்படுத்துபவர்கள் பதக்கம் அணிவித்துக் கௌரவிக்கப்படுவர். ஆர்வமுடையவர்கள் யோகா பயிற்சி நெறியில் இணைந்து பயனடைய முடியுமென்று யோகா உலகம் அறிவித்துள்ளது. (இ)

# ஆடலரசி பாலசரஸ்வதி நூற்றாண்டு கருத்தரங்கம்

(யாழ்ப்பாணம்)

தமிழ் ஆடற்கலை மன்றம் நிகழ்த்தும் ஆடலரசி பாலசரஸ்வதி நூற்றாண்டு கருத்தரங்கம் நாளை 24 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். நீராவியடி இலங்கை வேந்தன் மண்டபத்தில் இடம் பெறும். இதில் தொடக்கவுரையை யாழ்.பல்கலைக் கழக நடனத்துறை முதுநிலை விரிவுரையாளர் அருட்செல்வி கிருபைராஜாவும் தலைமையுரையை சமூக ஆய்வாளர் தெ.மதுசூதனனும் கருத்துரைகளை யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் இ.விக்னேஸ்வரன், யாழ். பல்கலைக்கழக, இராமநாதன்நுண்கலைக்கழக மேனாள் தலைவர் பேராசிரியர் சபா. ஜெயராசா, சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகப் பணிப்பாளர் முனைவர் சி.ஜெயசங்கர், மூத்த ஆடற் கலைஞர் வே.வேலாணந்தன், இலங்கைவேந்தன் கலைக்கல்லூரி நிறுவுநர் க.ராதாகிருஷ்னன், யாழ். பல்கலைக்கழக நடனத் துறை மேனாள் தலைவர் முனைவர் கிருஷாந்தி ரவீந்திரா, திலக நர்த்தனாலய இயக்குநர், யசோதரா விவேகானந்தன், மேனாள் நடன ஆசிரிய ஆலோசகர் பத்மினி தெய்வேந்திரகுமார் ஆகியோர் வழங்குவர். "தமிழ் ஆடல் மரபில் பாலசரஸ்வதி" எனும் தலைப்பில் ஆய்வாளர், முனைவர் ஜெ.அரங்கராஜ் சிறப்புரை நிகழ்த்துவார். (இ)

# இராசி பலன்

**மீனம்:** மனதில் இனம் புரியாத சஞ்சலங்கள் ஏற்பட்டு மறையும், புதிய பொருட்கள் வாங்கும் எண்ணம் உருவாகும், எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை எடுப்பீர்கள்.

**மேடம்:** வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், பொது வாழ்வில் மதிப்பு உயரும் நாள்.

**இடபம்:** உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், ஆரோக்கியமான நாள்.

**மிதுனம்:** வழிபாட்டால் வளர்ச்சி காண வேண்டிய நாள், எதிலும் அவசரத்தை தவிர்ப்பது நல்லது, தொழிலில் ஏற்பட்ட குழப்பங்கள் அகலும்.

**கும்பம்:** ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், உடல் நலனில் கவனம் தேவை, சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கலாம், போசன சுகமுண்டு.

**கடகம்:** ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல்கள் தோன்றி மறையும், பிரயாண பயமுண்டு, எடுத்த காரியங்களை முடிப்பதில் சில இடையூறுகள் ஏற்படலாம், விரயங்கள் கூடும்.

**மகரம்:** நண்பர்கள் மூலம் சுப தகவல்கள் வந்து சேரலாம், பித்த சம்பந்தமான ரோக பயமுண்டு, முன்கோபமும் அலைச்சலும் ஏற்படலாம்.

**சிம்மம்:** கடன் பிரச்சினைகளை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், சொந்த பந்தங்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும்.

**தனுசு:** அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள், உடன் பிறப்புக்கள் உங்களின் நலனில் அதிக அக்கறை காட்டுவர், பொருளாதார நிலை உயரும்.

**விருச்சிகம்:** வழிபாடுகளில் நம்பிக்கை வைப்பீர்கள், வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**துலாம்:** பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும்.

**கன்னி:** குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும், மருத்துவச் செலவுகள் குறையும், காரிய அனுகூலமுண்டு, வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**இராசி பலன்** — கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| | | | |
| சந் | இராசி பலன் கிரகநிலை | | ராகு |
| கேது, செவ் | சந்திராஷ்டமம் ஆயிலியம், மகம் | | |
| சனி | | குரு, சுக் | சூரி, புத |

**23.09.2018**

புரட்டாதி 07, ஞாயிற்றுக்கிழமை
சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு
திரயோதசி காலை 6.16 மணிவரை
சதயம் முன்னிரவு 11.07 மணிவரை
சுபநேரம் 9.02-10.32 மணிவரை
இராகுகாலம் 04.32-06.02 மணிவரை
நடேசரபிஷேகம்

வளவன்

# தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலில் பேதங்கள் இன்றி அனைவரும் பங்கேற்கவும்

## யாழ்.மாநகர சபை தீர்மானத்தின் பின் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தியாக தீபம் திலீபனின் நினைவு நாள் இறுதி நிகழ்வை யாழ். மாநகரசபையே நடத்தும் என்றும், நிகழ்வில் உரைகள் இடம்பெறுவதற்கு அனுமதி இல்லை என்பதுடன் பேதங்கள் இன்றி நிகழ்வில் அனைவரும் பங்குகொள்ள வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகர சபையினால் எதிர்வரும் 26 ஆம் திகதி நடத்தப்படவுள்ள தியாகி திலீபனின் நினைவேந்தல் ஏற்பாடுகள் தொடர்பாக நேற்றுச் சனிக்கிழமை காலை இடம்பெற்ற மாநகர சபை உறுப்பினர்களுக்கான விசேட கூட்டத்தில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேற்படி கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் பிரகாரம், நல்லூர்க் கந்தசுவாமி கோவிலுக்கு வட கிழக்கு மூலையில் - தியாகி திலீபன் உண்ணாவிரதமிருந்து உயிர்நீத்த இடத்தில், அவர் உயிர் நீத்த முற்பகல் 10.48 மணிக்கு அகவணக்கம் செலுத்தப்படும்.



பின்னர், நல்லூர் சிவன் ஆலயத்தின் பின்புறமாக - பருத்தித்துறை வீதியில் (நல்லூரில்) தியாக தீபம் திலீபன் நினைவுத் தூபி அமைந்திருந்த இடத்தில் நினைவேந்தல் நிகழ்வு இடம்பெறும் என முடிவு செய்யப்பட்டுள்ளது.

நினைவேந்தல் நிகழ்வின் போது, பொதுச் சுடரேற்றல், ஈகச் சுடரேற்றல், தியாகி திலீபனின் உருவப்படத்துக்கு மலர் மாலை அணிவித்தல் முதலியவற்றை மாவீரர் குடும்ப அங்கத்தவர்களைக் கொண்டு செய்வது என்றும், அதன் பின்னர் வருகை தரும் அனைவரும் எதுவித பேதங்களுமின்றி மலர் தூவி அஞ்சலி செய்வதற்கு ஒழுங்குபடுத்துவதெனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

நினைவேந்தல் நிகழ்வில் உரைகள் இடம்பெறுவதற்கு அனுமதிப்பதில்லை என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை - நினைவேந்தல் நிகழ்வு இடம்பெறும் இடத்துக்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும், நிகழ்வு இடம்பெறும் நேரத்தில் - முற்பகல் 10 மணி முதல் நண்பகல் 12 மணி வரை பருத்தித்துறை வீதியில் நல்லூர் சிவன் கோவிலுக்குப் பின்புறமான போக்குவரத்துக்காக மாற்றுப் பாதை ஒழுங்கை அறிவிப்பதெனவும் யாழ். மாநகர முதல்வர் கூட்டத்தில் தெரிவித்துள்ளார். (இ-9-101)

### உணவு தவிர்ப்பு

## அரசியல் கைதிகள் இருவர் வைத்தியசாலையில் அனுமதி

(அநுராதபுரம்)

அநுராதபுரம் சிறைச்சாலையில் உணவுதவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள கைதிகளில் இருவரின் உடல் நிலை மோசமடைந்த நிலையில் சிறைச்சாலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அநுராதபுரம்சிறைச்சாலையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் 8 பேர் தமது விடுதலையை வலியுறுத்தி கடந்த 14 ஆம் திகதியில் இருந்து தொடர்உணவுதவிர்ப்பு போராட்டத்தில்ஈடுபட்டுவருகின்றனர்.

பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு 9 வருடங்களுக்கு மேலாக சிறையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள கைதிகளான யாழ்ப்பாணத்தை சேர்ந்த மதியரசன் சுலக்ஷன், இராசதுரை திருவருள், சிவசுப்பிரமணியம் தில்லைராஜ், இராசாபல்லவன் தபோரூபன், இராசதுரை ஜெகன், சூரியகாந்தி ஜெயச்சந்திரன், கிளிநொச்சியை சேர்ந்த சிவப்பிரகாசம் சிவசீலன், வவுனியாவை சேர்ந்த தங்கவேல் நிமலன் ஆகிய 8 கைதிகள், தம்மை அரசு குறுகிய புனர்வாழ்வு அளித்து விடுதலை செய்ய வேண்டும் அல்லது வழக்குகளை விரைவுபடுத்தி விடுதலை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து உடல் நிலை மோசமடைந்த நிலையில் ஒரு வாரமாக தொடர்ச்சியான உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்களை பாராளுமன்ற உறுப்பினார்களான சிவசக்தி ஆனந்தன், திருமதி சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா, ஆகியோர் சென்று பார்வையிட்டிருந்தனர். இவர்களில் ஜெயச்சந்திரன், தபோரூபன் ஆகியோர் நேற்று முன்தினம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் ஏனையவர்கள் உடல் நிலை பலவீனமடைந்த நிலையில் தமது போராட்டத்தை தொடர்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-9)

## சர்வதேச செவிப்புலனற்றோர் தினம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை செவிப்புலனற்றோர் மத்திய சம்மேளனமும் அம்பாறை மாவட்ட செய லகமும் இணைந்து சர்வதேச செவிப்புலனற்றோர் தினத்தை இன்று 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிமுதல் பிற்பகல் 2.30 மணி வரை சம்மாந்துறை நகர சபை அப்துல் மஜத் மண்டபத்தில் நடத்துவதாக வடமராட்சி செவிப்புலனற்றோர் நிறுவனத் தலைவர் த.செந்தில்குமார் அறிவித்துள்ளார். (இ

## சதித்திட்டத்தின் ஓர் அங்கமே உறுப்பினர்களின் பதவி நீக்கம்

### இந்திக்க அநுருத்த காட்டம்



(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களை கட்சியிலிருந்து நீக்கும் சூட்சுமமான வேலைத் திட்டம் மேற்கொள்ளப்படுகின்றது. அதன் ஓர் அங்கமாகவே சிரேஷ்ட உறுப்பினர்கள் பலர் அமைப்பாளர் பதவியிலிருந்து நீக்கப்பட்டிருக்கின்றனர் என கூட்டு எதிரணி பாராளுமன்ற உறுப்பினர் இந்திக்க அநுருத்த தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி காரியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் கொள்கைக்கு மாறாக செயற்படும் இவர்கள், கட்சியை கீழ்மட்டத்துக்கு கொண்டு செல்லும் சதித்திட்டத்தின் ஓர் அங்கமே சிரேஷ்ட உறுப்பினர்கள் அவர்களது தொகுதி அமைப்பாளர் பதவியில் இருந்து நீக்கப்பட்டிருக்கின்றது.

அத்துடன் கட்சியை அதள பாதாளத்துக்கு கொண்டு செல்வதே இவர்களின் இறுதி நடவடிக்கையாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# நல்லாட்சியை வீட்டுக்கு அனுப்பும் வரை ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடையும்

## கூட்டு எதிர்க்கட்சி கூறுகிறது

(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்பி, புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வரும் வரையில் ரூபாவின் பெறுமதி தொடர்ந்து வீழ்ச்சியடைவதை ஒருபோதும் தவிர்க்க முடியாது. எனவே நாட்டில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என கூட்டு எதிர்க்கட்சி கேட்டுக்கொண்டுள்ளது.

ரூபாவின் பெறுமானம் தொடந்து வீழ்ச்சி கண்டு வருகின்றமை தொடர்பில் கூட்டு எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் பாராளுமன்ற உறுப்பினர் தாரக பாலசூரியவிடம் வினவிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது முதல் ரூபாவின் பெறுமதி தொடர்ந்து வீழ்ச்சி கண்டு வருகிறது. அதனை பேணுவதற்கு அரசாங்கத்தால் முடியாதுள்ளது. அதனாலேயே அடிக்கடி பொருட்களின் விலை அதிகரிக்கப்படுகிறது.

மக்கள் மூன்று வேளை உண்டு வாழ முடியாத நிர்க்கதி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இருந்தபோதிலும் அரசாங்கம் அது தொடர்பில் கவனம் செலுத்துவதாக இல்லை. அத்துடன் தேசிய வளங்களை விற்பனை செய்தாவது ஆட்சியை முன்னெடுத்துச் செல்வதற்கே அரசாங்கம் எதிர்பார்ப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

கண்ணீர் அஞ்சலி



அமரர். தங்கராசா தவமணி

உடுப்பிட்டியை பிறப்பிடமாகவும் தற்போது கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி.தங்கராசா தவமணி (ஓய்வு பெற்ற ஆசிரியை) அவர்கள் கனடாவில் 20.09.2018 இறைபதமடைந்த செய்தி காற்றுடன் கலந்து வந்து எம்மை ஆழ்ந்த துயரத்தில் ஆழ்த்தியது. அன்னாரின் இழப்பால் துயருற்று இருக்கும் குடும்பத்தினரின் துயரில் கலந்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய அன்னை மனோன்மணி அம்பாளை பிரார்த்திக்கின்றோம்.

துயர் பகிரும் : ஸ்ரீ மனோன்மணி அம்பாளின் அடியார்கள்
உடுப்பிட்டி வடக்கு, கொம்மந்தறை.

077 671 0437

(C-3909)



# அகில இலங்கை யாழ். நல்லூர் நாவலர் வீதி மடத்தார்பதி சீரடி சாயி மந்திர் ஈழத்துச் சீரடியின் தேர்த்திருவிழா சிறப்புமலர்- 23.09.2018

## அருளாசிச்செய்தி



சீரடி சாயி மந்திர் பாபா கோயில் தேர்த் திருவிழாவிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகிறேன்.

அற்புதம் காட்டி ஆனந்த கோலா கல வாழ்வு தருகின்ற இக்கோயிலின் மூலமூர்த் தியான ஸ்ரீ சீரடி சாயி பாபா எழுந்தருளி வீற்றிருந்து ஆரோகணித்து அருள்புரிந்து வருகிறார். பக்தர்களின் வேண்டுதல்கள் எதுவானாலும் சீரடி சாயி பாபா தீர்த்து வைப்பதை இங்கு கூடும் பக்தர்களின் வாக்கு மூலத்தில் அறிந்து கொள்ளலாம். அவதாரப் புருஷனாக பாபாவின் அற்புதங்களை நினைக்கும் போது உள்ளம் பூரித்துப் போகிறது.

சீரடி சாயி மந்திரில் இருந்து அருளாசி புரியும் பாபாவின் தேர் உற்சவ நிகழ்வு சிறப்புற இறையருள் வேண்டி அமைகின்றேன்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், ஆதீன குருமுதல்வர், இரண்டாவது குரு மஹா சந்நிதானம், நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம், யாழ்ப்பாணம்.**

## வாழ்த்துச்செய்தி



நாவலர் வீதி நல்லூர் பதியிலே அமைந்து அடியவர்களுக்கெல்லாம் அருள் பாலித்துக் கொண்டிருக்கின்ற சீரடி சாயி நாதர் இன்று தேரேறி வருகின்ற அற்புதமான காட்சி சிறப்பானதாகும்.

இன்று தேரேறி வருகின்ற சாயிநாதனுடைய திருத்தேர் வடம் தொட்டிழுத்து வாழ்வில் இன்பமும் சகல சௌபாக்கியங்களும் பெற்று வாழ்வோமாக! "ஸ்ரீசாய்ராம்"

திரு.அ.கிருபாகரன்
அதிபர்,கிருபா லேணர்ஸ்.

**இன்று காலை 7.30 மணிகரு-வசந்தமண்டபப்பூஜை**
**8.30 மணிக்கு -தேர் உற்சவம்**



## வாழ்த்துச் செய்தி



யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் அமைந்துள்ள சீரடி சாயி நாதருடைய தேர்த்திருவிழாவிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகிறேன். கேட்டவர்க்கு கேட்ட வரத்தினை குறைவின்றி வாரி வழங்குகின்ற சாயி நாதர் இன்று பெருமளவிலான பக்தர்களுடன் நாவலர் வீதியில் அமைந்துள்ள சீரடி சாயி ஆலயத்தில் சாயி நாதர் தேரில் ஏறி திருவீதி வருவதையிட்டு நினைத்து சந்தோசப்படுகிறேன்.

சாயி நாதருடைய திருத்தலத்துக்கு வருகின்ற ஒவ்வொரு பக்தர்களுக்கும் அவர்கள் நினைக்கின்ற வரத்தினை வழ்ங்குகின்ற வல்லமை சாயி நாதரிடம் உண்டு. ஒவ்வொரு வியாழக்கிழமையிலும் சாயி நாதரிடம் வருகின்ற பக்தர்கள் ஏதோ ஒரு வகையில் மன நிம்மதியையும் சகல சௌபாக்கியங்களையும் பெற்றவர்களாகவே இருக்கின்றார்கள் என்பதில் எந்த ஐயப்பாடும் இல்லை.

ஆகவே இவ்வையகத்தில் வாழும் ஒவ்வொருவருக்கும் சாயி நாதருடைய அருள் கிடைத்து வாழ்வில் பல வழியிலும் முன்னேற்றங்களைப் பெற வேண்டி இத்தேர்த்திருநாளிலே வாழ்த்தி வணங்குகின்றேன்.

லயன்.எம்.றமேஸ்குமார்.

## அருளாசிச்செய்தி



ஓம் சாய் ராம்
"கற்பகவளம் சுரக்கும் கருணை நாயகனே போற்றி
அற்புத வரம் தந்து எமை ஆண்டாய் போற்றி
பொற்புயர் நாவலர் வீதி மடத்தார் பதிமேவும்
அற்புத சீரடி சாயி நாதனே போற்றி போற்றி"

சாயி நாதனுடைய வருடாந்த திவ்ய பிரமோற்சவத்தின் மிக முக்கிய திருவிழாவான தேர்த் திருவிழா இன்றாகும். ஈழத் திருநாட்டின் யாழ்.நகரிலே நல்லையம்பதி நாவலர் வீதி மடத்தார் பதிமேவும் ஸ்ரீ சீரடி சாயிநாதன் திருத்தேரிலே இன்று ஆரோகணிக்கவுள்ளார். இலங்கை திருநாட்டில் சாயி நாதருக்காக அமைக்கப்பட்ட முதலாவது தேர் இதுவாகும். ஆகம முறைப் படியும் சிற்பசாஸ்திர விதிகளின் படியும் அமைக்கப்பட்ட தேரிலே பெருமான் ஆரோகணிக்கவுள்ளார். 2012 ஆம் ஆண்டு இலங்கையில் முதன் முதலாக தேர்த்திருவிழா சாயி நாதருக்கு நடைபெற்றது. மேலும் 16 தினங்கள் கொண்டதாக திருவிழா நடைபெறுகிறது.

எனவே அனைத்து அடியவர்களும் கலந்து ஈழத்து சீரடி சாயி நாதனுடைய திருத்தேர் வடம் பிடித்து இழுத்து பாபாவின் திருவருளை பெறுமாறு வேண்டுகிறோம்.

சிவ விஷ்ணு பிரம்மா முவுருக்கொண்ட பிரம்மம் ஸ்ரீ அண்டி வந்தோர்க்கெல்லாம் அருள்புரியவென யாழ்.நல்லையம்பதி மடத்தார் பதி வந்தமர்ந்த தத்தாத்திரேய சொரூபம் நீ, பஞ்சம் நீங்கிடவும் நெஞ்சமது மகிழ்ந்திடவும் நல்லாசி அருளோடு திருத்தேரிலே ஆரோகணித்து நயமான வாழ்வு தந்திடுவாய் ஈழத்து சீரடி வாழ் நாயகனே.

பா. ராகவன் (ஆலய ஸ்தாபகர்)

## சாயி சரணம்

சாயியே உம்மிடத்தில் எமக்கு கோரிக்கைகள் ஆயிரம்
அவை நிறைவேற வேண்டும் என்ற ஆசைகள் நூறாயிரம்
இவைகளுக்கு மேல் உன்மேல் உள்ள நம்பிக்கையோ
கோடான கோடி சாயி சரணம்!!!சரணம்!!!

பூ.பகீஜா

மலரமைப்பு:- எஸ்.ஞானேஸ்வரன்
புன்னாலைக்கட்டுவன்






















# வல்லிபுர ஆழ்வார் தேர்த்திருவிழா



சிறப்பு மலர்- 23.09.2018


யாழ்.மாவட்ட மக்களின் மனங்களில் முதற்தர
சுத்தமான குடிதண்ணீர் என்ற தனி நாமத்தைப் பெற்ற...

**American Water**

**American Just drink it!**

யாழ். மாவட்ட ஏக விநியோகஸ்தர்கள்



**P.N.K. Group**




**589, K.K.S.Road, Jaffna.**

**T.P :- 021 221 7277, 021 222 3096**

**AACHE HOT FOOD AND FOOD FACTORY KAITHADY**

- சகல அரச நிறுவனங்களின் நிதி ஒதுக்கீட்டுக்கு அமைய மிக மிக தரமான உணவுகளை குறைந்த விலையில் வழங்கிக் கொண்டிருக்கும் ஒரே ஒரு ஸ்தாபனம் ஆச்சி ஹொட் பூட்.
- கல்வி பயிலும் மாணவ சமூகத்திற்காக விசேட விலைக் கழிவுகளில் பாடசாலைகளுக்கு உணவு விநியோகம்.
- இன்று வடமாகாணத்தில் அதிகளவான உணவுகளை உற்பத்தி செய்து வாடிக்கையாளர்களுக்கு கட்டாயமாக்கப்பட்ட ஒரு நிறுவனமாக உள்ளது.
- நேரடி மேற்பார்வையின் கீழ் உணவு உற்பத்தி. பொதியிடல், விநியோக செயற்பாடுகள்.
- கைதடி உணவுத் தொழிற்சாலையை பார்வையிட்டு உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளலாம்.
- திருப்திகரமான உணவுடன் கூடிய சேவையே எமது பிரதான நோக்கம் ஆகும்.
- கைதடி மற்றும் வடக்கு விவசாயிகளின் வாழ்வுக்கு வலுவூட்டுவோம்.
- தினசரி கூடுதலான விவசாய உற்பத்தி பொருட்களை கொள்வனவு செய்து சுய வருவாயை ஈட்டிக் கொள்ளவும்.
- சிறந்தவொரு வாழ்க்கையை முன்னெடுக்கவும் உதவி வருகிறது.
- கடுமையான தரக்கட்டுப்பாட்டு சோதனைக்கு உட்படுத்தப்பட்டு அதி உயர்தரம் உறுதி செய்யப்படுகிறது.





**Aache Food Factory, Kaithady.**
**021 205 7455, 021 205 7456**

**Aache Hot Food Resturant**
**147, Palaly Rood, Thirunelvely,**
**021 222 5001**









# வல்லிபுர ஆழ்வார் தேர்த்திருவிழா



சிறப்பு மலர்- 23.09.2018

## அரச அங்கீகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை



## நியூ நெல்சன் லேணர்ஸ்

## New Nelson Learners

89, Kandy Road,
Chundukuli,
Jaffna.

T.P : 021 222 4527,
077 358 1916,
077 790 6064
Fax : 021 222 9109

- சாரதி பயிற்சிகள் எமது அலுவலகத்தில் இருந்து ஆரம்பிக்கப்படும்.
- சகல வாகனங்களுக்கும் அனுபவம் மிக்க சாரதிகளால் சிறந்த முறையில் பயிற்றுவித்து விரைவாக சாரதி அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொடுக்கப்படும்.
- எழுத்துப் பரீட்சையில் சித்தியடைய விசேட வகுப்புகள்.
- அதிகூடிய பயிற்சி நேரங்கள். அதிகூடிய பயிற்சிக் காலங்கள். தவணைமுறைக் கட்டணங்கள்.
- வீதி ஒழுங்கு நூல் இலவசமாக வழங்கப்படும்.
- நவீன வாகனங்களில் வாகனப் பயிற்சிகள்.





### கிளைகள்

| | | | |
|---|---|---|---|
| இல.89, கண்டி வீதி, சுண்டுக்குளி. 021 222 4527 077 358 1916 | பஸ் நிலையம், சுன்னாகம். 077 715 0097 021 492 3732 | பிரதான வீதி, வல்வெட்டித்துறை. 077 557 3711 021 492 3733 | காவிகோயில் வீதி, சாவகச்சேரி. 021 492 3114 077 761 1686 |
| குறிகட்டுவான் வீதி, வங்களாவடி, வேலணை 077 730 6980 071 454 6940 | இல.127, பருத்தித்துறை வீதி, நெல்லியடி, கரவெட்டி. 021 492 3115 077 111 3382 | | |






## நியூ வீ.எம்.கே ஜுவல்லர்ஸ்

Manufacturers of Gold Jewels

80/30, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. இல : 021 720 1117,
021 222 2515, 0777 849 369

60 வருடங்களுக்கு மேலாக வடமாகாணத்தில் அனைத்து வைபவங்களுக்கும் கலை நயத்துடன் கூடிய டிசைன்களில் தங்க நகைகளை உங்களுக்கு ஏற்ற விதத்தில் வடிவமைத்து கொடுக்கும் கைராசியான ஸ்தாபனம்.





வீ.எம்.கே. ஸ்தாபனத்தில் தங்க நகைகளைப் பெற்று என்றுமே குறையாத இன்பத்தைப் பெற்றிட அன்போடு அழைக்கின்றோம்

வீ.எம்.கே ஜுவல்லர்ஸ்
என்றும் முதற்தர தங்க நகைகளுக்கு
கண்டி வீதி, சாவகச்சேரி.
T.P : 021 227 1616

உங்கள் நல்வரவை இனிதே விரும்பும்
V.M.K குலேந்திரன் - அபராஜிதன்

# கிருபா லேணர்ஸ்

## சாரதி பயிற்சிப் பாடசாலை



- ஆண், பெண் இருபாலாருக்கும் (AUTO GEAR AND MANUAL) வாகனப் பயிற்சி.
- பெண்களுக்கு நவீன காரில் பெண் பயிற்சியாளர்களால் பயிற்சி.
- விசேட வீடியோ வகுப்புக்கள்.
- விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
- தவணை முறைக் கட்டண வசதி.
- விரும்பிய நேரத்தை தெரிவு செய்யும் வசதி.
- இரவு நேர வாகனப் பயிற்சி.
- அனுபவம் வாய்ந்த பயிற்சியாளர்களால் மும்மொழிகளிலும் பயிற்சி.

226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 - 222 - 4353
021 - 492 - 3200
077 - 722 - 5292

கண்டி வீதி, சாவகச்சேரி
021 - 227 - 0700
021 - 492 - 3202

A9 வீதி, கிளிநொச்சி. (கச்சேரி முன்பாக)
021 - 228 - 5505
071 - 454 - 6955

இல.216, A9 வீதி வவுனியா (வசந்தி திரையரங்கு முன்பாக)
024 - 222 7777
0777 - 100 - 444

இல.227/6, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம். (மதவடி அண்மையில்)
021 - 224 - 2022
071 - 454 - 6956


விக்னேஸ்வரா கல்லூரி வீதி, நெல்லியடி.
021 - 300 - 6550
071 - 454 - 6957

இல.94, பிரதான வீதி, மன்னார்.
071 - 988 - 7699, 077 - 847 - 2732

புளியடிச்சந்தி, முல்லைவீதி, விசுவமடு.
021 - 320 - 1515, 071 - 454 - 6955

நாச்சிக்குடா சந்தி, மன்னார் வீதி, முழங்காவில்.
021 - 300 - 6544, 071 - 454 - 6955

வாடியடி சந்தி, பூநகரி.
021 - 320 - 1818, 071 - 454 - 6955



# வல்லிபுர ஆழ்வார் தேர்த்திருவிழா

சிறப்பு மலர்- 23.09.2018




சுப முகூர்த்த பட்டுப்புடவைகளுக்குக் கைராசியான ஒரே நிறுவனம்...

## த.சங்கரப்பிள்ளை அன் சன்ஸ்

- 40 வருட பாரம்பரியமுள்ள மொத்த சில்லறை விற்பனையாளர்
- பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கான சல்வார் வகைகள்
- ரொப், லெக்ஜீன்ஸ் பஞ்சாபி வகைகள்
- Party Frocks வகைகள்
- ஆண்களுக்கான ஜீன்ஸ், சேட், ரீ சேட், குர்தா வகைகளையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் கொள்வனவு செய்ய நீங்கள் நாடவேண்டிய நம்பிக்கைக்குரிய கைராசியான ஒரே ஸ்தாபனம்

## T.SANGARAPPILLAI & SONS

21, Modern Market Power House Road, Jaffna.

கிளை
பிரமாண்டமான காட்சியறை
225C ஆஸ்பத்திரி பின்பக்கம்
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
021 221 5397

Email :sangarappillaiandsons@gmail.com




நீர் சுத்திகரிப்புடன் தொடர்புடைய அனைத்து பிரச்சினைகளுக்கும் பொருத்தமான நிபுணத்துவ தீர்வுக்கான ஒரே இடம்.

மத்திய சுற்றாடல் அதிகாரசபையால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்

★எல்லா அளவிலுமான வீட்டிற்கும் ,தொழிற்சாலைக்கான RO சுத்திகரிப்பு இயந்திரங்கள்.

★நீரின் கல்சியத்தை நீக்கி மென்மையாக்கும் (Water Softener) இயந்திரம்.

★வீடு , தொழிற்சாலை கழிவுநீர் சுத்திகரிப்பு.

★நீச்சல் தடாக வடிவமைப்பு மற்றும் பராமரிப்பு.

இலகு தவணைக்கட்டண முறையிலும் பெற்றுக்கொள்ளலாம் (நிபந்தனைகளுக்குட்பட்டது)

இல. 677, கரடிப்போக்குச் சந்தி, A9 வீதி, கிளிநொச்சி.
(hot line) 021 228 4888, 075 331 3302

WE ACCEPT MasterCard VISA

## Everpure Hi-Tec (Pvt) Ltd.

No.341, K.K.S Road, Jaffna.



காலங்கள் மாறலாம். அதுபோல் நாமும்,
புதிய பழக்க வழக்கங்கள். அனுபவங்கள்,
அங்கீகாரங்கள், பொறுப்புக்கள்,
இந்த மாற்றங்கள் எல்லாம் வளர்ச்சியின் ஒரு பாகம்,
இருப்பினும், இப்படியொரு மாற்றங்கள்
நமக்குள் இருந்தாலும்
சில பொருட்கள் நம்மிடையே
என்றுமே மாறுவதில்லை.
எத்தனையோ மாற்றங்களிலும்
ஒன்று மட்டும் என்றுமே
மாறாது. உறவுகள்...

தங்கமான உறவு
இப்பொழுது
புதிய பொலிவுடன்

நியூ உதயா ஜுவல்லர்ஸ்

தங்கப்பவுண் நகை வியாபாரம்

Thank You

NEW Uthayaa JEWELLERS

021 222 2031 · No. 91, Power House Road, Jaffna · Newuthaya
newuthayajwellrs@gmail.com · uthaya.new

# வல்லிபுர ஆழ்வார் தேர்த்திருவிழா

சிறப்பு மலர்- 23.09.2018






























## "அரசியல் கைதிகளின் கோரிக்கையை உடனே நிறைவேற்று"

# அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வலியுறுத்தி வவுனியாவில் வீதியை மறித்து நேற்று கவனயீர்ப்பு
















(குருமன்காடு)

வவுனியாவில் அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு கோரி நேற்று முற்பகல் 10மணியளவில் வவுனியா பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் பாரிய கவனயீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது. போராட்டத்தின் காரணமாக ஏ9 பிரதான வீதியின் போக்குவரத்து சுமார் 20 நிமிடங்கள் வரை மூடப்பட்டது.

அரசியல் கைதிகள் உண்ணாவிரதமிருப்பதும் உறுதிமொழிகள் வழங்கப்படுவதும், பின்பு எந்த நடவடிக்கைகளுமின்றி தொடர் கதையாகவே இருந்து வருகின்றது. இதனால் அரசியல் கைதிகள் மீண்டும் உண்ணாவிரதத்தை ஆரம்பித்துள்ளார்கள். விரைவில் நடவடிக்கை எடுப்போம் என பிரதமர் அறிவிப்பதும், தமிழ்த் தலைமைகள் அரசியல் கைதிகளை சென்று பார்வையிட்டு ஆவன செய்வதாக கூறுவதும், நாங்கள் ஜனாதிபதியுடன் கதைத்து விட்டோம் எல்லாம் சரிவரும் என்று கூறுவதும் மீண்டும் கடந்த தினங்களில் மேடையேற்றப்பட்டு விட்டது.

இளைஞர்களாக கைது செய்யப்பட்டவர்கள் தங்கள் வாழ்வின் அரைவாசிக் காலத்தை சிறைகளில் கழித்து இன்று முதியவர்களாகி விட்டார்கள். இன்றைய நல்லாட்சி அரசு இந்த 137 அரசியல் கைதிகளை விடுதலை செய்யாமலும், விசாரணைகளின்றியும் வைத்திருப்பது அடிப்படை மனித உரிமை மீறலாகும்.

எனவே அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு கோரி வவுனியா மாவட்ட பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் வவுனியா பழைய பேருந்து நிலையத்திற்கு முன்பாக ஆரம்பமான போராட்டமானது பஜார் வீதியூடாக ஹொரவப்பொத்தானை வீதியை வந்தடைந்து ஹொரவப்பொத்தானை வீதியூடாக வவுனியா மாவட்ட செயலகத்தை சென்றடைந்தது. இப் போராட்டத்தின் காரணமாக ஏ-9 பிரதான வீதியின் போக்குவரத்து சுமார் 20 நிமிடங்கள் வரை மூடப்பட்டது.

"விடுதலை செய் விடுதலை செய் அரசியல் கைதிகளை விடுதலை செய்; உண்ணாவிரதிகளின் கோரிக்கையை உடனே நிறைவேற்று; அரசியல் கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கு; ரத்துச் செய் பயங்கரவாத தடைச் சட்டத்தை ரத்து செய்; நல்லாட்சி அரசே அரசியல் கைதிகளும் மனிதர்களே, புனர்வாழ்வளிக்கப்பட்டவர்களை மீண்டும் கைது செய்யாதே என பல்வேறு கோசங்களை எழுப்பியவாறு சுலோகங்களை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பேரணியாகச் சென்ற போராட்டக்காரர்கள் வவுனியா மாவட்ட செயலகத்திற்கு முன்பாகவுள்ள பண்டாரவன்னியன் சிலைக்கு அருகில் ஒன்றிணைந்து போராட்ட ஏற்பாட்டு குழுவின் பேச்சாளர் தயவின் உரையுடன் போராட்டம் நிறைவு பெற்றது.

கவனயீர்ப்பு போராட்டத்தில் தமிழரசு கட்சி, புளொட், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப், சிறிரெலோ, ஈரோஸ், தமிழ் தேசிய மக்கள் முன்னணி, ஈழமக்கள் ஜனநாயக கட்சி, புதிய மாக்சிச லெனின் கட்சி, வவுனியா மாவட்ட முச்சக்கர வண்டி உரிமையாளர் சங்கம், வர்த்தக சங்கம், தனியார் பேருந்து உரிமை யாளர் சங்கம், சிகை அலங்கரிப் பாளர் கூட்டுறவாளர் சங்கம், சமூக நீதிக்கான வெகுசன அமைப்பு, இலங்கை தேசிய அரச பொது ஊழியர் சங்கம், தமிழ் விருட்சம் போன்ற பல்வேறு அமைப்புக்கள் பங்குபற்றியதுடன், பிரதி அமைச்சர் கே.கே.மஸ்தான், பாராளு மன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, செல்வம் அடைக்கலநாதன், சாள்ஸ் நிர்மலநாதன், சாந்தி சிறிஸ்கந்தராஜா, சிவசக்தி ஆனந்தன், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன், வடக்கு விவசாய அமைச்சர் க.சிவநேசன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் களான ப.சத்தியலிங்கம், ஜி.ரி. லிங்கநாதன், இ.இந்திரராஜா, யாழ்.மாநகரசபை உறுப்பினரும் சட்டத்தரணியுமான வி.மணி வண்ணன், அமைச்சர் மனோ கணேசனின் இணைப்பாளர் பாஸ்கரா மற்றும் பல்வேறு பொது அமைப்புக்களும் இதில் கலந்து கொண்டிருந்தன. (2-250)




## மத நல்லிணக்க பரிமாற்று வேலைத்திட்டம்



(மன்னார்)

மதங்கள் மற்றும் இன ரீதியில் தமிழ் மற்றும் முஸ்லிம், சிங்கள மக்கள் மத்தியில் பிரிவினையை நீக்கி நல்லிணக்கத்தையும் ஒற்றுமையையும் ஏற்படுத்தும் வகையில் மன்னார் வாழ்வுதயம் நிறுவனம் ஏற்பாடு செய்திருந்த மூன்று நாள் உறவு பரிமாற்ற வேலைத்திட்டம் நேற்று முன்தினம் மாலையுடன் நிறைவு பெற்றது.

மன்னார் மாவட்டத்தின் அள வக்கை, வட்டக்கண்டல், ஆண்டாங் குளம் போன்ற கிராமங்களில் உள்ள தமிழ் மற்றும் முஸ்லிம் அங்கத்தினரை உள்ளடக்கிய பரிமாற்று வேலைத்திட்ட குழு கடந்த புதன் கிழமை பதுளை பயணமானது.

பதுளை மாவட்டத்தில் உள்ள சமய நல்லிணக்க குழுவுடன் இணைந்து பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொண்டதுடன் பதுளை மாவட்டத்தில் உள்ள பிரசித்திபெற்ற இந்து கோவில், பௌத்த விகாரை மற்றும் முஸ்லிம் அரபு கல்லூரிகளை நேரில் சென்று பார்வையிட்டனர்.

அத்துடன் 2018 ஆண்டுக்கான பொது ஹஜ் விழாவும் அனைத்து மத தலைவர்களை உள்ளடக்கி இடம் பெற்றது.

மன்னார் மாவட்டத்தில் இருந்து பயணமான ஒவ்வொரு தமிழ் முஸ்லிம் குடும்பத்தையும் பதுளையை சேர்ந்த ஒவ்வொரு சிங்கள குடும்பத்தவர்கள் தங்கள் வீடுகளுக்கு அழைத்து சென்று உபசரித்தமையும் குறிப்பிடத்தக்கது. (2)

## வவுனியாவில் சர்வதேச சமாதான தின நிகழ்வுகள்

(பனிக்கன்குளம்)

உலக சமாதான தினத்தை முன்னிட்டு நேற்றுக் காலை 8.30 மணியளவில் வவுனியா முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் இளைஞர்கள, மாணவர்கள் தகவல் நிலையத்தின் இலங்கைக்கான தலைவர் சா.சர்ராஜ் தலைமையில் சர்வதேச சமாதான நிகழ்வு இடம்பெற்றது.

சமாதானத்திற்காக உரிமை எனும் தொனிப் பொருளில் இடம்பெறும் சர்வதேச சமாதான தினம் சர்வ மதத்தலைவர்களின் ஆசீர்வாதத்துடன் ஆரம்பமாகியது.

நிகழ்வில் மீள்குடியேற்றம் புனர்வாழ்வு, வடக்கு மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் கே.காதர் மஸ்தான், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், இலங்கைக்கான சமாதானப் பேரவையின் செயலாளர் நாயகம் வைத்தியர் சூழா சேனரட், பாடசாலையின் அதிபர், முன்னாள் பிரதி அதிபர், கல்வியியலாளர்கள், மாணவர்கள், எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-281)

## சிகிச்சை பலனின்றி குடும்பஸ்தர் உயிரிழப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி ஏ-9 வீதியில் கடந்த 17 ஆம் திங்கட்கிழமை மூன்று வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்திற்குள்ளாகியதில் படுகாயடைந்த குடும்பஸ்தர் நேற்று முன்தினம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி ஏ-9 வீதியில் கடந்த 17 ஆம் திகதி திங்கட்கிழமை மூன்று வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்திற்குள்ளாகியதில் நான்கு பேர் படுகாயமடைந்திருந்தனர்.

இதில் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வந்த வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு பகுதியைச் சேர்ந்த எவியாஸ்தேவராசா (வயது-48) என்பவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். (2-315)

## மனைவி தற்கொலை செய்யக்கூடியவள் அல்லர் மரணத்தில் எனக்கு சந்தேகம் இருக்கிறது-கணவர்

(பரந்தன்)

திருகோணமலையில் காணாமல்போயிருந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்ட கிழக்கு பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாக பெண் விரிவுரையாளரின் மரணத்தில் சந்தேகம் இருப்பதாக அவரது கணவன் வன்னியூர் செந்தூரன் தெரிவித்துள்ளார்

இது தொடர்பில் கணவன் மேலும் தெரிவிக்கையில், எமக்கு திருமணமாகி ஐந்து மாதங்களே ஆகும் நிலையில் எனது மனைவி விரிவுரையாளர் என்பதால் கிழமையில் ஐந்து நாட்கள் திருகோணமலையில் இருப்பார். நான் கிளிநொச்சியில் வேலை பார்ப்பதால் கிளிநொச்சியில் இருப்பேன். வார இறுதி நாட்களில் நான் திருகோணமலைக்குச் செல்வேன். அல்லது எனது மனைவி கற்சிலைமடுவில் உள்ள எமது வீட்டுக்கு வருவார்.

கடந்த வாரம் கூட அவர் தான் இங்கு வந்திருந்தார். அவர் கர்ப்பிணியாக இருப்பதனால் பதிவ்கள் மாற்றப்பட வேண்டிய தேவை இருந்தது. கடந்த 19 ஆம் திகதி புதன் கிழமை எனக்கு குறுந்தகவல் ஒன்றை அனுப்பி இருந்தார். நான் இரண்டு நாட்கள் விடுமுறை எடுத்துக்கொண்டு வருகிறேன். எங்கள் பதிவுகளையும் மேற்கொண்டு எனது அம்மா வீட்டுக்கும் செல்வோம். அதன் பின்னர் அவரது தொலைபேசி வேலை செய்யவில்லை. நான் நினைத்தேன் சிலவேளை வேலைப்பளு எனில் அவரது அம்மா வீட்டுக்கு சென்றிருப்பார் என்று.

பின்னர்தான் அவரது அம்மாவும் அங்கு வரவில்லை, காணவில்லை எனச் சொன்னார். பின்னர் அவரது கைப்பை திருகோணமலை நகர கடற்கரைப் பகுதியில் இருப்பதாகவும் சடலம் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. இதனைக் கேட்டு அதிர்ச்சியடைந்தேன். எனது மனைவி தற்கொலை செய்யக் கூடியவள் அல்லர். அதற்கான எந்தத் தேவையும் இல்லை. இந்த மரணத்தில் எனக்கு சந்தேகம் இருக்கிறது எனத் தெரிவித்துள்ளார்.

குறித்த விரிவுரையாளரின் மரணத்துடன் சம்பந்தப்பட்டிருக்கலாம் எனும் சந்தேகத்தில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-312)

# விமானக்குண்டுவீச்சில் படுகொலை செய்யப்பட்ட நாகர்கோவில் மாணவர்களின் நினைவேந்தல்








நாகர்கோவில் மகாவித்தியாலயம் மீது இலங்கை விமானப்படையினர் மேற்கொண்ட குண்டு வீச்சு தாக்குதலில் படுகொலை செய்யப்பட்ட 22 மாணவர்களின் 23 ஆம் ஆண்டு நினைவேந்தல் நேற்று சனிக்கிழமை பாடசாலையில் மருதங்கேணி கோட்டக்கல்விப் பணிப்பாளர் ச.திரவியராசா தலைமையில் நடைபெற்றது. (படங்கள்: மகாலிங்கம்)





நற்பணி நண்பர்கள் அமைப்பின் ஆதரவுடன் வலிகாமம் வடக்கு பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் ஏற்பாட்டில் தெல்லிப்பழை புற்றுநோயாளர்களுக்காக நிதி திரட்டும் மாபெரும் நடைபவனி புற்றுநோயாளர்களுக்கான புதுப்பயணம் எனும் தொனிப்பொருளில் நேற்று சனிக்கிழமை காலை 8.30 மணியளவில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் இருந்து யாழ். மாநகர சபை மைதானம் வரையில் இடம்பெற்றது. இதில் இளைஞர், யுவதிகள், வைத்தியசாலை ஊழியர்கள், சமூக சேவையாளர்கள், நலன்விரும்பிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (படங்கள்: பொ.சோபிகா)

## அரசியலமைப்புச் சபைக்கு சிவில் பிரதிநிதிகளை நியமிப்பது குறித்து பிரதமருடன் கலந்துரையாடல்

### தம்மிக தசநாயக்க தெரிவிப்பு



(கொழும்பு)

அரசியலமைப்பு சபைக்கு சிவில் பிரிதிநிதிகளை நியமிப்பது குறித்து பிரதமர் மற்றும் எதிர்க்கட்சி தலைவர் ஆகியோருடன் விரைவில் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்படவுள்ளதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக்க தெரிவித்துள்ளார்.

2015ஆம் ஆண்டு செப்டெம்பர் 22ஆம் திகதி நியமிக்கப்பட்ட சிவில் பிரதிநிதிகளான ஏ.ரி.ஆரியரட்ண, ராதிகா குமாரசுவாமி, சிப்லி அஸீஷ் ஆகியோரின் பதவிக்காலம் நேற்றுடன் நிறை வுக்கு வந்துள்ளது.

இதேவேளை , ஜோன் செனவிரட்ண, விஜித ஹேறாத் சம்பிக ரணவக்க ஆகியோரின் பதவிக்காலம் கடந்த 9 ஆம் திகதியுடன் நிறைவடைந்துள்ளது.

முன்னதாக விஜயதாச ராஜபக்ஷ 2017ஆம் ஆண்டு டிசெம்பர் 28ஆம் திகதி இராஜினாமாச் செய்திருந்தார்.

இந்நிலையில் மேற்படி சபைக்கு ஜனாதிபதியின் பிரதிநிதியாக அமைச்சர் மகிந்த சமரசிங்க மாத்திரமே நியமிக்கப்பட்டுள்ளார்.

ஏனைய உறுப்பினர் கள் இதுவரையில் நியமிக்கப்படவில்லையென தெரிவித்துள்ளார். (இ-7)

## கிழக்குப் பல்கலை. பெண் விரிவுரையாளர் சடலமாக மீட்பு!

(திருமலை)

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாகத்தின் பெண் விரிவுரையாளர் ஒருவர் திருகோணமலை நகர கடலில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கடந்த புதன்கிழமை கடமைகளை முடித்து விட்டு பல்கலைக்ழகத்தில் இருந்து வீடு சென்ற அவர் பிற்பகல் 2.30 மணியளவில் இருந்து காணாமல் போயுள்ளார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் காலை அவரது பாதணிகள் திருகோணமலை கடற்கரையிலிருந்து கண்டெடுக்கப்பட்ட நிலையில், நேற்று முன்தினம் பிற் பகல் சடலம் கடற்கரையில் இருந்து கண்டெடுக்கப்பட் டுள்ளது.

வவுனியா, ஆசிக்குளம் பிரதேசத்தைச் சேர்ந்த 29 வயதுடைய கர்ப்பிணி பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். குறித்த பெண் விரிவுரையாளரின் உயிரிழப்பில் சந்தேகம் இருப்பதாகவும், உயிரிழப்புக்கான காரணம்இது வரை தெரியவில்லை எனறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## தேசிய அரசாங்கத்திலிருந்து விலகாவிடின் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கு வெற்றியில்லை

### சந்திம வீரக்கொடி உறுதி



(கொழும்பு)

தேசிய அரசாங்கத்திலிருந்து விலகாவிடின் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சிக்கு வெற்றி கிடைக்காது என தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி , நல்லாட்சியின் சில தீர்மானங்கள் மிகவும் கவலையளிப்பதாகவும் தெரிவித்தார்.

அரசாங்கத்திலிருந்து விலகிய உறுப்பினர்கள் நால்வரை தொகுதி அமைப்பாளர் பதவியில் இருந்து நீக்கியுள்ளமை குறித்து அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தொகுதி அமைப்பாளர் பதவியிலிருந்து நீக்கியது தொடர்பில் எமக்கு எந்தப் பிரச்சினையும் கிடையாது. எனினும் ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து சுதந்திரக் கட்சியால் முன்னெடுக்கப்படும் சில தீர்மானங்கள் கவலையளிக்கக் கூடியதாகவுள்ளது.

காரணம் இதனால் பொது மக்கள் பாரிய சிக்கல்களுக்கு முகங்கொடுக்க நேர்ந்துள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

## காலை உணவு விசமடைந்ததால் 100 பேர் வைத்தியசாலையில்

(கொழும்பு)

மினுவங்கொடை பகுதியில் காலை உணவு விசமானதால் 100 இற்கும் மேற்பட்டோர் வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மினுவாங்கொடை பகுதியில் இயங்கிவரும் ஆடைத் தொழிற்சாலை ஒன்றிலேயே குறித்த சம்பவம் நேற்று ஏற்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் மினுவாங்கொடை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)




ஹாய் குட்டீஸ்!
எமது சிறுவர் அரங்கம்
பகுதியில்
உங்கள் ஆக்கங்கள் இடம்பெற
வேண்டும் என்றால் உங்கள் சுய ஆக்கங்களை
அனுப்பி வையுங்கள்.

# பொது அறிவு

01. இலங்கையின் தலைநகரம் எது?
**ஸ்ரீ ஜெயவர்தனபுரம்**
02. இலங்கையின் பெரிய நகரம் எது?
**கொழும்பு**
03. இலங்கை எப்போது சுதந்திரம் பெற்றது?
**04.02.1948**
04. இலங்கையில் உயர்ந்த நீர்வீழ்ச்சி எது?
**பம்பரகந்த**
05. இலங்கையில் நீளமான ஆறு எது?
**மகாவலி கங்கை 335 கி. மீ.**
06. இலங்கையின் உயர்ந்த மலை எது?
**பீதுருதாலகால**
07. இலங்கையில் பாவனையில் உள்ள நாணயம்?
**இலங்கை ரூபாய்**
08. இலங்கையில் எத்தனை அரச சேவை மாவட்டங்கள் உள்ளன?
**25 மாவட்டங்கள்**
09. இலங்கையின் தேசிய மரம் எது?
**நாகமரம்**
10. இலங்கையின் தேசியப் பறவை எது?
**காட்டுக்கோழி**
11. இலங்கையின் தேசிய மிருகம் எது?
**யானை**
12. இலங்கையின் தேசிய மலர் எது?
**நீலஅல்லி**

# பழமொழிகளும் விளக்கமும்

### ➢ பந்திக்கு முந்து படைக்கு பிந்து

வீரம் விளைந்த பூமி என்று போற்றப்படும் நமது பூமியில் வீரர்களை படைக்கு பிந்து என்று கூறியிருக்க மாட்டார்கள். பந்தி (விருந்தினர்கள்) என்று வந்தால், அவர்களுக்கு முந்திக் கொண்டு உணவு பரிமாற வேண்டும். விருந்து படைக்கிறவர்கள், விருந்தினர்கள் சாப்பிட்ட பின்பே (பிந்து) சாப்பிட வேண்டும் என்பதே இதன் உண்மையான அர்த்தம். இதுவே பேச்சுவழக்கில் பந்திக்கு முந்து படைக்கு பிந்து என்று மாறிவிட்டது.

### ➢ கல்லைக் கண்டால் நாயைக் காணோம் நாயைக் கண்டால் கல்லைக் காணோம்

பைரவரின் வாகனமாக நாயைப் பார்க்கும் போது, அதை இறைவனின் அம்சமாக நினைத்து வணங்க வேண்டும். நாயின் வடிவத்தில் இருக்கும் கற்சிலையை பார்க்கும் போது அதை நாய் என்று நினைத்தால் நாயாகவும் வெறும் கல் என்று நினைத்தால் கல்லாகவே தெரியும்.

ஒரு பொருளின் அல்லது ஒரு விடயத்தின் அழகும் பெருமையும் காண்பவர்களின் பார்வையைப் பொறுத்தே உள்ளது என்பதே இதன் உண்மையான அர்த்தம். ஆனால் இப்போது நாயைக் கண்டால் கல்லைக் கொண்டு எறிய வேண்டும் என்பதுபோல் இந்தப் பழமொழி அமைந்து விட்டது.

### ➢ அடி உதவுவது போல் அண்ணன் தம்பி உதவமாட்டான்

இங்கு அடி என்பது நிலத்தடியைக் குறிக்கிறது. அந்தக் காலத்தில் பொதுவாக மாதம் மும்மாரி பொழிந்த காலம். ஆறு, குளம், ஏரி என்று எப்போதும் நிறைந்திருக்கும்.

உறவுகள் உன்னைக் காப்பாற்றுவார்கள் என்று நம்பி சோம்பலாக இருக்காதே! நிலத்தை நம்பு, உன் உழைப்பை நம்பு என்பதை விளக்கும் இந்தப் பழமொழியே இப்போது தலைகீழாக மாறி விட்டது

# உலகத்திற்கு உப்பாய் இரு



ஒரு காலத்தில் இந்திரத்யும்னன் என்று ஒரு மாமன்னன் இருந்தான். அவன் ஆட்சிக் காலத்தில் மக்கள் போற்றும் வண்ணம் தான தர்மங்கள் செய்து, சிறப்பாக அரசாண்டு, நேரே சொர்க்கத்திற்குப் போனான். சொர்க்காபுரியின் இன்பத்தில் திளைத்துக் கொண்டிருந்த அவனை ஒரு நாள் சொர்க்கத்தின் "தலை" கூப்பிடுவதாக தேவதூதன் வந்து சொன்னான். மன்னன் சென்று என்னவென்று கேட்ட போது "உனக்கு சொர்க்க வாசம் முடிந்து விட்டது. பூலோகத்திற்கு நாளை கிளம்பத் தயாராக இரு" என்று கட்டளை போட்டது "தலை". ஏனென்று மன்னன் கேட்டான். "நீ செய்த நல்ல காரியங்களை நினைவில் வைத்திருக்க யாருமே இனி மேல் பூலோகத்தில் உயிருடன் இல்லை. இன்றுடன் அந்த கணக்குத் தீர்ந்து விடும். ஆகவே கிளம்பும் வழியைப் பார்" என்று பதில் வந்தது. "இதற்குத் தீர்வே இல்லையா?" என்று மன்னன் முறையிட்டான். "தலை" முகவாயைச் சொறிந்து கொண்டு யோசித்தது. பிறகு "மன்னா, நீ கீழே போய் உனது நற்காரியங்களால் இன்னும் பலன் பெறும் ஒரு ஜீவனை யாவது கண்டு பிடித்தால் உனக்கு சொர்க்கம் நீடிக்கப்படும்" என்று சொன்னது.

மன்னனும் கிளம்பிப் பூலோகம் வந்தான். பல நூறு ஆண்டுகள் கடந்து விட்டிருந்தன. அவன் வாழ்ந்த இடமே தலைகீழாக மாறிப் போயிருந்தது. மக்களில் யாரையும் அவனால் அடையாளம் கண்டு பிடிக்க முடியவில்லை. மனதைத் தேற்றி நம்பிக்கையை ஏற்றிக் கொண்டு விடாமுயற்சியாகத் தேடி, இருப்பதிலேயே வயதான ஒரு மனிதரை சந்தித்தான். அவரிடம் "ஐயா! உமக்கு இந்திரத்யும்னன் என்று இந்தப் பகுதியை அரசாண்ட மன்னனைப் பற்றித் தெரியுமா?" என்று ஆர்வத்துடனும் மிகுந்த எதிர்பார்ப்புடனும் கேட்டான். வயோதிபர் இடுங்கிய கண்களால் அவனை மேலும் கீழும் பார்த்து விட்டு உதட்டைப் பிதுக்கி விட்டார். "வேண்டுமானால் என்னைவிட வயதான ஆந்தை ஒன்று பக்கத்து மரப் பொந்தில் தூங்கிக் கொண்டிருக்கிறது. இரவில் அது விழித்த பின் அதனிடம் போய்க் கேள்" என்று சொல்லி விட்டார்.

வேறு வழியில்லாமல் இரவு வரை கோவில் நிழலில் உட்கார்ந்திருந்து விட்டு இரவு ஆந்தையைப் பார்த்தான். தலையை முதுகுப் பக்கம் வைத்து ஒரு இரையைக் குறி வைத்துக் கொண்டிருந்த ஆந்தையிடம் இந்திரத்யும்னனைப் பற்றிக் கேட்டான். இரையைத் தப்ப விட்ட எரிச்சலில் ஆந்தை "எனக்குத் தெரியாது. இங்கே ஒரு கிழட்டு நாரை தினமும் காலைப் பொழுதில் திரியும். வேண்டுமானால் அதைக் கண்டு பிடித்துக் கேள்" என்று சொல்லி விட்டுத் தன் வேலையைப் பார்க்கப் போய் விட்டது.

காலையில் அலைந்து திரிந்து நாரையைக் கண்டு பிடித்தான். அதனிடம் கேட்டபோது. "எனக்கு நினைவில்லை. ஆனால் பக்கத்து ஏரியில் ஒரு ஆமை கிடக்கிறது. அதற்கு நினைவிருக்க வாய்ப்பிருக்கிறது" என்று நம்பிக்கையை வளர்த்து விட்டது.

மன்னன் ஏரியைத் தேடி ஓடினான். அங்கே வயதான ஆமையைப் பார்த்தான். தள்ளாத வயதில் சிரமப்பட்டுக் கொண்டிருந்தது அந்த ஆமை. நம் மன்னன் அதனிடம் இந்திரத்யும்னனைப் பற்றிக் கேட்டான். ஆமை உடனே "ஆமாம். அவனால்தான் இந்த ஏரியும் இருக்கிறது. அதில் இருக்கும் உயிரினங்களும் நன்றியுடன் உயிர் வாழ்கின்றன" என்று சொன்னது. அப்போது மன்னன் "நானேதான் அந்த இந்திரத்யும்னன்! எனக்கு இந்த ஏரியை ஏற்படுத்தியதாக நினைவில்லையே. நீ ஏதோ தப்பாகச் சொல்கிறாய்" என்று நம்பிக்கை இழந்து போய் ஆமையிடம் சொன்னான்.

ஆமையும் "கதை அப்படியில்லையப்பா! நீ அரசாண்ட போது மக்களுக்குத் தினமும் ஏராளமான பசுக்களைத் தானமாக வழங்கினாய். மக்கள் அவற்றையெல்லாம் இந்தப் பகுதியிலுள்ள புல் தரையில் மேய விட்டார்கள். மாடுகள் தினமும் அலைந்து திரிந்து தன் குளம்புகளால் மண்ணைக் கிளப்பி விட்டதால் இந்தப் பகுதி நாளடைவில் பள்ளமாகப் போய் விட்டது. மழை பெய்து நீர் பிடித்ததால் ஏரியாக மாறிவிட்டது. இந்தப் பகுதியின் செழிப்பிற்கே இந்த ஏரிதான் காரணம்என்றும்ஆகிவிட்டது. அதைக் கேட்டுத்தான் நான் இங்கே குடியேறினேன். இத்தனை நாள் நன்றியுடன் வாழ்ந்திருக்கிறேன். இன்னமும்பல உயிரினங்களும் வாழ்கின்றன. வாழப் போகின்றன" என்றது. தூரத்தில் சொர்க்காபுரியில் இருந்து மன்னனைக் கூட்டிப் போக விமானம் வருவது மன்னனுக்குத் தெரிந்தது.

நீதி: நாம் செய்யும் நல்ல காரியங்களுக்கு பலன் பல நாட்களுக்கும் பல தலைமுறைகளுக்கும் நீட்டித்திருக்கும் படியாக யோசித்துச் செய்வது நல்லது

# தேர் ஏறி வருகின்ற மாயவனே



**வல்லிபுரத்தாழ்வாருக்கு இன்று தேர்**

தேர் ஏறி வருகின்ற மாயவனே
ஊர்கூடி வடம்பிடித்தோம் தூயவனே
பார்த்தசாரதியாய் அன்றிருந்து
பாரதப்போரை வழிநடத்தி - என்றும்
தர்மத்தை நிலைநாட்ட வந்தவனே - இன்று
வல்லிபுரப் பதியில் தேர் ஏறி வருகையிலே
சொல்லி அழும் எம் துயரைத் தீர்த்திடைய்யா

**புலோலியூர்.**
**வேல்நந்தன்.**









## ரஜினியின் 2.0 பார்க்கக் கூடிய மாதிரி இருக்குமா?

**மதி — நல்லூர்**

**கொள்கை இல்லாதவன் எப்படிப்பட்டவன்?**

இரைதேடிக் காத்திருக்கும் சிங்கம் தூரத்தே எருதுக்கூட்டங்களைக் கண்டதும் சரியான இடத்தில் நிலை எடுக்கும். அதன்பின் ஆயிரம் எருதுகளில் ஒரு எருதை குறி வைக்கும் சமயம் பார்த்து அதைத் தாக்க ஓடும்.

எருதுகள் கலைந்து நாலாபுறமும் ஓடும். இருந்தாலும் சிங்கம் தான் வைத்த குறி தவறாமல் குறி வைத்த எருதை மட்டும் துரத்திச் சென்று தாக்கி இரையீட்டும். கொள்கையில்லாதவர்கள் சிங்கம் போலல்ல நரிகள் போல் மற்றவர்களின் கொள்கைகளில் விட்டமிச்சங்களை உண்டு வாழ்வர்.

**காவியா — யாழ்ப்பாணம்**

**ஒருவரைக் காதலிக்க வைப்பது எப்படி?**

உங்களுக்குப் பிடித்த பையனை விழுங்குவது போலப் பார்க்க வேண்டும். நீங்கள் பார்ப்பது அந்தப் பையனுக்குத் தெரிந்திருப்பது கட்டாயமானது.

பின்பு கண்ணை உருட்டிப் பிரட்டிப் பார்க்க வேண்டும். அப்படிப் பார்க்கும் போது அந்தப் பையனின் முகத்தில் மாறல்கள் ஏதும் இருக்கிறதா என்பதை அவதானிப்பது மிகமிக முக்கியமானது.

அதன்பின்பு அவனைப் பார்க்காமல் விட்டுவிட வேண்டும். நீங்கள் பார்க்கிறீர்களா பார்க்கிறீர்களா என உங்களை அவதானிப்பதை கண்டு கொண்டால் அவனின் கண்களில்படாமல் மறைவான இடத்துக்குச் செல்லுங்கள்.

அங்கும் அவன் வருவானாக இருந்தால் 90 விகிதம் சக்சஸ். பின்னர் நீங்கள் நடந்தோ, சைக்கிளிலோ திரும்பிக் கூடப் பார்க்காமல் செல்லவேண்டும். அப்போதும் அவன் பின்னால் வருவானாக இருந்தால் ஓர் இழிச்சவாய் காதலன் ரெடி என்று அர்த்தம்.

**கலா — மானிப்பாய்**

**ஜோக் ஒன்று சொல்லுங்களேன்?**

**மாப்பிள்ளை :-** தரகரே பொண்ணு கறுப்பா இருந்தாலோ சிவப்பா இருந்தாலோ பரவாயில்லை. ஆனால் கண்டிப்பா சிமாட் போன் வைச்சிருக்கணும்.

**தரகர் :-** ஏன்?

**மாப்பிள்ளை:-** ஏனென்றால் சிமாட் போன் வைச்சிருக்கிற பொண்ணுதான் குனிஞ்ச தலை நிமிராமல் இருக்கும்.

## கூட்டமைப்புக்கும் தமிழ் மக்களுக்கும் நல்லிணக்கம் இருக்கா?

**சாயி — கரவெட்டி**

**குடிப்பதும் சிகரட் பிடிப்பதும் நாகரிகம் என்று நினைக்கிறார்களே தற்போதைய இளைஞர்கள்?**

சினிமா சினிமா சினிமா நாசமறுத்த சினிமா. பொழுதுபோக்கு என்பதைத் தாண்டி எம் வாழ்வியலுக்குள் என்று சினிமா புகுந்ததோ அப்போதே எல்லாம் நிர்மூலமாகிவிட்டது. என்ன செய்ய கேட்பதற்கு ஆள் இல்லை. பேசுவதற்கு யாரும் இல்லை. தூக்கிவிட கடவுள் கூட இல்லை என்கின்றநிலை இனிஏதுவுமேசெய்துவிடமுடியாது.

**கலை — மிருசுவில்**

**தான் செய்வது தவறு என்று தெரியாமல் மற்றவர்களை குற்றஞ்சாட்டுபவர்கள் பற்றி?**

வெளவால்கள் இருக்கிறதே அவை மரக்கிளைகளில் தலைகீழாகத் தொங்கிக் கொண்டிருக்கும். மற்றவர்கள் தலைகீழாக நடக்கிறார்கள் என்பதுதான் அவர்களின் நினைப்பு. ஒருமுறை கூட தாம் தலைகீழாக தொங்குகின்றோமே என்று சிந்திக்காமல் மற்றவர்களின் சரிகளை பிழையாக்கிக் கொண்டிருக்கும் இந்த வெளவால்களை விட்டுவிடுங்கள். தொங்கி தொங்கி மாய்ந்து போகட்டும்.

**உங்கள் எண்ணத்தில் தோன்றும் கேள்விகளை**
**வியாசரிடம் கேளுங்கள்**
**021 567 1532,**
**076 636 3378 என்ற**
**Viber இலக்கத்துக்கோ SMS**
**அனுப்புங்கள்**

**மயூரதன் — யாழ்ப்பாணம்**

**திலீபனின் கொள்கைகள் நிறைவேற்றப்படுமா?**

தான் கொண்ட கொள்கையில் சற்றும் விலகாமல் உறுதியாக இருந்த உன்னத வீரன் தியாகி திலீபன். ஒரு நிமிடம் நாவறண்டு விட்டால் நாம் படும் பாடு. 12 நாள் ஒரு சொட்டு நீர் கூட அருந்தாமல் தமிழன் நிம்மதியாக வாழ வேண்டும் என்ற எண்ணத்துடன் இறுதிவரை விடுதலைப் பசியோடு ஏங்கி ஏங்கி உயிர்நீத்த உத்தமனின் கொள்கைகள் நிறைவேற்றப்பட வேண்டியவையே.

**சுதன் — குப்பிளான்**

**கூட்டமைப்பு சாணக்கிய அரசியல் செய்கிறதா?**

சப்பா முடியலடா சாமி. இந்த சாணக்கியம், சாணம் இது இரண்டும் என்னைப் பொறுத்த வரை ஒன்றுதான்.

## வலம்புரியை எரித்தவர்களின் கடைகளில் பொருட்களை வேண்டாமல் விட்டால்?

**ஜீபா — கரவெட்டி**

**கூட்டமைப்புக்கும் தமிழ் மக்களுக்கும் நல்லிணக்கம் இருக்கா?**

அதை முடிவெடுக்க வேண்டியவர்கள் தமிழ் மக்களோ அல்லது கூட்டமைப்போ அல்ல. அரசாங்கம் தான் முடிவெடுக்க வேண்டும். ஏனென்றால் அரசாங்கம் சொல்வதுதான் கூட்டமைப்பின் தாரக மந்திரம்.

**அரவிந் — இணுவில்**

**ஒரு மனிதன் எப்படி இருக்க வேண்டும் வியாசரே?**

தேவையான நேரத்தில் கொடுக்கப்படாத அன்பும் தேவையில்லாத நேரத்தில் கொடுக்கப்படும் கோபமும் வாழ்வில் தவிர்க்கப்பட வேண்டியவை. பசி எடுக்கும் போதுதான் உணவு உண்கின்றோம். அதுபோலத்தான் மனதும். மற்றவர்களின் மனநிலை அறிந்து நடந்து கொள்வதுதான் மனிதம். அவன் தான் மனிதன்.

**இராகா — மந்திகை**

**தலையில் பொடுகு இருந்தால் பெண்களுக்குப் பிடிக்காதாமே. உண்மையா வியாசரே?**

தலையில் பொடுகு இருந்தால் மட்டுமா பெண்களுக்குப் பிடிக்காது? இப்போதெல்லாம் தலையில் முடி இல்லை என்றால் தான் சில பெண்களுக்குப் பிடிக்கிறது. அதுவும் மழித்துவிட்டு மினுங்க மினுங்க வந்தால் சப்பா... சொல்லவே தேவையில்லை.

**பிராங்கிலின் — பருத்தித்துறை**

**வலம்புரியை எரித்தவர்களின் கடைகளில் பொருட்களை வேண்டாமல் விட்டால்...?**

ஒரு கன்னத்தில் அறைந்தால் மறுகன்னத்தையும் காட்டு என்றார் யேசுபிரான்.வலம்புரியும் அப்படியே. ஆனால் அறைபவர்கள்தான் அறைவதை நிறுத்த வில்லை. தர்மம் எப்போதும் பிழைப்பதில்லை. அந்த தர்மத்தின் வழியேதான் வலம்புரி செல்கிறது. காகம் திட்டி மாடு சாவதில்லை என் றொரு பழமொழி இருக்கிறது. அதை எரித்தவர்கள் புரிந்து கொண்டால் சரி.

**லலித் — நெல்லியடி**

**ரஜினியின் 2.0 பார்க்கக்கூடிய மாதிரி இருக்குமா?**

வழமையான ரஜனி படங்கள் போல இருக்காது என்பது உண்மை. முழுக்க முழுக்க கிரபிக்சை வைத்து செய்திருக்கிறார்கள். படத்தில் சிமாட் போனினால் வரும் பிரச்சினைகள் தொடர்பில் பேசப்படும் என்பது ரெயிலர் பார்க்கும் போது புரிகிறது. இருந்தாலும் சங்கர், ரஜினி என்கின்ற பிரமாண்டங்கள் இணைந்திருப்பதும் முதலாம் பாகத்தின் வெற்றியும் நிச்சயம் 2.0 வெற்றியை உறுதிப்படுத்தும்.

**உங்கள் கேள்விகளை 021 567 1532 / 076 636 3378 எனும் இலக்கத்துக்கு SMS அனுப்புங்கள்**

## நிழலாகும் நிஜங்கள்

முற்றத்து வேம்பருகில்
நிலாச்சோறுண்ட குடும்பங்கள்
நிலவுக்குப் போகும் தூரமானார்கள்

அம்மாவின் அன்பினிலே
அடுப்படி பூனையாய்ச் சுற்றி
சோறுண்ட பிள்ளைகள்
மனம் போன போக்கிலே
விருந்தாளியாய் வந்து போகிறார்கள்

கூட்டுக் குடும்பங்கள்
முதியோரில்லங்களில் மட்டும்
கோயில் திருவிழாக்களில்
கூடிய பந்தங்கள்
தொலைக்காட்சி தொடர்களில்
விழிநீர் சொரிகின்றனர்

திருமண சேவை நிலையங்களே
இரு மனங்களை இணைக்கின்றன
திருமண மண்டபங்களே
திருமணங்களை நடத்துகின்றன
வீட்டிற்கும் ஓய்வு
உறவுகளுக்கும் ஓய்வு

முகநூலில் பழைய நினைவுகளை
மீள்பதிவு செய்கிறார்கள்
நிழலான நிஜங்கள் மீண்டும்
முற்றத்து மண்ணில் மலர்வது எக்காலம்

இணுவில் வாசீசன்



## தியாக நெருப்பு

திலீபன் என்றொரு தியாக நெருப்பு
தீந்தமிழர்க்கு இவன்மேல் எத்தனை விருப்பு
ஐந்து அம்சக் கோரிக்கை காட்டியே
அகிம்சை வழிக்கு
புதுத்தத்துவம் சொன்னவன்
சிந்து பாடிய இந்தப்பூங்குயில்– தமிழர்
சிறுமை கண்டு கொதித்தெழுந்தது
வெந்துபோன தமிழருக்காகவே– இந்த
வீணை நரம்புகள் அறுந்து போனது
ஒப்பந்தம் இதுவொரு நிர்ப்பந்தம்
எப்பந்தம் வந்தாலும் எம்மினத்தை அழிக்குமென்று
அப்போது சொன்னான் அருமைத்தம்பி திலீபன்
கோட்டையிலே அவனிருந்து
கூறிய வார்த்தைகளை
கேட்டாலே வீரம் பிறக்கும்
தேரோடும் நல்லைக்கந்தன் வீதியிலே
நீரின்றி எங்களுக்காய் வாடினான்– எங்களுடன்
போராட வந்த இந்தியப் படைகளின்
பொய்முகத்தை எங்களுக்கு காட்டினான்

*கணே.பாக்கியன்,*
*வேலணை*



கவிதைக்கலசம்

## பெண்

அன்று
இலக்கியங்களிலும்
இதிகாசங்களிலும்
சிவனில் சரிபாதி– பெண்கள்
இன்று
இல்லற வாழ்க்கையில்
நடைபிணங்களாக நடைபயிலுகின்றன
திருமணம் என்ற பந்தத்தில்
கட்டாயமாக
விபச்சாரத்தில் தள்ளப்படுகின்றனர்
என்றும்
எப்போதும்
கருவறைக் கழிவுகளாக
பெண்கள்

*சிவாஷா, மல்லாகம்*

## அம்மாவின் சேலை

ஆத்தா உன் சேலையின் அருமைதனை நானறிவேன்
இந்திரன் கண்போல் இருந்த பல பொத்தல்கள்
இதயத்தில் நீங்கா இரத்தக்கசிவம்மா
தங்கத் தொட்டிலாகி தாலாட்டியது என்னை அது
முந்தானைக்குள் என்னை மூடி முலை அருந்த
முன்னின்று காத்தது குளிரில் நான் விறைத்து
குந்திய போதெல்லாம் குளிர் சுமந்து என்னுடன்
கூடி உறங்கியது தும்மாளம் அடித்து நான்
குளம் குளித்து வரும் போதெல்லாம்
குந்த வைத்துத் தலைதுவட்டும் குட்டித்துண்டுமது
சிறுக்கி மகள் சேலை சீக்கிரமே அவிழுதென்று
சிறு முடிச்சு நீ போட்டு சிக்கவைத்த சேலையது
கூடவே வேசம் கட்டி கூத்துக்கள் ஆடும் போது
குட்டித் திரையாய் கைக்களித்தது
நெய்தெடுத்த நூலைவிட நெடுங்கிழியல் தைத்த நூல்
மெத்தவே இருந்தாலும்– என் மெத்தையாய்க் கிடந்தது
ஆயிரம் சேலைகள் அடுக்கி நான் வைத்தாலும்
அம்மா நீ உடுத்த அந்தச்சேலை போல் வருமா?

*ஆர்.எஸ்.ஆனந்தன்,*
*தும்பளை*



## தியாகத்தின் உச்சம்

ஆழ விதைத்திட்ட
அருமருந்தொன்று
மூலவேரின்றி மூச்சுத் திணறுதே

காதை,கண்ணை,வாயை
பொத்திய குரங்குகளாய்
குந்தி அமர்ந்திருக்க
முந்தைய எம்வினை...

அகிம்சை தேசத்திடம்
அகிம்சை கேட்டு– ஒருவன்
அடங்கிப் போகிறான்

பிறக்கும் புதுவருடத்தில்
பன்னிரு நாட்கள்
கொடிகள் பறக்கும்
அவன் கொள்கைகள் ஒலிக்கும்

கதிரை மோகத்தில்
தியாகச் செம்மலை
திசை திசையாய் திருப்புகிறார்
புள்ளடிப் பிச்சைக்காய்
ச்ச்ச்ச... தூ...தூ...

வாழ்வின் சுகங்களையெல்லாம்
தூக்கி எறிந்துவிட்டு
ஏதிலித் தமிழினத்தின்
விடிவை வேண்டி
நீர் கூட அருந்தாது
அரும்பொன்று கருகிற்று

ஆண்டுகள் ஓடுகின்றன
அவன் தியாகங்கள் மட்டும்
உலகின் உயர்ந்த மலைகளின்
உச்சியிலே
ஒலித்துக்கொண்டிருக்கிறது
மலரும் மலரும்
தமிழர் வாழ்வு மலரும்

மாவை. நா. கஜேந்திரன்

# மௌனத்தின் தேடல்– 414



### புதுமையின் வலி

கருவில் சுமந்த தாயும்
தோளில் சுமந்த தந்தையும்
முதுமை எனும் போக்கில்
குப்பைகளாக வீதிகளிலும்
அநாதரவாக
முதியோர் இல்லங்களிலும்
சிறகொடிந்த பறவைகளாக
ஏக்கங்களின் மத்தியில்
வீசப்படுகின்றன
வானில் பறக்கும் பறவைகூட
மாலை இருப்பிடம் தேடிவந்துவிடும்
வீசிச்சென்ற நெஞ்சங்கள்
இவர்களை காணவருவதில்லை

*ஆ.நிருஷினி*
*யா/சுண்டுக்குளி ம.க.*

### நடுரோட்டில் கருவாடாய்

ஆலயமும் அகதி முகாமும்
காடும் கம்பிக் கூடும்
சேறும் நடு றோடும்
தேசம் நமக்குத் தந்த
தேசிய உறைவிடங்கள்– அதனால்
படகோட்டி வலைவீசி
பாரை சுறா பல பிடிக்க
சுடு வெயிலில் கருவாடு போட்டு
உன் இனத்தின் பசி போக்கிய
உத்தமனே! நீயும் இன்று
நாதியற்று நடுறோடில்
சுடுவெயிலில் கருவாடாய்...

*யாழ். வதிரிவாசன்*

### புது முத்திரை

விளம்பர சுவரொட்டிகளுக்கு
காவலாளி முதியவரா?
இல்லை மௌனத்தின் தேடலுக்கு
கிடைத்த புது முத்திரையா?
மெலிந்து போன உடலுக்கு
நலிந்து கேட்பது யாசகமா?

*சி.லோட்டஸ்லோறெல்*
*ஏழாலை தெற்கு,*
*மயிலங்காடு.*

### அன்புதான் இறைவன்

கல்லுக்குள் கடவுள் என்று
பாலும் தேனும் ஊற்றுகிறீர்
காய்ந்து போன உடலைக் கண்டு
காததூரம் ஓடுகிறீர்
உன்னுக்குள்ளே இறைவன் என்று
உணர்ந்துகொள்ள மறுக்கிறீர்
ஊர் ஊராய் அலைந்து
உள்ளம் நொந்து வாடுகிறீர்

வே.லக்ஸ்மி, ஆனைப்பந்தி

### யார் சொல்வார் பதில்

சுவரொட்டியில் காட்சிதரும்
அரசியல் தலைவரைப்பார்த்து
கரம் நீட்டி மனம் நொந்து
கேட்கிறார் முதியவர் தன்மகனை
பேரப்பிள்ளைகளை, குடும்பத்தை
தன் சொந்த மண்ணை அனைத்துமே
இழந்து விட்ட நிலையில்
வருந்திக்கேட்பது எதனையோ?
எல்லாவற்றையும்
மீளப் பெறமுடியுமா?
யார் சொல்வார் பதில்?

*அபிகுலமாலிகா*
*சங்கானை*

### முதியவரின் மனக்குமுறல்

நான் பெற்றவர்கள்
என்னைத் தெருவில்
விட்டுவிட்டு
வந்துவிட்டனர்
இந்நிலை மாறா நிலை
வாழ்வில் மறக்கமுடியாத
துன்பநிலை
கையை நீட்டி
உணவுக்காக அலைகிறேன்
என்னை உடனடியாக
அழைக்கமாட்டாரா இறைவன்
அழைப்புக்காக காத்துள்ளேன்

*இணுவில்*
*த.மயூரதன்*

## இவ்வார மௌனத்தின் தேடல் –415



அன்பு வாசகர்களே! உங்கள் எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி–சங்குநாதம்
இல.03, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு
எழுதி அனுப்புங்கள்

### எம்மினத்தை வாட்டுது!

நாளைக்கு எனக்கும் இந்நிலை
வந்தாலும்கூட கவலை
கொள்ளப்போவது இல்லை!
ஆனாலும் கோர யுத்த வடுக்கள்
பெற்றோர் இல்லாப்
பிள்ளைகளுக்கு
பாதுகாவலனாய்கூட இந்த
வயோதிபர் இருக்கலாம்!
காலம் போயும் காலாவதியாகி
விடமுடியாத்துன்பம் இன்று
எம்மினத்தை வாட்டுது!

*இ.ஜெ.பாலன்*

### பசியின் கொடுமை

கொடியது கேட்கின்
நெடியது வேலா
கொடிது கொடிது
இளமையில் வறுமை
இப்பாடலானது
பசியின் கொடுமையுடன்
தனிமையில் வாடும்
முதியவருக்கும் பொருந்தும்
சிக்கனமும் சேமிப்பும்
தக்க தருணத்தில்
உதவுமென்பதற்கு
இது எடுத்துக்காட்டு

*அரு.கனகராசா*
*சாவகச்சேரி*

### வீதியில் தான் உலகம்

கைநீட்டிப் பிச்சை கேட்டும்
கண்டுகொளாத உலகம்
வையகத்தில் மனமிரங்கா
வன்நெஞ்சார் உலகம்
பெற்றோரைப் பேணாத
பிள்ளைகளின் உலகம்
கற்றோரும் மற்றொரும்
கைகொடாதோர் உலகம்
முதியோரின் இல்லங்கள்
முளைத்துவிட்ட உலகம்
விதியாமோ பெற்றோரே
வீதியில் தான் உலகம்

வைகுந்தன், கொக்குவில்

# சந்தோசம்


(சிறுகதை)

**"டேய் ஆளை இறக்கடா!" தலைதூக்கமுடியாது ஆட்டோ வில் சுருண்டு கொண்டிருந்த அருணாசலத்தை இறக்கி விட் டனர். இல்லையில்லை தள்ளி வீழ்த்தினர்.**

**"இண்டைக்கு முதலாளி உங் கடை மனிசனுக்கு நல்ல "சந்தோசம்" செய்து அனுப்பி யிருக்கிறார். அவர் நன்றி மறக்காத மனிசன்.**

**சொல்லியடி ஆட்டோ விரைந் தது. மனோகரி பேயறைந்த நிலையில் திகைத்துப் போய் நின்றாள்.**





அருணாசலத்துக்கு கையுமோடவில்லை, காலுமோடவில்லை. அத்தனை மகிழ்ச்சி வெள்ளத்தில் துள்ளிக் குதித்தார். பின்னே இருக்காதா! அம்பிகா அரிசி ஆலை முதலாளி பொன்னம்பலத்திட மிருந்து எப்போது அழைப்பு வருமென்று வழிமேல் விழி வைத்துக்கொண்டிரு ந்தவருக்கு இன்று அவரிடமிருந்தே அழைப்புக் கிடைத்தது மகா சந்தோச மாயிருந்தது.

ஒன்றல்ல இரண்டல்ல தொடர்ச்சியாக பதினைந்து வருடங்கள் களைக்காது, சளைக்காது உழைத்துக்கொடுத்து அம் பிகா அரிசி ஆலையை வளர்த்தெடுத்ததில் பெரும்பங்கு அருணாசலத்திற்கேயுரியது. ஏவாமற் பணி செய்தல், களங்கமற்ற கடமையுணர்வு, அதீத நேர்மை, விட்டுப் போகாத விசுவாசம் போன்ற சுபாவங்கள் முதலாளி பொன்னம்பலத்தை ஏராளமாக ஆக்கிரமித்திருந்தன.

வானம் கறுத்து மப்பும் மந்தாரமுமா யிருந்தது. எந்த வேளையிலும் மழை பெய்யக்கூடும் போன்றதொரு சூழல். ஓட்டமும் நடையுமாக வீட்டின் பின்வளவுப் பகுதிக்குச் சென்ற மனோகரி கையிலகப்பட்ட பாளை, பன்னாடை, மட்டைகளுடன் திரும்பி வந்தாள்.

" விறகைப் பொறுக்கி வச்சு என்னதான் செய்யப் போறன். உலையிலை போட ஒரு சிறங்கை அரிசிக்கொட்டையில்லை. அடுப் புக்கை பூனை கிடக்கப்போகுது. என்ரை மனிசன் மில்லிலை உழைச்ச காலத்திலை வடிவாய் சாப்பிட்டம். அந்த வேலை எப்ப பறிபோச்சுதோ அண்டைக்கு பிடிச்சுது சனியன். கால்வயிறும் அரை வயிறுமாய்... சே... என்ன வாழ்க்கை!"

சலித்துக்கொண்டாள் அருணாசலத்தின் அன்பு மனைவி மனோகரி. உள்ளத் தில் கனன்று கொண்டிருந்த இயலாமைத் தீயின் வெளிப்பாடுகள் ஈனஸ்வரத்தில் புகைந்து வார்த்தைகளாகின.

யார் கண்பட்டதோ! வரவர அருணா சலத்தின் இரும்பு போன்ற தேகம் துரும்பு போல் மாறிக்கொண்டு வந்தது. அரிசி ஆலையில் ஒரு தொழிலாளியாகப் பணி புரியும் அருணாசலத்தின் நாசியில் தூசு படிந்து காணப்படும். தேகத்தில் ஏதேதோ அழுக்குத் துகள்கள், சதா வியர்வையில் நனைந்திருப்பார். இவைகளையெல்லாம் சட்டை செய்வதேயில்லை. கடமையில் மட்டும் கண்ணாயிருப்பார். இவ்வாறு பதினைந்து ஆண்டுகளை ஓட்டியவரின் உடல் ஆரோக்கியம் மெல்ல மெல்ல வலு விழக்கத் தொடங்கியது. முன்னைய காலங் களைப் போல் கடினமாக வேலை செய்ய முடியவில்லை. தொழிலாளியான வன் சற்று சோர்ந்துவிட்டால் முதலா ளியின் கல்லாப் பெட்டியும் கனம் குறைந்து செல்லாப் பெட்டி யாகிவிடும்.

ஆலைத் தொழிலின் நெளிவு சுளிவு களைக் கச்சிதமாகக் கற்றறிந்த பொன் னம்பலத்திற்கு இவையெல்லாம் அத்துப் படி. அதன் விளைவாக கறியி லிருந்து கறி வேப்பிலையை எடுத்து வீசி எறிவது போல் நோகாது அருணாசல த்தைக் கழற்றி விட்டார் பொன் னம்பலம். அருணாசல மில்லாவிட்டால் யாரோ ஒரு அருளம்பலமோ! அம்பலவாணரோ அவருக்குக்கிடை க்கலாம் ஆனால் அருணாசலத்தின் நிலை திண்டாட்டம் தான். நான்கு பிள்ளைகள், அத்தனை பேரும் பள்ளியில் படிக்கிறார்கள். எனவே குடும்பத் தில் அன்றாடத் தேவை களதிகமாகவேயி ருந்தன. குடும்ப வண்டி சகதிக்குள் சிக்கி விட்ட நிலை. இந்த அவலம் தீரவேண்டு மென்றால் அரு ணாசலத்துக்கு ஒரு வேலை வேண்டும். பதினைந்து வருடங்களாக ஆலைத் தொழில் செய்து வந்தவருக்கு புதிய தொழில்கள் பொருத்தமாக அமைய வில்லை. எப்படியோ மூன்று மாதங்கள் ஓடித்தான் விட்டன.

"இதென்னடி அண்டங்காகமொண்டு இஞ்சை வந்திருந்து கொறிக்குது. கடவுளே இராசம்மா கிழவிக்கு ஏதோ வருத்தம் கடுமையாம். காகமும் கத்துறதைப் பாக்க... கடவுளே! என்னவோ!" தன்னுடைய கஷ்டங்களை மற ந்து மற்றொருவருக்காக மனம் வருந்தினாள் மனோகரி.

" ஓம் அண்ணை! எங்கடை பொன்னம்பலம் முதலாளி அண்டைக்கொரு நாள் சொன் னவர். நீங்கள் அவருக்கு நல்லாய் உழைச்சுக் குடுத் தனீங் களாம் ஒரு காலத் திலை. அந்த நன்றி மறக்கா மல் உங்களைஒருநாளைக்குக் கூப்பிட்டு உங்களைச் சந்தோ சப்படுத்த வேணுமெண்டவர்"

சத்தியம் பண்ணாத குறை யாக நமசிவாயம் அன்று சொன் னது இன்று நினைவுக்கு வந்தது அருணாசலத்துக்கு. அந்த வார்த் தைகள் நெஞ்சிலே பாலை வார்த்திருந் தது. அவர் சொன்ன அந்த ஒருநாள் இன்றைக்கா யிருக்குமோ என அங்கலா ய்த்த அருணாசலம் அவசரமாக வேட் டியை உடுத்தார். நான்கு மணிக்குத்தான் போக வேண்டும். இவர் மூன்று மணி க்கே புறப்படத் தயாரானார். அத் தனை அவசரமும் ஆவலுமாயிரு ந்தார்.

"என்னத்துக்கு வரச் சொல்லியிருப் பார்! என்ர கஷ்டம் தெரியும் தானே அவருக்கு. சேமலாப நிதியம் மாதிரி ஏதேன் காசுதவி செய்யப் போறார்போலை! கடவுளே இப்பத்தை யில் கஷ்டத் துக்கு அப்பிடி ஏதேன் செய்தா ரெண் டால்...! கடவுளே! காப்பாற்று ஒரு பத்தாயிர மெண்டாலும்...!

மனதில் கோட்டை கட்டினார். "இஞ்சை! காசை வாங்கி அரிசி சாமான் மட்டும் வாங்கிப் போட்டு மிச்சக்காசைச் சில வழிக்காமல் கொண்டு வாருங்கோ! கனகர் கடைக்கு மூவாயிரம் குடுக்க வேணும். வேணிப்பெட்டையின்ர இரண்டு மாத ரியூசன் காசு... இப்பிடிக் கனக்கப் பிரச்சி னையள். காசைக் கொண்டு வாருங்கோ!"

பம்பரமாடிக் கொண்டிருந்தாள் மனோகரி.

"அப்பா எனக்கு நந்தாக்காவின்ரை ஷர்மிலா போட்டிருக்கிற பூப்போட்ட சட்டை!"

" எனக்கு நீளக் கன்டோசும் பபுல்கமும்"

வேளையறிந்து பிள்ளைகளின் கோரி க்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுக் கொண்டி ருந்தன.

" இஞ்சை! உவடமெல்லாம் கள்ளராம் கவனம் காசு"

மனோகரி மீண்டும் எச்சரித்தனுப் பினாள்.

" இதென்னடாப்பா நேரம் இரவு ஒன்ப தாகுது. இன்னுமிந்த மனிசனைக் காண யில்லை"

படலைக்கும் வீட்டுக்குமாய் ஓடித் திரிந்தாள் மனோகரி. பிள்ளைகள் அழுது ஏம்பலித்து உறங்கி விட்டனர். ஆட்டோ ஒன்று வந்து படலையில் தரித்துவிட ஓடினாள் மனோகரி.

" ஐயோ இந்த மனிசன் ஊரிப்பட்ட சாமான் சண்டியள் வாங்கி ஆட்டோ பிடிச்சு வருகுதாக்கும்.

" டேய் குணம் இறக்கடா!"

ஆட்டோவிலிருந்து தவநாதன் கூறினான்.

"ஓகோ சாமானுகள் இறக்கப் போகினம்" மனோகரி நினைத்துக்கொண்டாள்.

"டேய் ஆளை இறக்கடா!"

தலைதூக்கமுடியாது ஆட்டோவில் சுருண்டு கொண்டிருந்த அருணாசல த்தை இறக்கிவிட்டனர். இல்லையில்லை தள்ளி வீழ்த்தினர்.

"இண்டைக்கு முதலாளி உங்கடை மனிசனுக்கு நல்ல "சந்தோசம்" செய்து அனுப்பியிருக்கிறார். அவர் நன்றி மறக்காத மனிசன். சொல்லியடி ஆட்டோ விரைந்தது. மனோகரி பேயறைந்த நிலையில் திகைத்துப் போய் நின்றாள்.

**மிருசுவில்**
**தமிழ்தாசன்**

## வாழ்க்கை தொலைபேசியில் இல்லை

❖ ஒருவர் இல்லையென்றால் அவரைச் சார்ந்தவர் அழுது, கவலைப்பட்டு வாழ்க்கை என்னவாகுமோ என்று என்னும் காலம் மாறிவிட்டது.

❖ காரணம்

❖ மனிதர்களுக்கு மதிப்பு இல்லை

❖ உறவினர்களுக்கு உரிமை இல்லை,

❖ ஆசை மனைவியுடன் அன்பாய் பேச நேரம் இல்லை,

❖ தான் பெற்ற பிள்ளைகளோடு மகிழ்ச்சி யாய் விளையாட ஆர்வம் இல்லை

❖ மெஷின் போன்ற வாழ்க்கை

❖ மெஷினுடன் தான் வாழ்க்கை

❖ மனைவி இல்லையென்றாலும் பரவாயில்லை தொலைபேசி இருக்கிறது

❖ உறவினர்கள் இல்லையென்றாலும் பரவாயில்லை பேஸ்புக் இருக்கிறது

❖ நண்பர்கள் இல்லையென்றாலும் பரவாயில்லை வாட்ஸ்அப், வைபர் இருக்கிறது

❖ அக்காலத்தில் கிடைத்த சந்தோஷ த்தில் இப்போழுது 50 வீதம் சந்தோசம் கூட கிடைக்காத காரணம் இந்தத் தொலை பேசியேதான்.

❖ நாம் வாழும் வாழ்க்கை மிகக் குறுகியதே. நேரத்தை தொலைபேசி என்ற மெஷினுடன் போக்காமல் சந்தோஷமாக வாழ வழி தேடுவோம்.தேடுவது கூகுளில் அல்ல குடும்பத்தார்களிடம் நண்பர்களிடம் பேசுவதன் மூலம்,சிந்திப்பதன் மூலம், விளையாடுவதன் மூலம், நம் வாழ்க்கை சிறப்பாக இருக்கும்.

❖ ஒரு நாளைக்கு ஒரு மணி நேரமாவது உயிரற்ற பொருட்களை தூக்கி எறிந்து விட்டு உயிருள்ள பொருட்களுக்கு மதிப்பு கொடுப்போம்

❖ உன் வாழ்க்கை உன் தொலைபேசி யில் இல்லை உன் அன்பில்



# சுட்டும் விழிச்சுடர்...

## சமூக விபரீதங்களைப் பற்றிய கண்ணோட்டம் 01

# வீதியா விதியா ?

அக்னி

போர் ஓய்ந்த பின்னர் எம் பிரதேசத்தில் அதிகமாக உயிர்கள் காவு கொள்ளப்படுவது வீதி விபத்துக்களில்தான். வீதியா/ விதியா என்று நாம் குழம்பிப் போகுமளவிற்கு வீதிப்போக்குவரத்து விபரீதமாகி வருகிறது.

அநேக விபத்துக்களின் முதன்மைக் காரணிகளாக ...

1. வாகன ஓட்டுநர் மற்றும் பாதசாரிகளின் கவனயீனம்.
2. வீதி விதிமுறை மீறல்கள்.
3. ஓய்வின்றிப் பயணித்தல்.
4. போதையில் சாரத்தியம்.
5. சாரத்தியத்தின்போது கைபேசிப்பாவனை.
6. அவசரத்தில் அதிவேகமாகப் பயணித்தல்.
7. ஏனைய வாகனங்களுக்கு இடையூறாகப் பயணித்தல்.
8. தெருக்களில் உலாவும் கட்டாக்காலிகள்.
9. போக்குவரத்திற்கு தகைமையற்ற வாகனப் பயன்பாடு.
10. சாரதியின் உடல்- உள தளர்வு நிலை

என்று பலவற்றைப் பட்டியலாக அடுக்கிக் கொண்டே போகலாம்.

மேற்குறித்த முதன்மைக் காரணிகள் வெளிப்படையாகத் தெரிந்தாலும், இன்னும் பல துணைக்காரணிகள் மறைந்துள்ளதையும் அவதானிக்கலாம். அவற்றை விழிச்சுடர்களால் சுட்டி, சம்பந்தப்பட்ட தரப்புக்களை உரிய நடவடிக்கைக்குத் விரைந்து தூண்டுவதே எம் பணியாகும்.

நெடுஞ்சாலைத் தரிப்புக்கள்

அண்மைய பாரிய விபத்துக்களில் கணிசமானவை நெடுஞ்சாலை விபத்துக்களே. இவற்றிலும் பெரும் எண்ணிக்கை வீதியில் தரித்து நின்ற வாகனங்களாலும், தங்கி யிருந்த கால்நடைகளாலும் நிக ழ்ந்தவை நெடுஞ்சாலைகளில் கண்ட கண்ட இடங்களிலெல்லாம், அதுவும் இரவு நேரங்களில் வாகனங்களைத் தரிப்பதைத் தவிர்ப்பது அவசியம். நெஞ்சாலை விதிகளின்படி வாகனங்களை நிறுத்துவதற்கு குறிப்பிட்ட தூர இடைவெளிகளில் விசேட இடங்கள் ஒதுக்கப்பட்டு, அந்தத் தரிப்பிடங்களில் மட்டுமே வாகனங்கள் தரிக்கப்பட வேண்டும். இதனை மீறும் சாரதிகளை சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும். அதேபோன்று நெடுஞ்சாலைகளில் கால்நடைகளை உலாவ



விடும் உரிமையாளர்கள் மீதும் கடுமையான சட்ட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். இவற்றைக் கட்டுப்படுத்துவதன் மூலம் விபத்துக்களைக் குறைக்க முடியும்.

அதிமிஞ்சிய வேகமும் விபத்துக்களின் காரணியாகும். நெடுஞ்சாலையில் வேகத்தைக் கட்டுப்படுத்த வீதி வேகத் தடைகளை (Speed breakers) இடையிடையே போடுவது தொடர்பில் முதலமைச்சர் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு ஆலோசனை வழங்கியதாக தெரியவருகிறது. ஆயினும் நெடுஞ்சாலை வீதி விதிப் பிரமாணங்களின்படி வீதி வேகத் தடைகளை ஏற்படுத்துவது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. எந்த நாட்டின் நெடுஞ்சாலைகளிலும் வீதி வேகத் தடைகளைப் போடும் வழக்கம் புழக்கத்தில் இல்லை என்கின்றனர் வீதி அபிவிருத்தி அதிகார சபையினர். வீதி வேகத் தடைகளே விபத்துக்களை விளைவிக்கலாம் என்பது அவர்கள் கருத்து. எனவே வேகத்தைக் கட்டுப்படுத்த பொலிஸாரின் கண்காணிப்பு அதிகரிப்பது அவசியமாகிறது.

வீதிப் பராமரிப்பு

வீதிகள் வீதி அபிவிருத்தி அதிகார சபை (RDA), மாகாண வீதி அபிவிருத்தித் திணக்களம் (PRDD), உள்ளூராட்சிச் சபை ஆகிய மூன்று நிறுவனங்களின் கீழ் பராமரிக்கப்படுகின்றன.

E, AA,AB,AC தர வீதிகள் வீதி அபிவி ருத்தி அதிகார சபைக்குரியன. B,C தர வீதி கள் மாகாண வீதி அபிவிருத்தித் திணைக் களத்திற்குரியவை. D தர வீதிகள் உரிய உள்ளூராட்சிச்சபைகளுக்குரியது.

இன்று எம் பிரதேச பிரதான வீதிகளில் பல ஓரளவு தரமானதாகக் காணப்படுகின்ற போதிலும், சில வீதிகள் மிக மோசமான நிலையிலிருப்பதை சுட்டிக் காட்ட வேண்டும். குறிப்பாக AB-17 இலக்கமுடைய மானிப்பாய் ஊடான யாழ் - காரைநகர் வீதி பாவனையாளர்களின் சோதனைக்களமாகவே திகழ்கின்றது. போர்க்காலத்தில் கடினமான பயணவழியாகத் திகழ்ந்த கொம்படி பாதையை நினைவுறுத்துகின்றது. இதன் பராமரிப்பு வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குரியது. இவ் வீதியில் வேகம் சற்று அதிகமானால் விபத்து நேரிடுவது தவிர்க்க முடியாதது. இவ் வீதி யாரின் தயவிற்காக இத்தனை காலமும் தவம் கிடக்கிறது என்பது புரியாத புதிர்.

வீதிகளின் பராமரிப்பிற்காகவே வாகன வரி அறவீடு செய்யப்படுகின்றது. தரமான வீதிகளைப் பயன்படுத்துவது வாகன வரி செலுத்தும் உரிமையாளரின் அடிப்படை உரிமையாகும். இவ்வுரிமை மோசமான, சேதமான வீதிகளைப் பயன்படுத்த நிர்ப்பந்திக்கப்படுவதால் மறுக்கப்படுகின்றது. தரமற்ற வீதிகள் விபத்துக்களுக்கு மறைமுகமான காரணிகளாக அமைகின்றன.

தற்போது பயன்பாட்டிலுள்ள பெரு வீதிகள் காப்பெற் இடப்பட்டு சுமார் 6 வருடங்களாகி விட்டன. ஆயினும் அண்மைக் காலமாக உரிய பராமரிப்பு கிரமமாக மேற்கொள்ளப்படவில்லை. உப வீதிகளிலிருந்து பிரதான வீதிக்குச் செல்வதற்கான தரிப்புக் கோடு, பாதசாரிக் கடவைக் கோடுகள் உட்பட முக்கிய வீதி அடையாளங்கள் மற்றும் வீதி சமிக்ஞைகள் இன்று அழிந்தும், மங்கியும் காணப்படுகின்றன. இது தொடர்பில் உரிய நிறுவனங்கள் வினைத்திறனுடன் செயற்படுவதாகத் தெரியவில்லை. இவையும் விபத்திற்கான காரணமாக அமையும்.

சில இடங்களில் பொருத்தமற்ற வீதிக் குறியீடுகள் விபத்தை விளைவிப்பதாகவுள்ளன. யாழ் - காங்கேசன்துறை வீதியின் ஆரம்ப இடத்தில் வீரசிங்கம் மண்டப பிரதான நுழைவாயில் முன் பாதசாரிக் கடவை அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. மண்டபத்தில் நிகழ்வுகள் முடிந்து வெளியேறுவோர் உடனடியாகவே வீதியைக் கடக்க முற்படும் போது விபத்துக்கள் ஏற்படலாம். பொதுவாக முக்கிய நிறுவனங்கள், பாடசாலைகள் முன் பாதசாரிக் கடவை அடையாளப்படுத்தும் போது பிரதான நுழைவாயிலுக்கு நேரெதிரே அடையாளப்படுத்தப்படுவது தவிர்க்கப்பட வேண்டும். பாதசாரிக் கடவைகள் வாயிலிலிருந்து கணிசமான தூரத்திற்கப்பாலேயே வரையப்பட வேண்டும்.

காங்கேசன்துறை வீதி மருதனார்மடம் சந்தியில் பிரதான வீதியிலிருந்து உடுவில் பக்கம் அல்லது உரும்பிராய் பக்கம் திரும்பும் போது சந்தியிலிருந்து சில மீற்றர் தூரத்திலேயே இரு பக்கமும் பாதசாரிக் கடவைகள் வரையப்பட்டுள்ளன. பிரதான வீதியிலிருந்து உப வீதிக்கு வாகனத்தைச் செலுத்தும் சாரதி குறுகிய தூரத்திலுள்ள இப்பாதசாரிக் கடவைகளை அவதானிக்க முடியாது. இதனால் விபத்துக்கள் நேருவது இயற்கையே.

சில இடங்களில் உரிய வீதி அடையாளங்கள் இடப்படாமையாலும் விபத்து நேரும் வாய்ப்புள்ளது. யாழ்-மானிப்பாய் வீதியில் ஐந்து சந்திக்கருகாமையில் வீதியை இரு சுவடுகளாகப் பிரிக்கும் முறிவற்ற கோடு வரையப்படாமலேயுள்ளது. இதனால் ஒன்றையொன்று முந்திச் செல்ல முனையும் வாகனங்கள் விபத்திற்குள்ளாகலாம்.

சாவகச்சேரிக்கும் நுணாவிலுக்கும் இடையில ஏ-9 வீதியில் வீதி ஏற்ற- இறக்கங்களுடன் காணப்படுவதால் தாழ்வான பகுதியில் பயணிக்கும் வாகனத்தால் உயர்ந்த பகுதியில் பய ணிக்கும் வாகனத்தை ஒரு சில மீற்றர் இடைவெளியிலேயே அவதானிக்க முடியும். இங்கு பாதைச்சுவடுகளைப்(Track or Lane) பிரித்து முறியாக் கோடு வரையப்படுதல் அவசியம்.

வீதிக்கருகிலுள்ள பட்ட மரங்கள், பழைய கட்டடங்களும் வீதி அனர்த்தங்களை விளைவிக்கக்கூடியன. ஊர்காவற்றுறை வைத்திய சாலைக்கு அருகில் வடக்கு வீதியில் பட்டுப்போன பனை மரமொன்று ஊசலாடிக் கொண் டிருக்கின்றது. இதனால் பயணிப்போர் உயிர் களும் ஊசலாடிக் கொண்டேயிருக்கின்றன. இதுபோன்ற பல வீதிப் பராமரிப்பு அலட்சியங்கள் வீதியை ஆபத்திற்குரிய தாக்குகின்றன. இவற்றை சம்பந்தப்பட்ட தரப்புக்கள் கவனத்திலெடுத்து விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

நிறுவனங்களின் இழுபறிகள்

பிரதான வீதியொன்றை செப்பனிடும் போது அதனையண்டிய உப வீதியும் செப்பனிடப்பட வேண்டியது அவசியமாகும். இங்குதான்பிரச்சினையே எழுகின்றது. ஏனெனில் பிரதான வீதி வீதி அபிவிருத்தி அதிகார சபையிடமும், உப வீதி மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களத்திடம் அல்லது உள்ளூராட்சிச் சபையிடமும் இருப்பதாகும். இவை பொதுவாக ஒருமித்து ஒரு திட்டவொழுங்கில் பணியாற்றியதாக வரலாறு இல்லை. ஆனால் குறைகளை மக்கள் சுட்டும் போது இந் நிறுவனங்கள் மற்ற நிறுவனங்களிடம் பழியைச் சுமத்தி தாம் தப்பித்துக் கொள்கின்றன. யாழ்-காங்கேசன்துறை வீதியில் தட்டாத்தெருச்சந்தியில் பிரதான வீதி காப்பெற் இடுவதற்காக அதிகம் உயர்த்தப்பட்டதால் உப வீதியில் வெள்ளம் தேங்கி பாதசாரிகளுக்கு சொல்லொணாத் துயரம் தந்தது. இதை செப்பனிடும் பொறுப்பை வீதி அபிவிருத்தி அதிகார சபையும், மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களமும் மாறிமாறித் தட்டிக் கழித்தன. சுமார் 2 வருட இழுபறியின் பின்னரே நிலைமை சுமுகமாகியது.

எனவே எதிர்காலத்தில் ஒருமித்த நிகழ்ச்சி நிரலில் இம் மூன்று நிறுவனங்களும் செயற்படவொரு நிர்வாகப் பொறிமுறை தேவைப்படுகின்றது. மாவட்ட அரச அதிபரே இவ்விடயத்தில் இணைப்பளராகச் செயற்படப் பொருத்தமானவர்.

போக்குவரத்து ஒழுங்குபடுத்தல்

யாழ்.மாவட்டத்தின் முக்கிய நகராங்களான யாழ்ப்பாணம், சுன்னாகம், சாவகச்சேரி, மானிப்பாய், நெல்லியடி ஆகியவற்றில் போக்குவரத்து நெருக்கடிகள் அதிகமாகவுள்ளன.

1. வாகனங்களை நகரின் பல இடங்களி லும் தரித்தல் (parking).
2. கடைகளின்பொருட்களையும், காட்சிப்படுத்தல்களையும் வீதிவரை நீட்டிப்படுத்தல்.
3. கனரக வாகனங்களை சன நெரிசல் மிக்க உச்ச நேரங்களில் நகருக்குள் நுழைய அனுமதித்தல்.

(25 ஆம் பக்கம் பார்க்க...)

# சுட்டும் விழிச்சுடர்...

(24 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

4.பாதசாரிகள் நகரின் வீதிகளிலெல்லாம் குறுக்கும் மறுக்குமாக அநாயாசமாக உலாவுதல்.

5.பேருந்துகள் பயணிகளை ஏற்றுவதற்காக மந்தமான வேகத்திலூர்ந்து வீதிக்கு இடையூறு செய்தல் போன்றன இந்நகரங்களின் நெருக்கடிக்கு பின்புலமாகின்றன.

வீதிகளில் பொருட்களைக் காட்சிப்படுத்தும் வர்த்தகர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்ட போதும் இதுவரை அத்தகைய நடவடிக்கை செயலுருப்பெறவில்லை.

உச்ச நேரங்களில் நகருக்குள் கனரக வாகனங்களை நுழைய அனுமதிப்பதில்லை என்ற தீர்மானமும் கிடப்பிலேயேயுள்ளது. யாழ்.நகரின் ஆஸ்பத்திரி வீதி, மின்சார நிலைய வீதி, கே.கே.எஸ் வீதி, ஸ்ரான்லி வீதி ஆகியன உச்ச நெரிசல் நேரங்களிலும் பொருட்களை ஏற்றியிறக்கும் கப்பல்துறைகளாகவே காட்சி தருகின்றன.

கண்ட இடத்திலெல்லாம் நாய் காலைத் தூக்குவது போல் நினைத்தவிடத்திலெல்லாம் வாகன்ங்களைத் தரிக்க தாராளமனதுடன் அனுமதிக்கும் நகரம் யாழ். நகரம் மட்டுமேயென்று பெருமைப்படலாம். நகர மையத்திற்கு வெளியே வாகனங்களைத் தரிப்பதற்கு ஏற்பாடுகள் முன்பு செய்யப்பட்ட போதிலும் இறுக்கமாக அது நடைமுறைப் படுத்தப்படாமையால் நகரத்தின் மையமே இன்று தரிப்பிடமாகிவிட்டது. பெரு நகரங்களான கொழும்பு, கண்டி, காலி எங்கும் நகரத்தினுள் வாகனங்களைத் தரிக்க முடியாது என்பது கவனத்திற்குரியது.

சன நெரிசல் மிக்க உச்ச நேரங்களில் பெருநகர்களில் சில பாதை ஒழுங்குகள் ஒரு வழிப்பாதையாக மாற்றியமைக்கப்படும் நடைமுறையுண்டு. குறிப்பாக பிரதான பாடசாலைகள், அரச நிறுவனங்கள், வைத்தியசாலைகள் அமைந்துள்ள வீதிகளில் ஒருவழிப் பாதையாக தற்காலிகமாக மாற் றப்படுவதுடன், கனரக வாகனப் போக்குவரத்தும் மட்டுப்படுத்தப்படும். கொழும்பில் காலி வீதி, பௌத்த லோக மாவத்தை, நகரசபை பிரதேசம், மருதானைச்சந்தி போன்ற இடங்களில் இத்திடீர் ஏற்பாட்டை அவதானிக்கலாம். ஆனால் மாற்றங்களை எளிதில் உள்வாங்கா பூமி யாழ்ப்பாணம் என்பதாலோ என்னவோ இங்கு அத்தகைய நடைமுறையில்லை.

ஆயினும் எதிர்காலத்தில் இத்தகைய ஏற்பா டுகள் மிக அவசியம்.

போக்குவரத்து நெரிசல் மிக்க உச்ச நேரங்களில் ஆஸ்பத்திரி வீதி மற்றும் முதலாம் குறுக்குத்தெரு போன்றன ஒரு வழிப்பாதையாக மாற்றப்படுவது பொருத்த மானதாகும்.

நகரத்தின் நெரிசல் தொடர்பில் வர்த்தகர்கள், கனரக- பேருந்து ஓட்டுநர்கள், பொலிஸார், உள்ளூராட்சி மன்றுகள், பொதுமக்கள் ஆகியோர் தம் பொறுப்புணர்ந்து செயற்படுவதே வீதி விபரீதங்களைத் தடுக்கவுதவும்.

வீதிகளில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி வேலைகள்

வீதிப் பராமரிப்பு மட்டுமின்றி வீதிகளை அண்மித்து நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு நடவடிக்கைகள், மின்சார சபை மற்றும் தொலைத் தொடர்பு திணைக்களம் என்பனவும் பல்வேறு வேலைகளை முன்னெடுக்கின்றன. ஆனால் அவை திட்டமிடப்பட்டு, ஒருங்கிணைக்கப்பட்டு ஏக காலத்தில் இடம்பெறுவதில்லை. ஒருவர் வீதியைத் தோண்டி முடிய இன்னொருவர் தோண்டுகின்றார். இதனால் போக்குவரத்து அடிக்கடி ஸ்தம்பித்து மக்கள் அசௌகரியத்திற்காளாகின்றனர். விபத்துக்களும் நேரிடுகின்றன. ஆரியகுளம் சந்தியில் நீர் வழங்கல் குழாய் வெடிப்பை சீர்செய்ய தோண்டப்பட்ட குழி பல மாதங்களாகச் சீர்செய்யாமல் விடப்பட்டதை நினைவுகூர விரும்புகின்றேன். எனவே வீதியில் அல்லது அருகாமையில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி வேலைகளை சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் ஒருங்கிணைக்காவிடின் வீதியை பயன்படுத்துவோரின் சாபங்களே அவர்களை சூழும்.

ஒரு வீதி விபத்தை வெறுமனே ஒரு நபரின் அசிரத்தை எனப் பழி போட்டு நாம் கண்களை மூடிக் கொண்டாலும், நம் பணியை நாம் சரியாகச் செய்தோமா? என்று நம் மனச்சாட்சி உறுத்திக் கொண்டுதான் இருக்கும்.

விழிச்சுடரின் அடுத்த பார்வை... புகையிரதமா...? பகை ரதமா...?



## ஈழத்தமிழர் வாழ்வை திரைப்படமாக்குங்கள்

### -பிரபாகரன் என்னிடம் சொன்னார் பூரிக்கும் பாரதிராஜா-



“ஈழத்தில் பிரபாகரனைச் சந்தித்த போது, ஈழத்தமிழர் வாழ்க்கையைப் படமாக இயக்குவது குறித்து என்னிடம் கேட்டார். நான் அந்தச் சமயத்தில் தமிழில் முன்னணி இயக்குநராக இருந்த ஒருவரின் பெயரை அவரிடம் சிபாரிசு செய்தேன். பிரபாகரன் மறுத்துவிட்டார். 'நீங்கள்தான் இயக்க வேண்டும். எங்கள் மக்களின் வலிகளைத் திரைப்பட ஆவணமாக உருவாக்க வேண்டும்' என்று கேட்டுக் கொண்டார்.

“என் மகன், மகளுக்குத் திருமணம் செய்யவேண்டிய இரண்டு கடமைகள் இருக்கின்றன. அதை முடித்துவிட்டு இலங்கைக்கே வந்து தங்கி நின்று திரைப்படம் இயக்குகிறேன்' என்று நான் சொன்னதும் குபீரெனச் சிரித்துவிட்டார் பிரபாகரன். “ஈழப் பிள்ளைகளுக்குத் திரைப்பட இயக்கத்தைக் கற்றுக்கொடுங்கள்' என்று கேட்டார்.

'சினிமா ஷூட்டிங்கிற்காக நான் வெளிநாடு எல்லாம் செல்லவேண்டி இருக்கிறது' என்று சொன்னேன். 'எந்தநாடு என்று சொல்லுங்கள், விசா இல்லாமலேயே எங்கள் பிள்ளைகள் அங்கே வந்து நிற்பார்கள்' என்று பதில் சொன்னார்.

தொடர்ந்து பேசும்போது, 'சீமான் யார்?' என்று விசாரித்தார். நான் அதிர்ந்துவிட்டேன். பிரபாகரன் பொட்டு அம்மானை ஏறிட்டுப் பார்த்தார். உடனே தமிழ்நாட்டில் ஈழத் தமிழர்களைப் பற்றி சீமான் பேசிய பத்திரிகைச் செய்திகளை மேசையில் வைத்தார் பொட்டு அம்மான். 'தமிழின மற்றும் மொழி ஆளுமையும் கொண்டவன்' என்று சீமான் குறித்து பிரபாகரனிடம் சொன்னேன். பிறகுதான் சீமானை இலங்கைக்கே வரவழைத்துப் பார்த்தார், பிரபாகரன்" என்று பூரிப்புடன் கூறிச் சிரிக்கிறார் இயக்குநர் பாரதிராஜா.

# இது நம்ம கதைகள்... 17

## கருமமே கண்ணாயினார்

இவ்வுலகம் உழல்வதற்கு பரமாத்மாவின் காத்தல் கருமம் மட்டுமல்ல, சில ஜீவாத்மாக்களின் புண்ணியங்களும் தான் காரணம் என்கிறார்கள் சித்தர்கள்.

தம் சிந்தனை, சொல், செயலில் தூய்மை பேணி நல்லறம் நல்கிடும் ஆன்மீகவாதிகள் பலர் நம்மிடையே வாழ்ந்திருக்கிறார்கள் - இன்னும் வாழ்ந்து கொண்டுதானிருக்கிறார்கள். தத்தமது மார்க்க சித்தாந்தங்களுக்கேற்ப மனிதர்களை நல்வழிபடுத்திடும் இறைவனின் கருவிகளே இம் மெய்ஞானிகள். இவர்களில் பலர் மக்களால் மகான்களாக மதிக்கப்பட்டு, இறைவனுக்கு சமமாக பூசிக்கப்படுகிறார்கள்.

இத்தகைய சித்தர் ஒருவார் அவ்வூரிலிருந்தார். அவரது புனிதமான செயற்பாடுகளால் மகான் என மக்களிடையே போற்றப்பட்டார். அவர் சென்றவிடமெல்லாம் செழிப்புறுமென்ற நம்பிக்கை மக்களிடையே நிலவியது. பொதுவாக அவ்வூர் வீடுகளில் நடைபெறும் கொண்டாட்டங்களுக்கு அவரை அழைத்து விருந்துபசாரம் செய்வது அவ்வூர் வழமை. அவர்ஒரு வீட்டில் மன நிறைவோடு விருந்துண்டால் அவ் வீட்டில் இறை ஆசியும், அமைதியும், அதிர்ஷ்டமும் குடிகொள்ளும் என்பது அவ்வூராரின் அதீத நம்பிக்கை.



அன்று அவ்வீட்டிலொரு கொண்டாட்டம். சித்தரையும் அழைத்திருந்தனர். தனக்கென விசேடமாக ஒதுக்கப்பட்ட இடத்தில் சித்தர் அமர்ந்திருந்தார். விருந்துணவு அருந்தும் நேரம் வந்தது. சித்தருக்கே முதலில் பரிமாற வேண்டும். அதிலொரு சிறிய சிக்கல். சித்தர் புனிதரென்றாலும் அவரிடம் சற்று மது அருந்தும் பழக்கமிருந்தது. அது எல்லோருக்கும் தெரியும், ஆயினும் சித்தரின் நன்மைத்தனங்களுக்கு மத்தியில் எவரும் இந்தப் பலவீனத்தைப் பொருட்படுத்தியது கிடையாது.

சித்தர் விருந்துண்ணுமுன் அவருக்கு அருந்த சற்று மதுபானம் கொடுக்க வேண்டும். அப்படிச் செய்தால் தான் சித்தர் மனநிறைவோடு விருந்தருந்துவார்.

ஆனால் "மது அருந்த வருகிறீர்களா அல்லது கொண்டு வந்து தரவா" என்று எப்படிக் கேட்பது. அப்படி வெளிப்படையாகக் கேட்பது அவரை அவமதிப்பதாகிவிடும். எதையும் சூட்சுமமாக கேட்டு எவரையும் மசியவைப்பதற்கு அவ்வூரிலொருவர் இருந்தார். அவர்தான் சற்றிங் (Chatting) சம்பூரணம் .

விருந்துக்கு சித்தரை அழைக்கும் பொறுப்பு சம்பூரணத்திடம் ஒப்படைக்கப்பட்டது. மகாபாரதத்து துரோணச்சாரியார் ஆனார் நம்ம சற்றிங் சம்பூரணம். தன் குருகுல மாணக்கரிடம் "என்ன தெரிகிறது" என்று கேட்டார் துரோணர்.

நம்ம சற்றிங் சம்பூரணமோ சித்தரிடம் "என்ன வேணும் "என்று தன் style இல் கேட்கத் தயாரானார்.

மரம் தெரிகிறது,கிளை தெரிகிறது, இலை தெரிகிறது,பழம் தெரிகிறது என்று துரோணரின் மற்ற மாணக்கர் தம் கவனத்தை சிதறடிக்க, அருச்சுணன் மட்டும் இலக்குத் தெரிகிறது என்று கருமமே கண்ணாகியது போல் சித்தரையும் தேவையானதில் கண்வைக்க செய்யும் பணியில் முழுமூச்சுடன் இறங்கினார் சம்பூரணத்தார்.

சித்தர் அருகில் சென்றார். பவ்வியமாகப் பணிந்து " சுவாமி .... உணவருந்து முன் கொஞ்சம் இளநீர் அருந்துகிறீர்களா....?" என்று கேட்டார்.

சித்தர் கண்களை மூடி தியானத்திலிருப்பவர் போல் அமர்ந்திருந்தார். சம்பூரணத்தாரின் கேள்விக்கு சற்குரு போல் கையை நிலைப்படுத்தி, கண்ணை மூடிக் கொண்டே "இளநீர் வேண்டாம்" என்றார் சித்தர்.

சிறிது நேரத்தின் பின் சம்பூரணத்தார் சித்தர் அருகில் சென்றார்.

"சுவாமி உணவருந்துமுன் கொஞ்சம் பழரசம் தரவா அருந்திட ....." என்று கேட்டார் சித்தர். கண்கள் மூடியவாறே "பழரசம் வேண்டாம்....... " என்றார் சற்று இறுக்கமாக.

சில நொடிகளின் பின் சித்தர் முன் மீண்டும் தரிசனமானார் சம்பூரணத்தார்.

" சுவாமி அப்படியென்றால் சோடாவுடன் கொஞ்சம் விஸ்கி தரவா...? " என்றார் பவ்வியமாக. மெதுவாகக் கண்களை திறந்தவாறே முகம் மலர்ந்த சித்தர்" சோடா... வேண்டாம்" என்றார் தீர்க்கமாக. விருந்து ஆரம்பமாகியது. சித்தர் மனமும் நிறைந்தது. அவ்வீட்டில் சகல சௌபாக்கியங்களும் நிறைந்தன.

மாயைகள் (உட்பூசல்கள் / பேதங்கள்) களைந்து உறுதியுடன் இலக்கில் ஐக்கியமாகி தியாகங்களால் வாழ்வதே மக்கள் சேவை.

எப்.எக்ஸ்.அன்ரன்

# மற்றவர்களுக்கு உதவும் என் மகள் ராஜீவ்காந்தி கொலைக்கு உடந்தையா?

## மகளின் விடுதலைக்காய் காத்துக்கிடக்கும் ஒரு தாயின் குமுறல்






ஒற்றைப் படுக்கையறை கொண்ட வீட்டில் மகன் குடும்ப த்துடன் வசித்து வருகிறார் நளினியின் அம்மா பத்மா. 80 வயதில் இருப்பதால், கால்மூட்டுகள் வலுவிழந்து போய், நடந்துவந்து கதவைத் திறப்பதற்கே கஷ்டப்படுகிறார். ராஜீவ்காந்தி கொலைக் குற்றச்சாட்டில் ஆயுள் தண்டனை பெற்று சிறையில் இருக்கும் நளினியின் விடுதலையைப் பற்றிப் பேச்சு எடுத்ததும், முகத்தில் இருக்கிற சுருக்கங்கள் எல்லாம் சிரிக்கின்றன பத்மா அம்மாவுக்கு. "ஆமாம் கண்ணு, என் குணவதி வீட்டுக்கு வரப்போறா. நளினிக்கு மத்தவங்களுக்கு உதவி செய்றது ரொம்பப் பிடிக்கும். அதனாலதான் அவளை 'குணவதி'னு சொல்கிறேன். ஆனா, அவளோட அந்தக் குணமே அவளுக்கு எதிரியாகிடுச்சு" என்றவர், தன் கதையையும் தன் மகளின் கதையையும் சொல்லத் தொடங்கினார்.

"எங்க அப்பா ரத்னசபாபதி, காங்கிரஸ் தியாகி. தமிழ் ஆர்வலர். எனக்கும் அப்பாவைப்போலவே பொதுமக்களுக்கு ஏதாவது சேவை செய்யணும்ங்கிற எண் ணம் இருந்துச்சு. அதனாலதான் நேர்ஸிங் படிச்சேன். பிரசவம் பார்க்குற தியேட்டர் நேர்ஸா 35 வருஷம் வேலை பார்த்தேன். எத்தனையோ அம்மாக்களோட, குழந்தைகளோட உசுரைக் காப்பாத்தின எனக்கு, ஒரு படுகொலைக்கு உடந்தையா இருந்தவங்கிற பட்டம் கிடைச்சது கொடுமை.

"எங்க வாழ்க்கையில விதி, என் மகன் பாக்கியநாதன் வழியாக விளையாடிருச்சு. இலங்கையிலிருந்து ஆங்கிலம் கத்துக்கிறதுக்காக சென்னைக்கு வந்த ஸ்ரீகரனை (முருகன்), 'அம்மா, இவன் என் நண்பன். ஆங்கிலம் கத்துக்கிறதுக்காக இங்க வந்திருக்கான். மூணு மாசத்துல திரும்பிப் போயிடுவான். அதுவரை நம்ம வீட்டுல தங்கிக் கட்டுமா?'னு என் முக வாய்க்கட்டையைப் பிடிச்சுக்கிட்டுக் கெஞ்சினான்"

சின்ன வயசுல நான் பார்க்க நிறமா, அழகாயிருப்பேன். அதுவே எனக்கு வினையாகிப்போயிருச்சு. என் கணவர் ஒரு பொலிஸ் அதிகாரி. என்னை அவர் திருமணம் செய்றதுக்கு முன்னாடியே அவருக்குத் திருமணமாகி, குழந்தைகள் எல்லாம் இருந்தாங்க. ஆனா, முதல் மனைவிக்கு மனநலம் சரியில்லாமப் போயிட்டதால, என்னை உருட்டி மிரட்டி கட்டாயத் திருமணம் செஞ்சுகிட்டார். நளினி எனக்குத் தலைமகள். அவளுக்குப் பிறகு ஒரு மகன், ஒரு மகள் பிறந்தாங்க. கணவர்கிட்ட இரு ந்து எனக்குப் பொருளாதார உதவிகள் கிடைக்காததால, ஒவ்வொரு முறை யும் குழந்தைங்க பிறந்த ஒரு மாசத்திலேயே வேலைக்குப் போக வேண்டிய கட்டாயம். அதனால என் மூணு புள்ளைகளுக்குமே பிறந்த ஒரு மாசத்துக்குள்ள தாய்ப்பாலை மறக்கடிச் சிட்டு, வேலையில சேர்ந்துடுவேன். என் நிலைமை எந்தத் தாய்க்குமே வரக்கூடாதுனு அழுவேன். அறிஞ்சவங்க, தெரிஞ்சவங்க, என் கையால் புள்ளை பெத்துக்கிட்டவங்கனு எல்லாருமா சேர்ந்து என் குழந்தைகளை வளர்த்துக்கொடுத்தாங்க. அந்த நல்ல உள்ளங்களாலதான் என் புள்ளைகளை நல்லா படிக்கவைக்க முடிஞ்சது. நளினி எத்திராஜ் கல்லூரியில் ஆங் கில இலக்கியம் முடிச்சா" என்றவரின் கண்களில் மின்னிய துளிகளில், மகளின் நினைவுகள்.

"ஆண் துணையில்லாமதான் என் வீடு இருந்தது. கணவர்மீது இருக்குற கோபத்தையெல்லாம், என்னையும் அறியாம மூத்தவ நளினி மேலதான் காட்டுவேன். பாவம், வளர்ந்த குழந்தை எத்தனை காலம் என் கோபத்தைத் தாங்கிக்கும்? ஒரு கட்டத்துல என்னை வெறுத்து, வீட்டை விட்டு வெளியேறிட்டா. அவளோட ஆங்கிலப் புலமைக்கு நல்ல கம்பனியில வேலை கிடைச்சு, நல்லா இருந்தா. என் கணவரால எனக்குக் கிடைக்காமப்போன மரியாதையான வாழ்க்கை, என் மகள்களுக்குக் கிடைக்கணும்னு ஆசைப்பட்டேன். ஆனால், நளினி வாழ்க்கை..." - பரிதவிக்கிறது அந்தத் தாயின் மனம்.

"எங்க வாழ்க்கையில விதி, என் மகன் பாக்கியநாதன் வழியாக விளை யாடிருச்சு. இலங்கையிலிருந்து ஆங்கிலம் கத்துக்கிறதுக்காக சென்னைக்கு வந்த ஸ்ரீகரனை (முருகன்), 'அம்மா, இவன் என் நண்பன். ஆங்கிலம் கத்துக்கிறதுக்காக இங்க வந்திருக்கான். மூணு மாசத்துல திரும்பிப் போயிடுவான். அதுவரை நம்ம வீட்டுல தங்கிக்கட்டுமா?'னு என் முக வாய்க்கட்டையைப் பிடிச்சுக்கிட்டுக் கெஞ்சினான். புள்ளை கெஞ்சுறா னேனு நானும் சம்மதிச்சேன். ஸ்ரீகரன் வந்தான். என் மகன் மூலமாவே என் மக நளினியின் மனசுல இடம்பிடிச்சு, அவளைத் திருமணம் முடிச்சு, நளினி கருவுற்று இருக்கும் போதுதான் எனக்கு விடயமே தெரியும். எங்க வீட்டுல இடி விழுந்த நேரம் நாட்டி லும் இடி விழுந்தது. ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்டார். என்னை, என் மகள்களை, மகனை, ஸ்ரீகரனை (முருகன்)னு மொத்தக் குடும்பத் தையும் கைது செஞ்சாங்க. நாங்க எட்டு வருடங்கள் சிறையிலிருந்துட்டு விடுதலையானோம். ஆனா, என் மகளுக்குச் சிறைக் கதவுகள் திறக்கவேயில்ல. வெளியே வந்த எங்களுக்கும் வேலை கிடைக்கலை. வீடு கிடைக்கலை. ஒரு தாய்க்குருவி பார்த்துப் பார்த்துக் கட்டுன குருவிக்கூடு மொத்தமா கலைஞ்சு போயிடுச்சும்மா" என்று அழ ஆரம்பித்தவரை, தேற்ற சில நிமிடங்கள் தேவைப்பட்டன.

"எத்தனையோ பேருக்குப் பிரசவம் பார்த்தவ நான். என் மக மாசமா இருந்தப்போ, அவளுக்கு ஒரு சுடு தண்ணி கூட வெச்சுக்கொடுக்க முடியாத பாவியாகிட்டேன். நளினிக்கும், அவ மகளைப் பக்கத்துல இருந்து பார்க்க, வளர்க்கக் கொடுத்து வைக் கலை. நான், என் மக, அறிவின் அம்மா அற்புதம் எல்லோரும் பாவப்பட்ட அம்மாக் கள். எங்க கண்ணீருக்கு இப்போதான் ஒரு விடிவுகாலம் பொறந்திருக்கு.

சிறையில அனுமதி பெற்று, நளினி என்கிட்ட பேசினப்போ, 'இந்த முறை நிச்சயமா விடுதலை கொடுத்துடுவாங்கம்மா'னு நம்பிக்கையா சொன்னா. என் கருப்பையில விளக்கெரியப் போகுது. என் மக விடுதலைக்காகப் போராடின தலைவர்களுக்கும், எழுதின பத்திரிகைகளுக்கும் இந்த நேரத்துல நன்றி சொல்லிக்கிறேன்" என்று தன் நடுங் கும் கைகளைக் குவிக்கிறார் பத்மா அம்மாள்!

ஜூனியர் விகடன்


# இவன் விளையாடினால் டெஸ்ட் போட்டிகளும் பார்க்கலாம்






டெஸ்ட் போட்டிகளிலேயே இந்தக் காட்டு காட்டும் இவர் ஒரு நாள் போட்டிகளில் சும்மா இருப்பாரா. தனது ஆரம்ப காலங்களிலேயே அசால்ட்டாக பேட்டைச் சுழற்றி அவுஸ்திரேலியாவையே கதிகலங்க வைத்தார். 2004 மற்றும் 2006 சம்பின்ஸ் ட்ராபியின் போது அசுர ஆட்டத்தினால் அனைவரையும் திரும்பிப் பார்க்க வைத்த, இவர் கிரிக்கெட்டின் விதிமுறைகள் நுணுக்கங்கள் எல்லாவற்றுக்கும் அப்பாற்பட்டவர்.

ரிவர்ஸ் ஸ்வீப், ஸ்கூப் ஷாட் என்று தனக்குப் பரீட்சயமில்லாததை என்றும் இவர் செயற்படுத்தியதே இல்லை. இவரின் 6.4 அடி உயரத்தைப் போலவே இவரின் ஓட்டங்களும் ஆறு நான்குகளிலேயேதான் இருக்கும். இவரின் மொத்த ரன்களில் 55 சதவிகிதத்துக்கு மேல் பௌண்டரிகளால் மட்டுமே எடுத்தவை. சிங்கிள்ஸ், டபுள்ஸ் என ஓடி ஓடி ஓட்டம் எடுப்பது இவருக்குப் பிடிக்காத செயல்.





வேகமாக வரும் பந்தின் வேகம் குறையாமலும், வேகம் குறைந்து வரும் பந்துகளின் வேகத்தைக் கூட்டியும் அவுட் ஆஃப் ஸ்டேடியம் ஆக்குவது தான் இவரின் ஓல் டைம் அஜெண்டா. இவர் அடித்த சிக்சர்கள் கலரியில் இருக்கும் பல ரசிகர்கள் முகத்தைப் பதம் பார்த்திருக்கிறது. ஒரு நாள் போட்டியில் இரட்டை சதம், ஒரு இன்னிங்க்ஸில் அடிக்கப்பட்ட அதிக சிக்ஸர்கள், இருபது-20 இல் அதிக சிக்ஸர்கள், அதிக செஞ்சுரிகள் என எண்ணிலடங்கா சாதனைகளைச் சுமந்து கொண்டே திரிகிறார்.



சர்வதேசப் போட்டிகள் மட்டுமன்றி உள்நாட்டு கிரிக்கெட்டிலும் கெய்லின் ஆதிக்கம் தொடரத்தான் செய்கிறது. 2008ஆம் ஆண்டு தொடங்கிய ஐ.பி.எல் போட்டியில் 3 வருடங்கள் இருந்த இடம் தெரியாமல் கொல்கத்தா அணியில் இவர் இருக்க, ரசிகர்களின் ஏமாற்றத்துக்கு ஆளானார். அடுத்த அத்தியாயம் ரோயல் சலஞ்சர்ஸ் அணியில் ஆரம்பமானது. கிட்டத்தட்ட 6 ஆண்டுகளில் ஐந்து சதங்களோடு ஐ.பி.எல் தொடரை தனது ராஜாங்கமாக்கிக் கொண்டார். அதிலும், புனே வாரியர்ஸுக்கு எதிரான போட்டியில் இவர் ஆடிய ரண கள ஆட்டம் இன்னும் யூ-டியூப்பில் அதிகம் பார்க்கப்பட்ட வீடியோக்களில் ஒன்றாக இருக்கிறது. இந்திய துணைக் கண்டத்தில் நடக்கும் ஓர் உள்ளூர் ஆட்டத்தை உலக ரசிகர்கள் மத்தியில் டிரெண்டிங்காக்கியது இந்த கெய்ல் ஃபேக்டர்.

ஐ.பி.எல் மட்டுமல்லாது வங்கதேச ப்ரீமியர் லீக்கையும் இவர் விட்டுவைக்கவில்லை. BPL-ல் மொத்தமாக 500 பார்வையாளர்கள் இருந்தாலே ஆச்சர்யம். ஆனால், இவரின் வருகைக்குப் பிறகு கிட்டத்தட்ட 5,000 ரசிகர்களைக் கொண்டு அரங்கமே நிரம்பி வழிந்தது. ராங்க்பூர் ரைடர்ஸுக்கு எதிரான போட்டியில் 18 சிக்ஸர்கள் அடித்து தன் சாதனையைத் தானே முறியடித்தார். இது, தோல்வியையும் குறைந்த பட்ச ஓட்டங்களையும் மட்டுமே கண்ட வங்கதேச உள்ளூர் ரசிகர்களுக்கு, இவரது அதிரடி ஆட்டம் வெகுவாகக் கவர்ந்தது.



வெளியூரிலேயே இப்படியென்றால் உள்ளூரில் கேட்க வேண்டுமா. 2013ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட கரீபியன் ப்ரீமியர் லீக்கில் அதிகபட்ச ரன் குவித்தவர் கெய்ல்தான். ஜமைக்கா, கிட்ஸ் அண்ட் நேவிஸ் என இவரின் டீம்கள் மாறிக் கொண்டே இருந்த போதும் இவரின் யுக்தி ஒன்றுதான்... அது அதிரடி. முக்கியமாக, கெய்ல் போன்ற அதிரடி பட்ஸ்மன்கள், எப்போதும் கிரீஸைவிட்டு இரண்டு அடி இறங்கியே நிற்பார்கள். இது என்றால் கேட்கவே வேண்டாம். இவ்வகை அதிரடி பட்ஸ்மன்கள், மற்ற பட்ஸ்மேன்கள்போல இல்லாமல் பந்தைத் தேடி போய் விளாசும் குணம் கொண்டவர்கள். இதனால் பவுலர்களுக்கு அவ்வளவு எளிதில் கான்ஃபிடன்ஸும் கிடைக்காது. கிரிக்கெட்டை திருவிழாவாகப் பார்க்கும் கரீபிய மக்களிடையே இவரின் அணுகுமுறை கொண்டாட்டம் கலந்ததாக இருக்கும். ஒவ்வொரு வெற்றியின் போதும் சிக்ஸ்பேக் தெரியக் கொண்டாடுவது, தன் ரசிகர்களைக் களத்துக்கு அழைத்து அவர்களோடு கங்கம் ஸ்டைலில் ஆடுவது எனக் கொண்டாடிக் களிப்பார் இந்தக் கரீபியன் கிங்.

எந்தத் தொடருக்குச் சென்றாலும் இவருக்கென ஒரு தனி ரசிகர் கூட்டத்தை தன் வசமாக்கி விடுவார். இவர் ஆட்டத்தைக் காண்பதற்காக மட்டுமே பல ஆயிரம் பேர் கூடுவர்.

கெயில் களத்துக்கு வந்தால் கேலரியில்தான் ஃபீல்டர்களுக்கு இடம் என்பதை தன் ஒவ்வோர் ஆட்டங்களிலும் நிரூபித்துக் கொண்டே இருக்கிறார். களத்தில் மட்டுமன்றி நிஜ வாழ்க்கையிலும் மக்களின் மனதை வென்றவராகவே இருக்கிறார். 2012 ஆம் ஆண்டு ஐ.பி.எல் தொடரில் பெங்களூரில் நடந்த ஒரு போட்டியில், தான் அடித்த சிக்ஸர் ஒரு சிறுமியின் மீது பட்டு காயம் ஏற்பட்டது. மேட்ச் முடிந்த உடன் சிறுமியை நலம் விசாரித்து தனக்கு வழங்கப்பட்ட ஆட்ட நாயகன் விருதையும் அளித்தார்.

தங்கள் நாட்டு வீரர்களுக்கு நிகராக கிறிஸ் கெய்லைக் கொண்டாடும் ரசிகர்கள்தாம் இவரின் ஆட்டத்துக்கான அங்கீகாரம். 2019 உலகக் கோப்பையோடு தன் ஓய்வை அறிவித்திருக்கும் இந்தச் சூறாவளியின் சாதனைகள், கிரிக்கெட் சரித்திரத்தின் தவிர்க்க முடியாத பக்கங்கள்.



# இல்லாமை

அன்பான சங்குநாத வாசக அன்பர்களே! இனிய ஞாயிறு வலம்புரியைக் கையிலை வைச்சுக் கொண்டு ஆரோக்கியமான காலைப் பொழுதை சந்தோசமாக வரவேற்றுக் காற்று வாங்கிக் கொண்டிருக்கிற எல்லாருக்கும் இந்த ஜிம்மிக் குட்டியின் வணக்கங்கள் உரித்தாகட்டும். தூயகாற்று, சூரிய வெளிச்சம், தூய நீர், மருந்தடிக்காத மரக்கறி, நல்ல மொட்டைக் கறுப்பன் அரிசி, பொங்கப் பொங்கக் காய்ச்சின பசுப்பால், பன்னீர்க்கறி, காளான் கறி, விதம் விதமான சிற்றுண்டிகள், போதும் போதும் என்று ஐஸ்கிறீம், நிறுத்தாமல் வேலை செய்யிற மின் விசிறி, நிப்பாட்டாமல் ஓடிக்கொண்டே இருக்கிற குழாய்த்தண்ணீர், விதம் விதமான ஆடையணிகள், படிப்பு வசதிகள், மேலதிக வகுப்புக்கள், பாஸ் புத்தகத்திலை மாதம் மாதம் சேமிப்பு, நோய் எதிர்ப்பு பராமரிப்பு... அம்மாளாச்சி! ஒரு குறையும் இல்லை...

என்ன யோசிக்கிறியள் அண்டைக்குச் சொன்னன்... சக்தி இல்லம் எண்டு- பெரியவரும் நானும் போய் வந்தனாங்கள். ஓமோம்... நாலைஞ்சு வருசத்துக்கு முந்தினமாதிரி இப்ப நினைச்சுப் பாக்கேலாது. எண்ணிச் சிலவழிச்ச காலம் அது...ஆனால் மனம் நிறைவான வாழ்க்கையும் மற்றவர் துயரைத் துடைக்கும் பண்பாடும் நன்றி விசுவாசமும் கீழ்ப்பணிவான ஆன்மீக நடவடிக்கைகளும் கலை கலாசாரமான, கௌரவமான நடை உடை பாவனை ஓமோம் சொல்லி வேலையில்லை...இப்ப...இப்ப என்னடா எண்டால் எங்கடை பெரியவரோடை போட்டு வந்து அவர் சாப்பிடக்கூடப் பசியில்லை எண்டு பச்சைத்தண்ணியைக் குடிச்சுப் போட்டு வெறு வயித்தோடை விட்டத்தைப் பாத்துக் கொண்டு பெருமூச்சு விட்டுத் தவிக்கிறதைப் பார்த்து என்ரை வயிறெல்லாம் எரிஞ்சு கொண்டிருக்குது.


பின்னை என்ன ஒரு குறையும் இல்லை. எல்லாம் நிறைவாக்கிடைச்சு கொட்டிச்சிந்துது. ம்... மனுசப் பிறப்புக்கள் மாதிரியே நடக்குதுகள்.

வெளிக்கதவு திறக்குது. பாலாண்ணை வாறார். பெரியவர் தலையை மட்டும் ஆட்டிப் போட்டு மௌனமாப் படுத்திருக்கிறார். மகன் பின்னாலை நிண்டு பாலாண்ணைக்குக் கண் ஜாடை காட்டுறார். பாலாண்ணை கதிரையில இருக்காமல் திண்ணையிலை பெரியவருக்குக் கிட்டவலை இருக்கிறார். மெல்லக் கதை தொடங்குது.

"ஏன் சேர் சோர்வா இருக்கிறியள். நெத்தியெல்லாம் முத்து முத்தா வேர்க்குது. ஏதாவது உடம்புக்கு..." பெரியவர் சடக்கெண்டு திரும்புறார்...

"உடம்புக்கோ...ஆர் சொன்னது...கம்பு மாதிரி இருக்கிறன். மனம்தான் கொஞ்சம்...நம்பிக் கெட்டுப்போச்சு...எதிர்பார்த்து ஏமாந்து போச்சுது. மலையா நம்பி இருந்தன். ம்... எல்லாம் காலம் செய்த கோலம் தான்...அதுசரி பாலா... இப்பெல்லாம் இந்தப் பிள்ளையள் ஏன் இப்பிடித் தலைகீழா நடக்குதுகள்... வெய்யிலுக்கையும் பனியிலையும் எத்தினை நாள் கண் விழிச்சுப் பாடுபட்டு உழைச்சு நல்ல மனசோடை காசைப் பணத்தைச் சேர்த்து அதை நல்ல சேவைக் கெண்டு அனுப்பேக்கை இந்த இளம் பிள்ளைகள் அதுக்கொரு நன்றி விசுவாசமா அதை மதிக்கக்குடாதே? ஒரு குறையும் இல்லாமல் பாத்துப் பாத்து எல்லாத் தேவைகளையும் உடனுக்குடனே நிறைவேற்றி வைக்கிற மனிதநேயப் பண்புக்கு மரியாதை என்றாலும் குடுக்க வேண்டாமே. ஆராவது வந்து என்ன வேணும் என்ன தேவை எண்டு கேட்டால் சொல்லுறதுக்கு ஒரு தேவையும் இல்லாமல் எல்லாம் நிறைவாக இருக்கு என்ற பதில்தான் உண்மை. ஆனால்...எதற்கெடுத்தாலும் மறுப்பும் முறைப்பும் விதண்டா வாதமும் பிடிவாதமும் தாங்கள் நினைச்ச மாதிரி நடக்கிறதும் கடவுளே இப்பிடியே போனால்...? பெரியவர் ஆயாசத்தோடை திரும்பவும் தண்ணீர் குடிச்சு முகத்தைத் துடைக்கிறார். பாலா கொஞ்சம் கிட்டவா இருக்கிறார்.

"என்ன சேர்...இப்பிடி ஆழமா உணர்வுக்குள்ளை போய்...அமைதியா இருங்கோ சேர். இப்பவும் ஒண்டும் கெட்டுப் போகலை. கண்டிக்காமல் தண்டிக்காமல் அன்பாலை பொறுமையாப் பிள்ளை வளர்க்கலாம் எண்டு நீங்கள்தானே சேர் எங்களுக்குச் சொல்லித் தந்தனீங்கள். பொதுவாப் பிள்ளைகள் இந்த மாதிரி மாறினதுக்குக் காரணம் நிறைய இருக்கு சேர். கல்லாமை நிறைந்த இடங்கலிருந்து நினைச்ச மாதிரி வாழ்ந்த சிலராலை, இல்லாமை காரணமாக வந்து சேர்ந்த பிள்ளைகள் தங்கடை இலக்கை அடைய முடியாமல் இருக்கிறது ஒரு பெரிய சோகம்தான். ஆனாலும் எல்லாம் சம வயதுப் பிள்ளைகள்தானே. அது தொற்றுநோய் மாதிரி பண்பின்மை, நன்றியின்மை, கீழ்ப்படிவின்மை, விசுவாசமின்மை, உண்மையின்மை போன்ற பல இல்லாமைகள் ஆட்சி செலுத்திறதாலை தான் இந்த தலைகீழ்ப்போக்கு தலை விரிச்சாடுது.. அதுவும் களை பிடுங்கி விட்டால் சரிப்படுத்தலாம். யோசிக்காமல் சந்தோசமா இருங்கோ சேர்" பாலாண்ணையும் தண்ணீர் குடிக்கிறார். பெரியவர் நிமிர்ந்து உட்கார்ந்து தலையாட்டிச் சிரிக்கிறார்.



"ம்...ம்...இதுதான் அப்பனுக்குப் பாடம் சொன்ன முருகப்பனின்ரை கதை எண்டு சொல்லுறவை. ம்.. எல்லாம் சரிவரும். சரிவரத்தானே வேணும். பாதை மாறினால் பயணம் தடைப்படும். பயணம் தடைப்பட்டால் இலக்கை அடைய முடியாது தம்பி. ம்... ஆன்மீகச் செயற்பாடுகளை கொஞ்சம் அதிகரிச்சால் தெய்வம் குடிகொள்ள சைத்தான் வெளிச் சென்று மனம் அமைதியடையும். ம்...இதுதான் நல்ல வழி. சரி பாலா நிண்டு சாப்பிட்டுப்போ..." சாய்கிறார். எனக்கும் பசிக்குது. அப்ப போட்டு வாறன்.

**திருமதி.பாரதி கணேஷ்**
**சுன்னாகம்.**

# காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் :அண்ணன் ஒரு கோவில்
இசை : எம்.எஸ்.விஸ்வநாதன்
இயற்றியவர் : கண்ணதாசன்
பாடகர்: ரி.எம்.சௌந்தரராஜன்



மல்லிகை முல்லை பொன் மொழி கிள்ளை
அன்புக்கோர் எல்லை உன்னைப் போல் இல்லை
பொன் வண்ண ரதம் ஏறி இம் மண்ணில் எங்கும் ஓடி
பொன் வண்ண ரதம் ஏறி இம் மண்ணில் எங்கும் ஓடி
நல் அன்பு துணைத் தேடி நான் தருவேன்

மல்லிகை முல்லை பொன் மொழி கிள்ளை

சூடிக் கொடுத்தாள் பாவை படித்தாள்
சுடராக எந்நாளும் தமிழ் வானில் ஜொலித்தாள்
கோதை ஆண்டாள் தமிழை ஆண்டாள்
கோதை ஆண்டாள் தமிழை ஆண்டாள்
கோபாலன் இல்லாமல் கல்யாணம் வேண்டாள்

கன்னித் தமிழ் தேவி மைக் கண்ணன் அவள் ஆவி
தன் காதல் மலர் சூடி மாலையிட்டாள்

தோகை மீனாள் பூவை ஆனாள்
சொக்கேசன் துணையோடு
ஊர்கோலம் போனாள்

தோகை மீனாள் பூவை ஆனாள்
சொக்கேசன் துணையோடு
ஊர்கோலம் போனாள்
மாலை கண்டாள் கோவில் கொண்டாள்
மாணிக்க மூக்குத்தி ஒளி வீச நின்றாள்

தென்றல் தொட்டு ஆட கண் சங்கத் தமிழ் பாட
தன் மக்கள் வெள்ளம் கூட காவல் கொண்டாள்


மல்லிகை முல்லை பொன் மொழி கிள்ளை

மாலை சூடி வாழ்ந்த வேளை
வன வாசம் போனாலும் பிரியாத சீதை

மாலை சூடி வாழ்ந்த வேளை
வன வாசம் போனாலும் பிரியாத சீதை
ராம நாமம் தந்த ராகம்
லவனாக குசனாக உருவான கீதம்

மாமன் என்று சொல்ல
ஒரு அண்ணன் இல்லை அங்கே
அந்த அண்ணன் உண்டு இங்கே அள்ளி வழங்க

மல்லிகை முல்லை பொன் மொழி கிள்ளை
அன்புக்கோர் எல்லை உன்னைப் போல் இல்லை
பொன் வண்ண ரதம் ஏறி இம் மண்ணில் எங்கும் ஓடி
நல் அன்பு துணைத் தேடி நான் தருவேன்



# சாமி 2

## திரைவிமர்சனம்

"ஓல்ட் இஸ் கோல்ட்" என்பார்கள். உண்மைதான். சில பழைய விஷயங்களை திரும்ப தூசி தட்டி மீட்டெடுக்கவே கூடாது. காரணம், சில சமயங்களில் அப்படி தூர்வாரி தூசி தட்டும்போது தங்கம் துருப்பிடித்த தகரமாகிவிடும் வாய்ப்புகளுண்டு - இந்த டயலொக்கிற்கும் இந்த பட விமர்சனத்திற்கும் சாமியின் மேலிருக்கும் ஸ்கொயர் சத்தியமாக தொடர்பில்லை. (தூர்... தூசு... துரு... - அதாவது நாங்க ஹரி படம்பார்த்துட்டு வந்துருக்கோம்.) "சாமி 2"படம் எப்படி?

திருநெல்வேலியைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்த பெருமாள் பிச்சையை போட்டுத்தள்ளியதிலிருந்து தொடங்குகிறது சாமி ஸ்கொயரின் வேட்டை. ஊர் முழுவதும் ஆறுச்சாமிக்கு பயந்து பெருமாள்பிச்சை தலைமறைவாகிவிட்டதாக நினைக்க, உண்மையைக் கண்டறிய தன் இரண்டு அண்ணன்களோடு இலங்கையிலிருந்து வருகிறார் பெருமாள்பிச்சையின் இரண்டாவது மனைவியின் மூன்றாவது மகனான பாபி சிம்ஹா. அவர் பெயர் ராவண பிச்சை. அவரின் மூத்த அண்ணன் ஓ.எ.கே. சுந்தரின் பெயர் மகேந்திர பிச்சை. இரண்டாவது அண்ணனின் பெயர் தேவேந்திர பிச்சை. (படிக்கவே தலை சுத்துதா?... அப்போ இதை எல்லாம் ஹரி ஸ்டைல் பாஸ்ட் பார்வேர்ட்ல பாத்த எங்களுக்கு எப்படி இருக்கும்?)

ஓடியன்ஸ் தவிர மீதி யாருக்குமே தெரிந்திருக்க வாய்ப்பில்லாத பெருமாள் பிச்சை பற்றிய தங்கமலை ரகசியத்தை தரையிறங்கிய இரண்டே நாட்களில் தெரிந்து கொள்கிறார், ராவண பிச்சை. அதன்பின் அவருக்கும் விக்ரமுக்குமான மோதல் சூடுபிடிக்கும் என நினைத்தால் அங்குதான் வெச்சுருக்காங்க ட்விஸ்ட். சடசடவென 28 ஆண்டுகள் பாஸ்ட் பார்வேர்டாகி, 2031இல் நடக்கிறது கதை. அங்கும் ஒரு விக்ரம் இருக்கிறார். ஒரு பாபி சிம்ஹா இருக்கிறார். இவர்கள் இரண்டு பேரும் யார்?.

ஆறுச்சாமிக்கு என்னாச்சு என்பதை சொல்லும் கதைதான் சாமி ஸ்கொயர்.

ஆறுச்சாமியாக விக்ரம். 2031இல்இல்லை, நூறு ஆண்டுகள் கழித்துப் பார்த்தாலும்கூட மனிதர் அப்படியேதான் இருப்பார் போல. "சாமி" முதல் பாகத்தில் பார்த்த அதே விக்ரம். எடையைத் தவிர எதுவும்



மாறவில்லை. நடிப்பும் அதே எனர்ஜி மற்றும் துள்ளலோடு! ஆனால் விக்ரம் "சாமி" முதல் பாகத்திற்குப் பின் நடிப்பில் வெவ்வேறு உயரங்களைத் தொட்டுவிட்டதால் அதே பழைய போர்மெட் கதை அவருக்கேற்ற தீனியைத் தராதது போன்ற தோற்றம் ஏற்படுத்துகிறது.

"இவருக்குப் பதில் இனி இவர்" என்ற மெகாசீரியல் கான்செப்ட்டை சீக்வல் சினிமாக்களுக்கு கொண்டு வந்திருக்கிறார், ஹரி. ஆனால் த்ரிஷாவுக்கு பதில் ஐஸ்வர்யா ராஜேஷ் என்பது பொருத்தமில்லாத சாய்ஸாகவே இருக்கிறது. போதாக்குறைக்கு இயல்பாகவே அழகாக இருக்கும் அவரை மெனக்கெட்டு வெள்ளையாக்க முயன்று தோற்றிருக்கிறார்கள். மற்றொரு ஹீரோயினான கீர்த்தி சுரேஷ் மற்ற ஹரி பட ஹீரோயின்களைப் போலவே வருகிறார்... விழுகிறார்... விரட்டுகிறார்... விரட்டப்படுகிறார்!

காமெடியில் இது சூரிக்கு அடுத்த லெவல் படம். முன்பெல்லாம்கோபம்வருவதுபோல காமெடி செய்தவர், இதில் ஒருபடி மேலேறி கடுப்பைக் கிளப்பும் காமெடிகள் செய்திருக்கிறார். எரிச்சலில் ஆடியன்ஸ் கொடுக்கும் கவுன்ட்டர்களே பலமடங்கு பெட்டர். 1432ஆவது முறையாக சொல்கிறோம் சூரி! உங்களது ஸ்டைலை மாற்றிக்கொள்ளுங்கள் ப்ளீஸ்!

மற்ற அனைவரும் அடக்கி வாசிப்பதால் தனியாகத் தெரிகிறார். பாபி சிம்ஹா. அதே "ஹே... ஏய்... ஏலேய்.."டைப் வில்லன்தான். ஆனாலும் ஆங்காங்கே அசால்ட் சேது தெரிவதால் ரசிக்க முடிகிறது. பிரபு, டெல்லி கணேஷ், ஜான் விஜய், உமா ரியாஸ், ரமேஷ் கண்ணா - படத்தில் இருக்கிறார்கள். அவ்வளவுதான்.

டி.எஸ்.பி இசை - நோ கமென்ட்ஸ். ஒரே கருவியை உருட்டி உருட்டி சவுண்ட் ரெக்கார்டிங் முடித்திருப்பார் போல. பழைய சாமியின் பி.ஜி.எம் வரும்போதெல்லாம் தியேட்டர் அதிர்கிறது. ஆனால், அதில் ஒரு சதவீதம்கூட புது பேக்ரவுண்ட் ஸ்கோரில் இல்லை. பாடல்கள் ரொம்ப சுமார் ரகம். அதைவிடக் கொடுமை அவை இடம்பெற்றிருக்கும் இடங்கள். ப்ரியனும் அவருக்குப் பின்



வெங்கடேஷ் அங்குராஜம் செய்திருக்கும் ஒளிப்பதிவுதான் படத்தின் டெம்போவை தக்க வைக்கிறது.

சூரியைப் போல ஹரியும் அடுத்த லெவல் பயணித்திருக்கிறார். முன்பெல்லாம் சீன்களில்தான் பாஸ்ட் பார்வேர்டு மோடில் இருக்கும். இப்போதெல்லாம் கதையே 28 ஆண்டுகள் பாஸ்ட் பார்வேர்டா கிறது. முதல் பாகத்தையும் இதையும் கனெக்ட் செய்யும் இடங்கள் எல்லாம் நன்றாக ஓர்க் அவுட் ஆகியிருக்கிறது.

சின்னச்சின்ன "அட" ட்விஸ்ட்கள்தான் ஹரி ஸ்பெஷல். ஆனால் இந்தப் படத்தில் அப்படியான காட்சிகள் எதுவுமே இல்லை. முதல்பாதி முழுக்க இழுஇழுவென இழுத்தடிக்கும் திரைக்கதை. இரண்டாம் பாதியில்தான் ஹரியின் சாயல் தெரிகிறது. ஆனால் அதுவும் மிகப்பழைய சாயல். ஒரு கட்டத்தில் இது ஆக்ஷன் படமா, பேய்ப்படமா இல்லை டைம் ட்ராவல் படமா என்ற சந்தேகம் வேறு மூளைக்குள் வட்டமடிக்கிறது.

படம் முழுக்க யாராவது யாரையாவது அறைந்து கொண்டே இருக்கிறார்கள். கணக்குப் பார்த்தால் பட்ஜெட்டை விட எண்ணிக்கையில் தாண்டும் போல. போதாக்குறைக்கு விக்ரமும் "இப்போது கையைத் தூக்கியடிப்பது உங்கள் விக்ரம்" என விடாமல் ஸ்க்ரோல் போடுமளவிற்கு சண்டை போட்டுக்கொண்டே இருக்கிறார். படத்தின் மிகப்பெரிய ஸ்மனஸ் வசனங்கள். "ஐ.ஏ.எஸ்மூளை... ஐ.பி.எஸ் வேலை". நடந்தா ஒருவாரத்துல சாவ, ஓடுனா ஒரே நாள்ல சாவ" என அநியாயத்துக்கு அவுட்டேட்டட் வசனங்கள் காதைக் குடைகின்றன.

ஹரி படத்தில் லாஜிக் பார்ப்பது தெய்வக்குத்தம்தான். ஆனால் இந்தியாவின் ஜனாதிபதி நாட்டின் கடைக்கோடி குடிமகனோடு "ஹாய் டூட், நைட் என்ன டின்னர்?" ரேஞ்சுக்கு சாட் செய்வதெல்லாம் ஹரி படத்தில் மட்டுமே சாத்தியம்! "எங்ககிட்டயும் கிராஃபிக்ஸ் பண்ண ஆளிருக்கு" எனக் காட்டுவதற்காகவே சி.ஜியை அள்ளித் தெளித்திருக்கிறார்கள். ஒய் பாஸ்?

ஓரிடத்தில் "இன்னுமா ஜாதி எல்லாம் பார்க்குறாங்க?" எனக் கேட்கிறார் விக்ரம். அதற்கு சில காட்சிகள் முன்னதாக, "உன்னை நான் இந்த அடையாளத்தோட வளர்த்தேன்" என தொட்டுக் காண்பிக்கிறார் டெல்லி கணேஷ். ஓப்பனிங் காட்சியில் பெண்களை எப்படியெல்லாம் நடத்தவேண்டும் என பாடமெடுக்கிறார் ஹரி. நல்லது! ஆனால் விக்ரம் பளீர் பளீரென கீர்த்தி சுரேஷை அறைவது மட்டும் எப்படி ஹீரோயிசத்தில் வரும்? சாமி முதல் பாகம் வந்தபோது ஹீரோயின்களுக்கு படங்களில்கூட பெரிதாக வாய்ப்பில்லை. ஆனால் இரண்டாவது பாகம் வரும் நேரத்தில் அனுஷ்கா, நயன்தாரா, த்ரிஷா என பெண்கள் ஷீரோக்களாக படம் பண்ணி லாபம் பார்க்கும் வகையில் மார்க்கெட்டில் மாற்றங்கள் வந்துவிட்டன. இன்னும் எத்தனை காலத்திற்கு பொண்ணுங்க இப்படி இருக்கணும், பசங்க அப்படி இருக்கணும் என்ற பாடம்?

"நான் பொறந்த ஊருல எதுவும் இன்னும் மாறல" என ஆதங்கமாக பாட்டும் வசனமும் வைப்பதெல்லாம் சரிதான். அந்த மாற்றத்தை ரசிகர்கள் உங்களிடமும் எதிர்பார்ப்பார்கள்தானே! கதையிலும் கருத்திலும் உங்களிடம் அந்த மாற்றம் எப்போது வரும்?

## தமிழ் அரசியல் கைதிகளின்

# சிறைக்கதவுகள் எப்போது திறக்கும்?

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி தாயகத்தில் மீண்டும் போராட்டங்கள் ஆரம்பித்துள்ளன.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் நல்லாட்சி என்று சொல்லப்படும் இந்த அரசின் ஆட்சிக் காலத்திலும் தமது விடுதலையை வலியுறுத்தி பல முறை உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இப்போது எட்டு நாட்களாகியும் எட்டுப்பேர் எந்தவிதமான பதில்களும் இன்றி உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த 14 ஆம் திகதி அநுராதபுரம் சிறையில் ஆரம்பிக்கப்பட்ட தமிழ் அரசியல் கைதிகளின் போராட்டம் வெலிக்கடைச் சிறைச்சாலைக்கும் பரவி; அதில் இருவரின் உடல் நிலை மோசமாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த எண்ணிக்கை இன்னும் அதிகரிக்க வாய்ப்புள்ளது. ஏனெனில் தமிழ் அரசியல் கைதிகளின் போராட்டத்திற்கு சிங்கள அரசு ஆக்கபூர்வமான நடவடிக்கை களை எடுக்கப்போவதில்லை.

அரசியல்கைதிகளின் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவர பொய் வாக்குறுதிகளை அள்ளிவீசும் அரசியல்வாதிகள் அதன்பின் அது பற்றிச் சிந்திப்பதில்லை.

இதனால் உணவு தவிர்ப்புப் போராட்டம் என்பது தமிழ் அரசியல் கைதிகளின் வாழ்க்கையோடு இரண்டரக் கலந்து விட்டது. மர்ம மரணங்களும் அவ்வாறே!

மகிந்தவை அதிகாரத்திலிருந்து அகற்றினால் எல்லாம் சரியாகி விடும் என்று வாக்கு வேட் டையாடியவர்கள் அடுத்த தேர்தலுக்குத் தயராகி வருவதால் முன்னர் வழங்கிய வாக்குறுதிகளை மறந்து புதிதாக என்ன வாக்குறுதிகளை வழங்கி மக்களை ஏமாற்றலாம் என்பதில் கவனம் செலுத்திவருகின்றனர்.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை மட்டுமின்றி வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் பற்றியும் இதுவரை இந்த அரசும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.






தமிழர் தாயகத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் 500 நாட்களைக் கடந்த நிலையில் பல்வேறு இடங் களில் தொடர் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

இவர்களின் கண்ணீரைப் போக்க உரிய நடவடிக்கை எடுக் கப்படவில்லை என்ற குற்றச் சாட்டை ஆளும் தரப்பும் ஆளும் தரப்பு ஆதரவு வழங்கும் எதிர்த் தரப்பும் மறுதலிக்க முடியாது.

இறுதிக்கட்ட போரின் போது படையினரிடம் சரணடைந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் மற்றும் பொது மக்கள் கொலை செய்யப்பட்டு விட்டனர் என்ற அதிர்ச்சித் தகவலை முன்னாள் அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க வெளியிட்டுள்ளார்.

2009 ஆம் ஆண்டு உள்நாட்டுப் போர்முடிவுக்கு கொண்டுவரப்பட்ட காலப் பகுதியில் மகிந்த அரசில் அமைச்சராக இருந்த எஸ்.பி.திஸாநாயக்க, மைத்திரி ஆட்சிக்காலத்திலும் கடந்த மூன்றாண்டுகள் அமைச்சராக இருந்தவர்.

அத்தகைய அரசியல்வாதியின் கருத்தை சாதாரணமானதாக கருத முடியாது.

அரசிற்கு நெருக்கடியைக் கொடுக்க வேண்டும் என்பதற்காக தற்போது இவ்வாறான சர்ச்சைகளை அவர் தோற்றுவித்தாலும் அவ்வாறு கூறவில்லை என்று மறுத்துரைத்தாலும் அது தொடர்பில் ஆழமாக ஆராய வேண்டும்.

சிங்கள அரசியல்வாதிகளை நம்பி தமிழர்கள் ஏமாற்றமடைவது மைத்திரியின் ஆட்சிக் காலத்தில் ஆரம்பித்ததல்ல. அது காலாதிகாலமாக நீடித்துவரும் நடைமுறை. இதனைத் தான் தமிழ் அரசியல்வாதிகள் இராஜ தந்திர அரசியல் மெச்சுகின்றனர்.

அவர்களின் இராஜதந்திர அரசியல், சர்வதேச நாடுகளை மையப்படுத்தியும் தமது கட்சியை மையப்படுத்திய தாகவுமே தொடர்கின்றது.

தமிழ் மக்களின் நலன்களை மையப்படுத்தி இராஜ தந்திர நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தால் மத்திய அரசிற்கு அழுத்தங்களைக் கொடுத்து பல விடயங்களைச் சாதித்திருக்கலாம். தமிழ் அரசியல்வாதிகளுக்கு இதுவரை கிடைத்த பல அரிய சந்தர்ப்பங்கள் தவறவிடப் பட்டுள்ளன.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை , வரவு - செலவுத் திட்ட வாக்கெடு ப்பு என்பன இதில் பிரதான மானவை.

இந்த இரண்டு சந்தர்ப்பங்களும் இனிக் கிடைக்க வாய்ப்பில்லை.

என்ன செய்வது, தமிழ் அரசியல்வாதிகளின் இராஜதந்திர நடவடிக்கைகள் அவர்களுக்கே புரியாத புதிராக தொடர்வதால் எதனையும் அடைய முடியாத நிலைக்குத் தமிழினம் தள்ளப்பட்டுவிட்டது.

இதன்விளைவாக அநுராதபுரம் சிறைச்சாலையில் கடந்த 14 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட எட்டு தமிழ் அரசியல் கைதிகளின் உணவு தவிர்ப்புப் போராட்டம் இன்றும் தொடர்கின்ற நிலையில் இருவர் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட் டுள்ளனர்.

இந்நிலையில் தமிழ் அரசியல் கைதிகளின் “ குறுகிய கால புனர்வாழ்வின் பின் விடு தலை செய்க” என்ற கோரிக்கையை நிறைவேற்றக்கோரி யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்திற்கு முன்பாக நேற்று முன்தினம் போராட்டம் முன்னெடுக்கப்புட்டது.

நேற்று வவுனியாவில் முன்னெடுக்கப்பட்டது. இன்றும் தமிழர் தாயகத்தில் போராட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு சிங்களப் பல்கலைக்கழக மாணவர்களும் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஆக, தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை இனியும் தாமதப்படுத்த முடியாது என்ற நிலை உருவாகியுள்ளது. தமிழனாகப் பிறந்ததற்காக பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு பல ஆண்டுகளாக எந்தவித வழக்கு விசாரணைகளும் இன்றி சிறைக் கூடங்களில் பல்வேறு சித்திரவதைகளை அனுபவித்து வருபவர்களை மேலும் வதைக்காது உடனடியாக விடுதலை செய்ய வேண்டும்.

தமிழ் மக்களின் வாக்குப் பலத்தால் பெரும்பான்மை நிலையை அடைந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன , சிங் களவர்களுக்கும் படையினர்க்கும் பாதுகாவலராகச் செயற்படு வதைக் கைவிடுமாறு தமிழர்கள் கோரவில்லை.

மாறாக தமிழர்களின் கண்ணீ ரைத் துடைக்குமாறே கோருகின்றனர்.

போர்க்குற்றங்களைப் புரிந்து சர்வதேச மனித உரிமை அமைப் புக்களால் அடையாளப்படுத்தப்பட்டுள்ள இலங்கைப் படையினரைப் பாதுகாக்க ஐ.நா.பாதுகாப்புச் சபைக்குச் சென்றுள்ள தாங்கள், எந்தவிதமான குற்றச்சாட்டுக்களும் இன்றி சிறைக் கூடங்களில் வாடும் தமிழ் இளைஞர்களை கைவிட் டது ஏன்?

தமிழர்களும் சிங்களவர்களும் ஒன்றுமையாக வாழ வேண்டும். இந்த நாட்டில் மீண்டுமொரு யுத்தம் ஏற்படக் கூடாது என்று நல்லிணக்கத்தை வார்த் தைகளால் போதிக்கும் தங்களின் அரசு செயலில் காட்டத் தயங்கு வது ஏன்?

மகிந்த விட்டுச் சென்றதை அவரின் அமைச்சராக இருந்த தாங்கள் தொடர்வதற்கா?

தமிழினம் அழிந்தது போதும் இனியும் அழிக்க யாரும் முற்படாதீர்கள்!

எஸ்.ஆர்.கரன்

## facebook

# குருவி கொடுத்த விதை

ஓர் ஊரில் பெரிய பண்ணையார் ஒருவர் இருந்தார். அந்த ஊரில் இருந்த பெரும்பாலான நிலங்கள் அவருக்குத் தான் சொந்தம்.

அவரிடம் முனியன் என்ற உழவன் வேலை பார்த்து வந்தான். அவனுக்குக் குடிசை ஒன்றும் சிறிதளவு நிலமும் இருந்தன.

பண்ணையாரிடம் வந்த அவன், ஐயா! எல்லா நிலத்திலும் உழுது விதை நட்டு விட்டார்கள். என் நிலம் மட்டும் தான் வெறுமனே உள்ளது. நீங்கள் சிறிது தானியம் தாருங்கள். என் நிலத்திலும் விதைத்து விடுகிறேன் என்றான்.

என் நிலத்திலேயே உழுது பயிரிடு. சொந்தமாகப் பயிரிட வேண்டாம். பண்ணையாராகும் ஆசையை விட்டு விடு. கூலியாளாகவே இரு. அரை வயிற்றுக் கஞ்சியாவது கிடைக்கும் என்று கோபத்துடன் சொன்னார் அவர்.

சோகத்துடன் வீடு திரும்பினான் அவன். தன் மனைவியிடம், நாம் வளம் பெறுவது பண்ணையாருக்குப் பிடிக்கவில்லை. தானியம் தர மறுத்து விட்டார். நீயும் நம் குழந்தைகளும் எப்போதும் போலப் பட்டினி கிடக்க வேண்டியது தான். இதுதான் நம் தலைவிதி என்று வருத்தத்துடன் கூறினான்.

அவர்கள் குடிசையில் குருவி ஒன்று கூடு கட்டியது. இதைப் பார்த்த அவன் மனைவி நம் குடிசை புயலுக்கும் மழைக்கும் எப்பொழுது விழுமோ என்று நாம் அஞ்சுகிறோம். இங்கு வந்து குருவி கூடு கட்டுகிறது பாருங்கள் என்று கணவனிடம் சொன்னாள். பாவம்! வாய் பேச முடியாத உயிர் அது.



நிலைமை புரிந்தவுடன் அதுவே இங்கிருந்து போய்விடும். நாம் அதற்குத் தொல்லை செய்ய வேண்டாம் என்றான் அவன்.

கூட்டில் அந்தக் குருவி நான்கு முட்டைகள் இட்டது. நான்கும் குஞ்சுகளாயின.

திடீரென்று அந்தக் குருவிக் கூட்டுக்குள் ஒரு பாம்பு நுழைந்தது. குருவிக் குஞ்சுகளைப் பிடித்துச் சாப்பிடத் தொடங்கியது. அவை அலறின.

அங்கு வந்த உழவன் பாம்பை அடித்துக் கொன்றான். அதற்குள் அது மூன்று குஞ்சுகளைத்தின்று விட்டது. தரையில் விழுந்த ஒரு குஞ்சு மட்டும் உயிரோடு இருந்தது.

அதை அன்போடு எடுத்தான் அவன். அதன் கால் உடைந்திருப்பதைக் கண்டு அதற்குக் கட்டுப் போட்டான். அதை மீண்டும் கூட்டில் வைத்தான். வேளா வேளைக்கு உணவு தந்தான்.

சில நாட்களில் அந்தக் குருவியின் கால்கள் சரியாயின. அங்கிருந்து அது பறந்து சென்றது. உழவனும் குடும்பத்தினரும் வறுமையில் வாடினார்கள்.

இப்படியே அரை வயிறு சாப்பிட்டு எவ்வளவு காலம் வாழ்வது? நமக்கு விடிவே கிடையாதா? என்றாள் மனைவி.

அப்பொழுது அவர்கள் வீட்டுக் கதவை யாரோ தட்டும் ஓசை கேட்டது. கதவை திறந்தான் அவன்.

அவன் வளர்த்த குருவி வெளியே இருந்தது. அதன் வாயில் ஒரு விதை இருந்தது. அதை அவன் கையில் வைத்தது. இதை உன் வீட்டுத் தோட்டத்தில் நடு. சிறிது நேரத்தில் வருகிறேன் என்று சொல்லி விட்டுப் பறந்தது அது.

மீண்டும் வந்தது அது. இன்னொரு விதையைத் தந்தது. இதை உன் வீட்டின் முன்புறத்தில் நடு என்று சொல்லிவிட்டுப் பறந்தது.

மூன்றாம் முறையாக வந்த அது இன்னொரு விதையைத் தந்தது இதை ஜன்னல் ஓரம் நடு. என் மீது காட்டிய அன்பிற்கு நன்றி என்று சொல்லிவிட்டுப் பறந்தது. குருவி சொன்ன படியே மூன்று விதைகளையும் நட்டான் அவன்.

மறுநாள் காலையில் அங்கே மூன்று பெரிய பூசணிக்காய்கள் காய்த்து இருந்தன. இதைப் பார்த்து வியப்பு அடைந்தான் அவன்.

தோட்டத்தில் இருந்த பூசணிக்காயை வீட்டிற்குள் கொண்டு வந்தான். அதை இரண்டு துண்டாக வெட்டினான்.

(அடுத்தவாரம் தொடரும்)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1511

### ராகுலன்

நாம பணக்காரங்க ஆகிட்டோம்னு நம்புறது ஒரு மனநோய்



இதன் முதல் அறிகுறி லோன்ல கார் வாங்குவது

### வின்ஜக்ஷன்

பெரியவங்களுக்கு சின்னவங்க மரியாதை கொடுக்கணும், எதிர்த்துப் பேசக்கூடாது



அம்மா உங்களைவிட பெரியவங்களாப்பா...

### செல்வக்குமார்

பல நாள் டவுட்



காருக்குப் பின்னால் எதுக்கு இப்படி இருக்குன்னு இப்பத்தான் புரியுது...

### கஜரூபன்

நாங்க ஏழு பேர் ஒரே குடையை பிடிச்சுட்டு நடந்து போனோம்.. யாருமே நனையல, அதெப்படி



அப்பதான் மழையே பெய்யலையே

### சொரூபன்

தீப்பெட்டியின் கடைசித் தீக்குச்சியைப் பற்ற வைப்பதில் உள்ள கவனம்



முதல் தீக்குச்சியிலே வந்துவிட்டால் வாழ்க்கையை எளிதில் ஜெயித்துவிடலாம்

### நிக்ஷன்

சாப்பிட்ட பிறகு ருசியைச் சொல்பவன் விஞ்ஞானி



மோப்பம் பிடித்தே ருசியை சொல்பவன் வில்லேஜ் விஞ்ஞானி

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ்.மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்
சுகமான விடியல்
வலம்புரியின் மருத்துவச்சுடர் 149

# நாருணவு உண்பதால் ஏற்படும் நன்மைகள்...



உயிர்வாழ்வதற்கான அடிப்படைத் தேவைகளில் ஒன்று உணவு.நாம் உள்ளெடுக்கும் உணவு பூரணமானதும், இலகுவில் கிடைக்கக்கூடியதும், எம்வாழ்க்கைச் செலவிற்குள் அடங்கக்கூடியதாகவும் அமைய வேண்டும். உண்ணும் உணவினுள் பல கூறுகள் அடங்குகின்றன.

அவையாவன, காபோவைதரேற்று, புரதம், கொழுப்பு, விற்றமின், கனியுப்பு, நீர் என்பனவாகும். தாவரங்களில் இருந்து பெறப்படும் (காபோவைதரேற் உணவுக்கூறின்) ஒரு பிரிவானது நாருணவு எனப்படும். இது சமிபாட்டுத்தொகுதியினுள் சமிபாடு அடையாது. ஆனால் உடலிற்கு பல நன்மைகளைச் செய்கின்றது. விசேடமாக சமிபாட்டுத் தொகுதியை ஆரோக்கியமாக பேண உதவும்.பொதுவாக இவ்வுணவு மரக்கறிகள், இலைவகைகள், பழங்கள், தானியங்கள், அவரை வகைகளில் அதிகளவு நிறைந்துள்ளது.



**இவற்றில் மூன்று வகையுண்டு.**


01.கரையும் நாருணவு - இது பழங்கள், மரக்கறிகள், தானியங்கள்,அவரை வகைகளில் காணப்படுகின்றது. இது இரைப்பை வெறுமையாக்கப்படும் நிகழ்வை தாமதப்படுத்தும். இதனால் இரைப்பை நிரம்பியது போன்ற உணர்வு ஏற்படும். அத்துடன் குருதியில் குளுக்கோஸ் மட்டத்தை சீராக பேணவும், கொலஸ்ரோல் அளவை குறைக்கவும் உதவுகின்றது.

02. கரையா நாருணவு - இது மரக்கறிகள்,முழுமையான தானியங்கள், வித்துக்கள், பழங்களின் தோல்களில் காணப்படுகின்றது. இது நீரை அகத்துறிஞ்சி உணவை மென்மையாக்கி குடலின் ஒழுங்கான அசைவிற்கு உதவுகின்றது. அத்துடன் நிரம்பிய உணர்வையும் குடலின் ஆரோக்கியத்தையும் பேண உதவுகின்றது.

03. சமிபாடடையா நாருணவு - இது அரிசி, உருளைக்கிழங்கு, வாழைப்பழம் போன்றவற்றில் காணப்படுகின்றது. இது சமிபாடடையாது குடலினுள் இருப்பதால் உடலுக்கு ஆரோக்கியம் தரும் பக்றீரியாக்கள் வாழ்வதற்கு ஊடகமாக அமைந்து குடலின் ஆரோக்கியத்தைப் பேண உதவி புரிகிறது.

அன்றாட உணவில் நாருணவை நாம் உட்கொள்வது அவசியம் ஏனெனில்.

- உடல்நிறையைக் குறைக்கலாம்.நாருணவை அதிகளவு உட்கொள்வதால் கலோரிகூடிய உணவின் உள்ளெடுக்கும் அளவு குறைக்கப்படும். பசியற்ற உணர்வும் இரைப்பை நிரம்பியதுமான உணர்வும் ஏற்படும். இதற்கு உணவில் அதிகளவு மரக்கறிகள்,பழங்கள் தானியங்களை சேர்த்தால் இப்பயனைப் பெறலாம்.
- சலரோகம் வராமலிருக்க முற்பாதுகாப்பாகக் கொள்ளலாம்.அல்லது சலரோகத்தைக் கட்டுப்பாட்டில் வைக்கலாம். அதாவது குருதியிலுள்ள குளுக்கோஸ் மட்டத்தை சீராகப் பேண இவ் நாருணவு உதவுகின்றது.






- உடல் நிறையை சீராகப் பேண உதவுகின்றது. நாருணவானது கொழுப்பு உடலில்படிவதற்கான நிகழ்ச்சிகளை கட்டுப்படுத்துவதனால் உடல்நிறையை எப்போதும் சமனாகவே பேண உதவும்.
- பக்றீரியாக்களில்சில வகை எமக்கு உதவி செய்கின்றது. இவ்வகையான உதவும் பக்றீரியாக்கள் எம் குடலினுள் வாழ்வதற்கு சிறந்த ஊடகமாக நாருணவு அமைகின்றது.
- குடலில் புற்றுநோய் ஏற்படும் சந்தர்ப்பத்தைக் குறைக்கின்றது.குடலின் அசைவை பேணுவதற்கு உதவுகின்றது.
- குடலிலுள்ள உணவினால் ஏற்படும் உடலுக்கு வேண்டாத நச்சுப்பொருட்களை அகற்ற உதவுகின்றது.
- என்பின் ஆரோக்கியத்திற்கு உதவுகின்றது.அதாவது இந்த நாருணவிலுள்ள கல்சியக்கூறு இதற்கு பயன்படுகிறது.
- மலச்சிக்கலைத் தடுக்கின்றது. நாருணவானது உணவு சமிபாடடைந்து இறுதிவிளைவாக வரும் பயனற்ற உணவுக் கூறுகளை மென்மையாகவும் தொகையாகவும் தோற்றமடையச்செய்வதால் மலம் கழிப்பதற்கு இலகுவாக இருக்கும்.
- வாழ்நாள் அதிகம். நோய்களில் இருந்து விலகி இருக்கும் தகவு அதிகமானவர்கள் தம் உணவில் அதிகளவு நாருணவு உண்பவர்களே என்று ஆராய்ச்சிகளும் கூறுகின்றது.
- நாருணவானது கொலஸ்ரோல் எனும் கொழுப்பு உணவிலிருந்து பிரித்துக்கிடைக்கப்பெறும் பதார்த்தம் குருதியில் சேர்வதை குறைக்கும்.ஆற்றல் கொண்டது. இதனால் இருதய நோய்கள் ஏற்படும் வாய்ப்பும் குறைக்கப்படும்.

எம் சூழலில் கிடைக்கும் தானியங்கள், பழங்கள், கீரை வகைகள், மரக்கறிகள் எண்ணில் அடங்காதவை.இவை அனைத்தும் எமக்கு இயற்கை அளித்துள்ள வரங்கள். எம்பிரதேச காலநிலை, மண்வளம், நீர்வளம் அளப்பரியது. எம் வாழ்க்கையை இயற்கையுடன் சேர்ந்து வாழ்ந்து எம் உணவுப் பழக்கத்தில் நாருணவை அதிகளவு சேர்த்தால் அநேகமான தொற்றா நோய்களிலிருந்து விலகியே வாழலாம் என்பது உறுதியே. மரக்கறி உணவே மனிதர்களை மருந்து உட்கொள்ளாது வாழ வழியமைகின்றது. மரக்கறி உணவை அதிகளவு உண்போம்.நோயற்று வாழ்வோம்.

சதானந்தி நந்தகுமாரன்
சிரேஷ்ட போதனாசிரியர்
தாதியக்கல்லூரி



பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (0764685555) என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்